# ஆண்டறிக்கையும், கணக்குகளும்

# 2005

LIBRARY
&
INFORMATION DIVISION
01 NOV 2007
NARA

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி,
அபிவிருத்தி முகாமை
காக்கை தீவு, மட்டக்குளிய
கொழும்பு 15.

NARA-041


# பொது நிருவாகம்

நீரியல் வளங்களின் விடயம் பற்றி ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஒன்றிணைத்தல் ஆகிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள பிரதான தேசிய நிறுவனமாக தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை (நாரா) விளங்குகின்றது. மீன்பிடி திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவை மீள்சீரமைப்பதன் மூலம் 'நாரா' 1981இல் தாபிக்கப்பட்டது. ஒன்றிணைப்பு நடைமுறையின் போது 1981இன் 54ஆம் இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமைச் சட்டம் மற்றும் பின்னர் திருத்தப்பட்ட 1996இன் 32இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமைச் சட்டம் ஆகிய பாராளுமன்றச் சட்டத்தின் கீழ், முழுமையான ஆராய்ச்சி முகாமையாக மட்டக்குளிய, காக்கைதீவில் 'நாரா'வின் தற்போதைய இடப்பரப்பில் நிலவும் மீன் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றிணைக்கப்பட்டது. மீன்பிடி, சமுத்திர வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நியதியாக்க உறுப்பொன்றாக 'நாரா' தொழிற்படுகின்றது.

முகாமையின் பிரதான நோக்கங்களும், தொழிற்பாடுகளும் வருமாறு:

- தேசிய அபிவிருத்தித் திட்டங்களின் அமுலாக்கத்திற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் பிரயோகத்தையும், பயன்படுத்தலையும் உறுதிப்படுத்தல்
- நீரியல் வளங்களின் இனங்காட்டல், மதிப்பீடு, முகாமைத்துவம், மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை நோக்கிய ஆராய்ச்சிச் செயற்பாடுகளை மேம்படுத்தலும், நடத்துதலும்
- வாழும் மற்றும் வாழாத சுரண்டல், முகாமைத்துவம், மற்றும் அபிவிருத்தி ஆகியன தொடர்பிலான விடயங்கள் மீது ஆலோசனை மற்றும் உசாவுகைச் சேவைகளை ஒன்றிணைத்தலும், வழங்குதலும்
- தகவலைச் சேகரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றைப் பொறுப்பேற்றல்
- பயிற்சியை வழங்குதல்

## 1. தாபனரீதியான கட்டமைப்பு



## 2. ஆளுனர் சபை

சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நான்கு (04) நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும், எட்டு (08) உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களையும் ஆளுனர் சபை அடக்குகின்றது. 2004 ஜுன் 15இலிருந்து 2005 செப்ரெம்பர் 1 வரை பின்வருவோர் சேவையாற்றினர்.

**நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

1. கலாநிதி கே.கே.சி.கே.பெரேரா (தலைவர்)
2. பேராசிரியர் கே.தஹநாயக்க
3. கலாநிதி சி.கே.எம்.தெஹெரகொட
4. கலாநிதி (திருமதி) பி.ஆர்.ரி.குமாரனதுங்க

**உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 5. | திரு.ஈ.ஜினதாஸ | - மீன்பிடி அமைச்சுச் செயலாளர் |
| 6. | திரு.ஏ.குமாரசிறி | - நிதியமைச்சு செயலாளருக்கான பிரதிநிதி |
| 7. | திரு.கே.வி.பி.ரஞ்ஜித் டீ சில்வா | - துறைமுக, கப்பற்தொழில் அமைச்சுப் பிரதிநிதி |
| 8. | ரியர் அட்மிரல் எல்.டி.தர்மப்பிரிய | - கடற்படைத் தளபதியின் பிரதிநிதி |
| 9. | திரு.பீ.ஜே.எப்.மெண்டிஸ் | - நில அளவையாளர் நாயகம் |
| 10. | செல்வி ஏ.எம்.என்.விஜேரத்ன | - விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கான பிரதிநிதி |
| 11. | திரு.ஜி.பியசேன | - மீன்பிடித்தொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் |
| 12. | கலாநிதி (திருமதி) எஸ்.சி.ஜயமன்ன (மார்ச் இறுதி வரை) | - பணிப்பாளர் நாயகம்/'நாரா' |
| 13. | கலாநிதி கே.டி.பி.ஹேமலால் | - பணிப்பாளர் நாயகம்/'நாரா' |

ஆளுனர் சபையானது செப்ரெம்பர் 01இலிருந்து டிசம்பர் 20 வரை பின்வரும் ஐந்து (05) நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுடனும், எட்டு (08) உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களுடனும் மீளமைக்கப்பட்டது.

**நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

1. திரு.அலோய் டபிள்யு.பெர்னாண்டோ (தலைவர்)
2. திரு.சுரேன் பெர்னாண்டோ
3. திரு.டபிள்யு.ஜோன் மார்கஸ் பெர்னாண்டோ
4. திரு.மொகமட் நிஸார் மொகமட் நஸாமி
5. கலாநிதி காமினி வீரசிங்க

**உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 6. | திரு.ஈ.ஜினதாஸ | - மீன்பிடி அமைச்சுச் செயலாளர் |
| 7. | திரு.ஏ.குமாரசிறி | - நிதியமைச்சு செயலாளருக்கான பிரதிநிதி |
| 8. | திரு.கே.வி.பி.ரஞ்ஜித் டீ சில்வா | - துறைமுக கப்பற்தொழில் அமைச்சுப் பிரதிநிதி |
| 9. | ரியர் அட்மிரல் எல்.டி.தர்மப்பிரிய | - கடற்படைத் தளபதியின் பிரதிநிதி |
| 10. | திரு.பீ.ஜே.எப்.மெண்டிஸ் | - நில அளவையாளர் நாயகம் |
| 11. | செல்வி ஏ.எம்.என்.விஜேரத்ன | - விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கான பிரதிநிதி |
| 12. | திரு.ஜி.பியசேன | - மீன்பிடித்தொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் |
| 13. | கலாநிதி (திருமதி) சி.அமரசிறி | - பணிப்பாளர் நாயகம்/'நாரா' |

ஆளுனர் சபையானது டிசம்பர் 20இலிருந்து பின்வரும் ஏழு (07) நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுடனும், எட்டு (08) உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களுடனும் மீளமைக்கப்பட்டது.

**நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

1. திரு.கே.ஹப்புதந்திரி (தலைவர்)
2. திரு.ஜே.என்.லியனகே

3. கலாநிதி (திருமதி) பி.எஸ்.ஆர்.அமரதுங்க
4. திரு.எம்.என்.டி.பீரிஸ்
5. கலாநிதி எஸ்.எச்.கே.சமரவீர
6. திரு.ஆர்.டி.டி.பிரதீப் சஞ்ஜீவ
7. திரு.பிரியந்த ரோஷான் மொரபிட்டிய

**உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 8. | திரு.ஏ.ஹெட்டிஆரச்சி | - மீன்பிடி அமைச்சுச் செயலாளர் |
| 9. | திரு.ஏ.குமாரசிறி | - நிதியமைச்சு செயலாளருக்கான பிரதிநிதி |
| 10. | திரு.கே.வி.பி.ரஞ்ஜித் டீ சில்வா | - துறைமுக கப்பற்தொழில் அமைச்சுப் பிரதிநிதி |
| 11. | ரியர் அட்மிரல் ரி.எஸ்.ஜி.சமரசிங்க | - கடற்படைத் தளபதியின் பிரதிநிதி |
| 12. | திரு.பீ.ஜே.எப்.மென்டிஸ் | - நில அளவையாளர் நாயகம் |
| 13. | செல்வி ஏ.எம்.என்.விஜேரத்ன | - விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுச் செயலாளருக்கான பிரதிநிதி |
| 14. | திரு.ஜி.பியசேன | - மீன்பிடித்தொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் |
| 15. | திரு.யோஷான் சத்தசேன | - பணிப்பாளர் நாயகம் /'நாரா' |

## 3. தாபனம்

செப்ரெம்பர் 01 வரை தலைவராக கலாநிதி கே.கே.சி.கே.பெரேரா தொடர்ந்ததுடன், செப்ரெம்பர் 01இலிருந்து டிசம்பர் 20 வரை தலைவராக திரு.அலோய் டபிள்யு பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார். 2005 டிசம்பர் 21இலிருந்து தலைவராக திரு.கே.ஹப்புதந்திரி நியமிக்கப்பட்டார். 2005 மே 02 வரை பணிப்பாளர் நாயகமாக கலாநிதி (திருமதி) சேபாலிகா ஜயமான்ன பணியாற்றினார். அவரை கலாநிதி கே.டி.பி.ஹேமலால் (செப்ரெம்பர் 01 வரை) பின்தொடர்ந்தார். பணிப்பாளர் நாயகமாக கலாநிதி (திருமதி) சி.அமரசிறி நியமிக்கப்பட்டதுடன் அவர் டிசம்பர் 20 வரை பணியைத் தொடர்ந்தார். 2005 டிசம்பர் 21இலிருந்து பணிப்பாளர் நாயகமாக திரு.யோஷான் சத்தசேன தொடர்ந்தும் பணியாற்றினார். முகவராண்மையின் கடப்பாட்டிலான பணிகளை நிறைவேற்றுமுகமாக பின்வரும் பதினொரு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளை அடக்குவதற்காக தாபனம் வடிவமைக்கப்பட்டது: * சூழல் ஆய்வுகள், மீன்பிடித் தொழில்நுட்பம், நீர்நிலையவியல் அலுவலகம், தகவல் தொழில்நுட்பப் பிரிவு, உள்ளூர் நீரியல் வளங்கள், நீரியல் விருத்தி, நூலக, தகவல், கடல்சார் உயிரியல் வளங்கள், சமுத்திரவியல், சமூக - பொருளாதார, மற்றும் சந்தை ஆராய்ச்சி, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம். இவற்றுக்கு நிருவாகம், சேவைகள் மற்றும் தொழிற்பாடுகள் மற்றும் நிதி ஆகிய பிரிவுகளினால் ஆதரவளிக்கப்பட்டன.

## 4. பிரிவுகளின் தலைவர்கள்

ஆண்டின் போது பிரிவுகளின் தலைவர்களாகப் பின்வரும் உத்தியோகத்தர்கள் பணியாற்றினார்கள்.

**ஆராய்ச்சிப் பிரிவுகள்**

| | |
|---|---|
| திரு.என்.சுரேஷ்குமார் | - சூழல் ஆய்வுகள் |
| திரு.என்.பீ.பி.புண்ணியதேவ | - மீன்பிடி தொழில்நுட்பம் |
| திரு.எம்.ஏ.ஆரியவன்ச | - நீர்நிலையவியல் அலுவலகம் |
| திரு.எ.பீ.எ.கே.குணரத்ன | - தகவல் தொழில்நுட்பம் |
| செல்வி எம்.எச்.எஸ்.ஆரியரத்ன | - உள்ளூர் நீரியல் வளங்கள் மற்றும், நீரியல்விருத்தி |
| செல்வி வி.ரூபசிங்க (பதில்) | - நூலகம் மற்றும் தகவல் |
| கலாநிதி செல்வி சி.அமரசிறி | - கடல்வாழ் உயிரினங்கள் வளங்கள் |
| கலாநிதி கே.அருளானந்தன் | - சமுத்திரவியல் |
| கலாநிதி ஆர்.எதிரிசிங்க | - அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் |
| கலாநிதி ஆர்.மல்தெனிய | - சமூக-பொருளாதார, மற்றும் சந்தை ஆராய்ச்சி |

**ஆதரவுச் சேவைகள் பிரிவுகள்**

| | |
|---|---|
| திரு.யு.எ.சிறிசேன/திரு.சுமேதா ஜயசிங்க | - நிருவாகம் |
| திரு.எம்.டி.சேனாரத்தன | - நிதி |
| திரு.ஜி.ஒ.எல்.பி.பண்டார 31.03.2006 வரை | - சேவைகள், மற்றும் தொழிற்பாடுகள் |

## 5. ஆட்சேர்ப்புக்கள் - 2005

| இல. | பெயர் மற்றும் பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| 01. | திரு.சுமேதா ஜயசிங்க (நிருவாக உத்தியோகத்தர்) | 2005.03.01 |
| 02. | திரு.ஜி.ஓ.எல்.பி.பண்டார (பராமரிப்பு எந்திரவியலாளர், ஒப்பந்த அடிப்படை) | 2005.03.01 |
| 03. | திரு.ஆனந்த அமரசிங்க (கொள்வனவு உத்தியோகத்தர், விநியோக உத்தியோகத்தர்) | 2005.04.07 |
| 04. | செல்வி ஆர்.எல்.டி.லியனகே (ஆய்வுகூட உதவியாளர்) | 2005.07.01 |
| 05. | திரு.எஸ்.முரளிதரன் (சுத்தப்படுத்தல் தொழிலாளி) | 2005.07.01 |
| 06. | திரு.கே.டபிள்யு.இந்திகா (ஆய்வுகூட உதவியாளர்) | 2005.07.01 |
| 07. | செல்வி எச்.எம்.சி.ஹேமமாலி (கணக்கியல் எழுதுவினைஞர்) | 2005.07.01 |
| 08. | திருமதி சி.எச்.ஜயசிங்க (பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட உதவியாளர் - ஒப்பந்த அடிப்படை) | 2005.09.26 |
| 09. | திரு.எஸ்.சசிதரன் (திட்ட உதவியாளர்/GIS/RS) | 2005.10.03 |
| 10. | திரு.டபிள்யு.டி.என்.விக்ரமஆரச்சி (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 2005.10.03 |
| 11. | செல்வி பி.டபிள்யு.எஸ்.என்.ஜயரத்ன (கருத்திட்ட உதவியாளர்/தரவு அடிப்படை) | 2005.10.03 |
| 12. | திருமதி இ.எம்.எம்.செனிவிரத்ன (கருத்திட்ட உதவியாளர்/முகாமைத்துவம்) | 2005.10.03 |
| 13. | திருமதி டி.என்.எ.ரன்மதுகல (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 2005.10.03 |
| 14. | திரு.வை.வை.கே.டீ சில்வா (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 2005.10.03 |
| 15. | திரு.கே.எஸ்.டி.சிந்தக்க (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 2005.10.03 |
| 16. | செல்வி டபிள்யு.என்.சி.பிரியதர்ஷனி (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 2005.10.03 |
| 17. | திரு.டி.டி.ஸி.எல்.தஹநாயக்க (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 2005.10.03 |
| 18. | திரு.எ.எ.டி.அமரதுங்க (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 2005.10.03 |
| 19. | திரு.என்.ஐ.கலசிங்க (திட்ட உதவியாளர்/முகாமைத்துவம்) | 2005.10.03 |
| 20. | திருமதி வை.எம்.ஆர்.என்.குமாரி (நிலநீரியல் அளவையாளர்) | 2005.10.03 |
| 21. | திரு.யோஷான் சத்தசேன (பணிப்பாளர் நாயகம் - ஒப்பந்த அடிப்படை) | 2005.12.19 |
| 22. | திரு.கே.ஹபுதந்திரி (தலைவர் - மாற்றுப்பதவி அமர்த்துகை) | 2005.12.27 |

## 6. சேவையிலிருந்து வெளியேறியோர் - 2005

| பெயர் | பதவிப்பெயர் | செயற்படும் திகதி | குறிப்புகள் |
|---|---|---|---|
| திரு.வை.சமரரத்ன | கணக்காளர் | 2005.01.10 | காலமானார் |
| திரு.ஆர்.ஜி.குணதாச | களஞ்சிய பொறுப்பாளர் | 2005.02.15 | இளைப்பாறல் |
| திரு.ஆனந்த அமரசிங்க | ஆராய்ச்சி உதவியாளர் | 2005.04.07 | இராஜினாமா |
| திரு.என்.எச்.தசநாயக்க | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 2005.04.04 | பதவி விலகல் |
| செல்வி எம்.பட்டபெரும | தொழிலாளி | 2005.06.01 | இளைப்பாறல் |
| செல்வி வசந்தி சமரசேகர | ஒப்பந்த எழுதுவினைஞர் | 2005.06.01 | இராஜினாமா |
| திருமதி எஸ்.எஸ்.ஜயசேகர | ஆராய்ச்சி உதவியாளர் | 2005.06.03 | இராஜினாமா |
| திரு.கே.எச்.ரசிக சந்திமால் | சுற்றுலா விடுதி உதவியாளர் | 2005.07.01 | பதவி விலகல் |
| திரு.யு.எ.சிறிசேன | நிருவாக உத்தியோகத்தர் | 2005.07.01 | இளைப்பாறல் |
| திருமதி சி.எச்.ஜயசிங்க | பணிப்பாளர் நாயகம் | 2005.07.31 | இளைப்பாறல் |
| திரு.கே.ஜி.பி.விக்ரமசிங்க | மாதிரிப்படுத்துனர் | 2005.10.18 | பதவி விலகல் |
| திரு.டபிள்யு.எச்.ஆர்.கே.தேவிந்த | நிலநீரியல் அளவையாளர் | 2005.11.01 | இராஜினாமா |
| திரு.வை.வை.கே.டீ சில்வா | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 2005.12.31 | இராஜினாமா |
| திரு.எம்.வி.பிரேமசிறி | சாரதி | 2005.12.09 | இளைப்பாறல் |
| திரு.ஓ.ஆர்.பீ.ஈ.டபிள்யு.டி.ஏ.ஒவிற்றபன | நிலநீரியல் அளவையாளர் | | இராஜினாமா |
| திரு.ஏ.எம்.கீர்த்திசிங்க | நிலநீரியல் அளவையாளர் | | பதவி விலகல் |

## 7. 2005இற்குள் பதவி உயர்வுகள்

| பெயர் | பதவியுயர்வுத் திகதி | பதவியுயர்த்தப்பட்ட தரம் |
|---|---|---|
| திரு. யு.என்.எம்.பெர்னாண்டோ, சாரதி | 09.03.2005 | VI |
| திரு.டி.எம்.பிரேமரத்ன, சாரதி | 28.09.2005 | VII |
| திரு.தரங்க புத்திக்க, எழுதுவினைஞர் | 20.06.2005 | VII |
| திரு.ஜி.ஆர்.எஸ்.ரூபிக்க, ஆராய்ச்சி உதவியாளர் | 22.06.2005 | VI |
| செல்வி ரி.எஸ்.தஹநாயக்க, ஆ/உ | 22.06.2005 | VI |

| | | |
|---|---|---|
| செல்வி ஆர்.எம்.எஸ். டீ சில்வா, W.P.O. | 26.08.2005 | VI |
| திரு.அருண பிரபாத், மாதிரிப்படுத்துனர் | 31.08.2005 | VI |
| திரு.டபிள்யு.டி.திலகரத்ன, மின்னியலாளர் | 01.09.2005 | VII |
| திரு.கே.ஜி.கே.ருவன், ஆ/உ | 06.12.2005 | VI |
| திரு.ஜே.பி.லொக்குகமகே, ஆ/உ | 06.12.2005 | VI |
| திரு.டபிள்யு.டபிள்யு.யு.போத்தேஜு, தொழிலாளி | 22.11.2005 (26.08.2005 அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது) | IX |

## 8. 31.12.2005இல் உள்ளவாறு வெற்றிடங்கள்

| **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|
| ஆளுனர் சபை செயலாளர்/சட்ட உத்தியோகத்தர் | 01 |
| கணக்காளர் | 01 |
| திறனிலான தொழிலாளி | 01 |
| களஞ்சியப் பொறுப்பாளர் | 01 |
| கணக்காய்வு எழுதுவினைஞர் | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | 01 |
| பிரதம நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| நிருவாக உதவியாளர் | 01 |
| பொது எழுதுவினைஞர் | 01 |
| சொற்பதித்தல் இயக்குனர் | 03 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 11 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 |
| மாதிரிப்படுத்துனர் | 01 |
| ஆய்வுகூட உதவியாளர் | 01 |
| தொழிலாளி | 07 |
| வேலை எழுதுவினைஞர் | 01 |
| கருவிகள் தொழில்நுட்பவியலாளர் | 01 |
| மேசன் | 01 |
| காய்ச்சியொட்டுனர் | 01 |
| மின்னியலாளர் | 01 |
| சுத்திகரிப்புத் தொழிலாளி | 02 |
| பராமரிப்பாளர் | 01 |
| சாரதி | 05 |
| பொருளியலளார் | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் (சமூகவியல்) | 01 |
| சுற்றுலா விடுதி உதவி காப்பாளர் | 01 |
| கப்பற்றள கையாள் | 02 |
| படகுப் பொறுப்பாளர் | 01 |
| ERA | 02 |
| சமையலாள்/'சமுத்ரமறு' | 01 |
| கப்டன்/தலைவர் | 01 |
| பிரதம உத்தியோகத்தர் | 01 |
| உதவிப் பணிப்பாள்/நிலநீரியல் வரைவாளர் | 01 |
| சிரேஷ்ட நிலநீரியல் அளவையாளர் | 01 |
| நிலநீரியல் அளவையாளர் | 04 |
| நில அளவையாளர் | 02 |
| பிரதம படம்வரை கலைஞர் | 01 |
| பிரதி பிரதம படம்வரை கலைஞர் | 01 |
| படம்வரை கலைஞர் | 01 |
| முறைமை பகுப்பாய்வாளா | 01 |
| படவரைஞர் | 01 |
| முறைமை பகுப்பாய்வாளர்/திட்டமிடலாளர் | 02 |
| EDP உதவியாளர் | 01 |
| மின்னியல் எந்திரவியலாளர் | 01 |

| | |
|---|---|
| தொழில்நுட்ப உதவியாளர் (பொறிமுறை) | 01 |
| தலைவர் (சயூரி) | 01 |
| கப்பற்தள கையாள் | 01 |
| காவலாளி | 03 |
| மேலதிக ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஊழியர்கோப்பு (பட்டதாரி பயிற்சியாளர்கள்) | 05 |

## 9. நீதிமன்ற வழக்குகளும், ஒழுக்காற்று விசாரணைகளும்

### 9.1 தொழில் மன்று வழக்குகள்

| | | |
|---|---|---|
| ஜே.கே.பாலபட்டபெந்தி | - | நடந்து கொண்டிருக்கிறது |

### 9.2 மாவட்ட மன்ற வழக்குகள்

| | | |
|---|---|---|
| 1. கடோல்கெலவத்த வழக்கு இல.6137/L | - | நடந்து கொண்டிருக்கிறது |

### 9.3 உயர் நீதிமன்ற வழக்குகள்

| | | |
|---|---|---|
| டி.எ.கருணாசேன | - | நடந்து கொண்டிருக்கிறது |

### 9.4 விசாரணைகள்

| | | |
|---|---|---|
| திரு.ஓ.கே.பி.நந்தசேன | - | விசாரணை முடிவடைந்துள்ளதுடன், ஆளுனர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு 06.12.04இலிருந்து செயற்படத்தக்கதாக திரு.ஓ.கே.பி.நந்தசேன மீள்நியமிக்கப்பட்டார். விசாரணையை மீள நடத்துமாறு மேன்முறையொன்றை திரு.ஓ.கே.பி.நந்தசேன செய்துள்ளார். |
| திரு.ஜே.பீ.ஏ.மாகம்மன மற்றும் ஜி.லமாஹேவா | | விசாரணை நடந்து கொண்டிருக்கிறது |
| கலாநிதி ஆர்.ஆர்.பி.மல்தெனிய, எச்.எம்.வசந்தபண்டார, டபிள்யு.ஜி.அனுர மற்றும் நீல் சமந்த குணதிலக்க | - | விசாரணை நடந்து கொண்டிருக்கிறது |
| டி.ஏ.கருணாசேன | - | விசாரணை நடந்து கொண்டிருக்கிறது |

## 10. நலன்புரி செயற்பாடுகள்

பதவியணியினர் போக்குவரத்து வசதிகள் தொடர்கின்றன.

## 11. 'நாரா' பதவியணியினரினால் பங்கெடுக்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி/கருத்தரங்குகள்/ செயல்அமர்வுகள் மற்றும் கூட்டங்கள்

| பெயரும், பதவிப் பெயரும் | பயிற்சி/செயல்அமர்வுகள்/ கருத்தரங்குகள் | நிறுவனம் |
|---|---|---|
| திருமதி எல்.ஜி.என்.பெரேரா, கணக்காளர் | சீவியத்தொழில்புரிபவர்களுக்கான ஆங்கிலத்தில் டிப்ளோமா | SLIDA |
| செல்வி எம்.எம்.அளுவத்துகொட தொலைபேசி இயக்குனர்/வரவேற்பாளர் | தொடர்பாடலுக்கு ஆங்கிலத்தில் சான்றுப்பத்திர பாடநெறி | NIBM |
| திரு.என்.சுரேஷ்குமார்/ஆ.உ. திரு.எஸ்.எ.எம்.அஸ்மி /ஆ.உ. | அழிவு முகாமைத்துவம் மீதான கருத்தரங்கு | பெண்கள் அதிகாரமளிப்பு, சமூக நலன்புரி அமைச்சு |
| கலாநிதி சி.அமரசிறி/ஆ.உ. | சர்வதேசக் கொள்வனவு | தேசிய கொள்வனவு முகவராண்மை |

| | | |
|---|---|---|
| திரு.ஜி.ஓ.எல்.பீ.பண்டார/ME | கேள்வி மதிப்பாய்வு | - அதே - |
| செல்வி டி.ஹேரத்/ஆ.உ.<br>செல்வி பி.பி.எம்.ஹீனட்டிகல/ஆ.உ. | BINASIA - இலங்கை தேசிய செயலமர்வு | NSF |
| திரு.என்.சுரேஷ்குமார்/ஆ.உ.<br>திரு.டி.ஏ.அத்துகோரள/ஆ.உ | விஞ்ஞான தரவு படியமைத்தல், மதிப்பாய்வு மீதான செயலமர்வு | களனி பல்கலைக்கழகம் |
| கலாநிதி சம்பா அமரசிறி/ஆ.உ.<br>கலாநிதி எஸ்.சி.ஜயமன்ன/ஆ.உ.<br>கலாநிதி கே.அருளானந்தன்/ஆ.உ.<br>திரு.ஏ.பீ.ஏ.கே.குணரத்ன/IO<br>செல்வி ஏ.எஸ்.எல்.ஈ.கொரயா/ஆ.உ. | தோதான ஒழுக்காற்று முகாமைத்துவம் ஊடாக மனித மூலவளங்களை முன்னேற்றுதல் | ஒழுக்காற்று முகாமைத்துவத்தில் ஆய்வுகளுக்கான நிலையம் |
| செல்வி ஏ.டி.டபிள்யு.ஆர்.ராஜபக்ஷ/ஆ.உ<br>செல்வி எம்.எச்.எஸ்.ஆரியரத்ன/ஆ.உ | பேணல், முகாமைத்துவம் மீதான குறுகிய பாடநெறி - இலங்கையில் நீர்த்தேக்கங்கள் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி கே.கபில சி.கே.பெரேரா/தலைவர்<br>கலாநிதி கே.டி.பி.ஹேமலால்/ப.நா<br>கலாநிதி சம்பா அமரசிறி/ஆ.உ.<br>திரு.என்.சுரேஷ்குமார்/ஆ.உ. | கூட்டு திட்டமிடல் நடைமுறை மீதான செயலமர்வு | F&AR அமைச்சு |
| திரு.எம்.டி.சேனாரத்ன/உதவி கணக்காளர் | நிகழ்ச்சித் திட்டமிடல் சாராதோருக்கு தரவுத் தள முகாமைத்துவம் | NIBM |
| செல்வி கே.ஜி.எல்.ஐராங்கனி/கணக்குப் பதிவியலாளர் | அடிப்படை கணக்கீடு | INGAF |
| செலவி வி.கே.ஜி.ஜயசேன/எழுதுவினைஞர் | கணனிகளுக்கான அறிமுகம் மீதான பயிற்சி | INGAF |
| திரு.என்.பீ.பி.புண்யதேவ/ஆ.உ.<br>திரு.எச்.பீ.ஜயசிறி/ஆ.உ.<br>திரு.எஸ்.யு.பி.ஜினதாச/ஆ.உ.<br>செல்வி எம்.ஜி.ஐ.எஸ்.பராக்கிரம/ஆ.உ<br>செல்வி பி.பி.எம்.ஹீனட்டிகல/ஆ.உ.<br>திரு.ஏ.அத்துகோரள/ஆ.உ.<br>திரு.பி.ஏ.டி.ஏ.குமார/ஆ.உ.<br>திரு.கே.டி.சின்தக்க/ஆ.உ. | ஆராய்ச்சி ஆலோசனைகளை எழுதுதல் ஆராய்ச்சியை நடத்துதல், வெளியிடுதல் மீதான செயலமர்வு | இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் |
| செல்வி எம்.கே.சந்திராணி/WPO<br>செல்வி கே.சி. டீ சில்வா/WPO | புதிய தாபனரீதியான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு அலுவலக பணியாளரை முன்னேற்றுதல் | IITM (Pvt) Ltd. |
| செல்வி எல்.ஜி.என்.பெரேரா/கணக்காளர் | ஒழுக்காற்று நடைமுறைகள் மீதான பயிற்சி | INGAF |
| திரு.எச்.எம்.பிரியந்த/உள்ளக கணக்காய்வாளர் | நிகழ்ச்சித் திட்டமிடல் சாராதோருக்கு தரவுத் தள முகாமைத்துவம் | NIBM |
| கலாநிதி கே.டி.பி.ஹேமலால்/பணிப்பாளர் நாயகம் | தோதான ஒழுக்காற்று முகாமைத்துவம் ஊடாக மனித மூலவளங்களை முன்னேற்றுதல் | ஒழுக்காற்று முகாமைத்துவத்தில் ஆய்வுகளுக்கான நிலையம் |
| செல்வி வி.கே.ஜி.ஜயசேன/எழுதுவினைஞர் | வின்டோஸ் அடிப்படையிலான பிரயோக பொதிகள் மீதான பயிற்சி | INGAF |

| | | |
|---|---|---|
| திரு.எஸ்.ஜயசிங்க /நிருவாக உத்தியோகத்தர்<br>திரு.ஜி.ஒ.எல்.பி.பண்டார/M/E | செயன்முறை ஜப்பானிய ஐந்து S முறை மீதான பயிற்சி | INGAF |

## 12. வெளிநாட்டு பிரயாணங்கள் - 2005

| காலம் | நாடு | நோக்கம் | நிதியங்கள் | செலவு | பெயர் |
|---|---|---|---|---|---|
| 03-04.01.2005 | இந்தியா | சேது சமுத்திர கருத்திட்டம் மீதான நிபுணர் குழு உசாவுகை | வெளிநாட்டு அலுவல்கள் இலங்கை அரசாங்கம் | - | கலாநிதி கே.கபில சி.கே.பெரேர jiyth/;நாரா' |
| 03-08.03.2005 | பிரான்ஸ் | 'யுனெஸ்கோ' தலைமை யலுவலகத்தில் உலக ளாவிய திட்டவரையினுள் இந்து சமுத்திரத்திற்கான சுனாமி எச்சரிக்கை மற்றும் தணிப்பு முறைமையை முன்னேற்றுவதற்கான சர்வதேச ஒருங்கிணைப்பு கூட்டம் | NARA/GOSL | 236,300.00 | |
| 08-12.03.2005 | இத்தாலி | மீன்பிடித்தல் மீதான FAO குழுவின் 26ஆவது அமர்வு மற்றும் மீன்பிடித்தல் மீதான FAO அமைச்சு ரீதியான கூட்டம் | - அதே - | | |
| 14-16.04.2005 | சீசெல்ஸ் | இந்திய சமுத்திர சுனாமி எச்சரிக்கை, தணிப்பு முறையை முன்னேற்றுதல் மீதான உயர் மட்டக் கூட்டம் | - அதே - | 176,221.00 (171,590.00 மீளளிக்கப் பட்டது) | |
| 21-30.06.2005 | பிரான்ஸ் | 'யுனெஸ்கோ'வின் அரசாங் கங்களுக்கிடையிலான சமுத்திரவியல் ஆணைக் குழுவின் கூட்டுசபையின் 23ஆவது அமர்வு | - அதே - | 734,004.98 (409,171.53 மீளளிக்கப் பட்டது) | |
| 03-04.01.2005 | இந்தியா | சேது சமுத்திரம் கருத் திட்டம் மீதான நிபுணத்துவ குழு உசாவுகை | வெளிநாட்டு அலுவல்கள் இ.அரசாங்கம் | 11,526.50 | கலாநிதி கே.அருளானந்தன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் தலைவர்/சமுத்திரவியல் பிரிவு |
| 14-18.02.2005 | அவுஸ்திரேலியா | இந்து சமுத்திர கடலக சூழல் மகாநாடு | IOMEC & NSF | | கலாநிதி ஈ.எம்.எஸ்.விஜேரத்ன ஆராய்ச்சி உத்தியோகத்தர் சமுத்திரவியல் பிரிவு |
| 14-18.02.2005 | அவுஸ்திரேலியா | இந்து சமுத்திர கடலக சூழல் மகாநாடு | IOMEC & NSF | | கலாநிதி கே.அருயானந்தன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் சமுத்திரவியல் பிரிவு |
| 27.01.2005-01.02.2005 | சவூதி அரேபியா | வட இந்திய சமுத்திர நாடுகளின் நீரியலுக் கான பிராந்திய குழுவின் 05ஆவது கூட்டுச் சபை | HO/UK | | திரு.எம்.ஏ.ஆரியவன்ச நீரியல் வல்லுனர் |
| 11-15.04.2005 | மொனாக்கோ | 3ஆவது அதிவிசேட சர்வ தேச நீரியல் மகாநாடு | சமஷ்டி கடலக நீரியல் முகவ ராண்மை/ஜேர்மனி | 18,764.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25-29.04.2005 | இந்தியா | கோவாவில் அன்டாட்டிக் சமுத்திர ஆராய்ச்சிக்கான தேசிய நிலையத்தில் 5 நாள் செயலமர்வு | DEOCOM கருத்திட்டம் | | திரு.எஸ்.யு.பி.ஜினதாச ஆராய்ச்சி உத்தியோகத்தர் சமுத்திரவியல் பிரிவு |
| 20.04.2005-19.04.2006 | தாய்லாந்து | ஆராய்ச்சி, பயிற்சி செயல்திட்டம் | AIT/தாய்லாந்து | | திரு.ஜே.கே.ராஜபக்ஷ ஆராய்ச்சி உத்தியோகத்தர் சமுத்திரவியல் பிரிவு |
| 27.06.2005-28.01.2006 | இந்தியா | 8ஆவது நீரியல் பாடநெறி | NHO/இந்தியா | | திரு.ஏ.ஆர்.ஏ.கபூர் நீரியல் நிலஅளவையாளர்/HO |
| 30.08.2005-28.02.2006 | ஐஸ்லாந்து | கடலக, உள்ளூர் நீர் மூல வளங்கள் கண்காணித்தல், மதிப்பிடுதல் | ஐஸ்லாந்து அரசாங்கம் | | செல்வி டி.சி.ரி.திஸநாயக்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் /MBRD |
| 01.10.2005-30.09.2008 | இந்தியா | பிஎச்.டி கற்கைகள் | CARP | 9,420.70 | செல்வி ஏ.டி.டபிள்யு.ஆர்.ராஜபக்ஷ ஆராய்ச்சி உத்தியோகத்தர் IARAD |
| 01.10.2005 30.09.2008 | இந்தியா | பிஎச்.டி கற்கைகள் | CARP | 8,221.79 | செல்வி எம்.ஜி.ஐ.எஸ்.பராக்ரம ஆராய்ச்சி உத்தியோகத்தர் IARAD |
| 01.10.2005 30.09.2008 | இந்தியா | பிஎச்.டி கற்கைகள் | CARP | 16,744.84 | செல்வி வி.பஹலவத்தஆரச்சி ஆராய்ச்சி உத்தியோகத்தர் IARAD |
| 05-07.09.2005 | ஐ.இ. | இறுதிக் கூட்டம்/MAMAS கருத்திட்டம் | MAMAS கருத்திட்டம் | 103,728.57 | திரு.என்.சுரேஷ்குமார் ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 08-13.08.2005 | இந்தோனேஷியா | IGOOS செயலமர்வு, 3ஆவது வருடாந்தக் கூட்டம் | ஒழுங்குபடுத்தல் குழு | 58,534.00 | கலாநிதி ரி.கே.டி.தென்னக்கோன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 23.08.2005-12.09.2005 | சிங்கப்பூர் | கடலுணவு பாதுகாப்பு முகாமைத்துவம் மீதான பயிற்சி | ஜய்கா | - | செல்வி எம்.ஜி.ஐ.யு.காரியவசம் ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 05-07.09.2005 | தாய்லாந்து | BIMSTOC தொழில்நுட்ப கூட்டத்தின் பங்குபற்றல் | இலங்கை அரசாங்கம் | - | கலாநிதி சம்பா அமரசிறி ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22-31.08.2005 | பிலிப்பைன்ஸ் | சனசமுக அடிப்படை யிலான முருகைக் கற்பார்த்தொடர் முகாமைத்துவம் மீதான நோக்குடன் கரையோர முகாமைத்துவத்தின் மீதான செயலமர்வு/ கற்கைப் பயணம் | CRMP | - | திரு.பி.எ.டி.எ.குமார ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22-31.08.2005 | பிலிப்பைன்ஸ் | சனசமுக அடிப்படை யிலான முருகைக் கற்பார்த்தொடர் முகாமைத்துவம் மீதான நோக்குடன் கரையோர முகாமைத்துவத்தின் மீதான செயலமர்வு/ கற்கைப் பயணம் | CRMP | - | திரு.யு.எஸ்.பி.கே.லியனகே ஆராய்ச்சி உத்தியோகத்தர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10-14.10.2005 | தாய்லாந்து | CRMPஇன் கீழ் குறுகிய கால பயிற்சி<br><br>மீன்பிடி மூலவளங்களின் நுண்எதிரி மீதத்தை நிர்ணயித்தல் | CRMP | - | செல்வி ஜே.எம்.சந்திரிகா ஆராய்ச்சி உதவியாளர்/PHTD |
| 10-14.10.2005 | தாய்லாந்து | CRMPஇன் கீழ் குறுகிய கால பயிற்சி<br><br>மீன்பிடி மூலவளங்களின் நுண்எதிரி மீதத்தை நிர்ணயித்தல் | CRMP | - | செல்வி ரி.எஸ்.தசநாயக்க ஆராய்ச்சி உதவியாளர்/PHTD |
| 11.09.2005-28.10.2005 | தாய்லாந்து | உயர்தர நன்னீர் நீர்வாழ் விருத்தி மீதான பயிற்சி செய்திட்டம் | TICA மற்றும் ஜய்கா | - | செல்வி பி.பி.எம்.ஹீனட்டிகல ஆராய்ச்சி உத்தியோகத்தர்/ IARAD |
| 05-17.09.2005 | ஜேர்மனி | வற்றுப்பெருக்கு மானி பயிற்சி | ஜேர்மனி அரசாங்கம் | - | கலாநிதி ஈ.எம்.எஸ்.விஜயரத்ன ஆராய்ச்சி உத்தியோகத்தர் சமுத்திரவியல் பிரிவு |
| 05-17.09.2005 | ஜேர்மனி | வற்றுப்பெருக்கு மானி பயிற்சி | ஜேர்மனி அரசாங்கம் | - | திரு.கே.ஜி.பி.விக்ரமசிங்க மாதிரிப்படுத்துனர்/ சமுத்திரவியல் பிரிவு |
| 18-25.12.2005 | இந்தியா | சேதுசமுத்திரம் கடல் கால்வாய் கருத்திட்டத்தின் ஆலோசனைக் குழுவில் பங்கெடுக்க | வெளிநாட்ட லுவல்கள் அமைச்சு | - | கலாநிதி பி.ஏ.ஏ.ரி.ஜயவர்தன |

# சூழல் ஆய்வுகள் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** திரு.என்.சுரேஷ்குமார்

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

நீரியல் சூழல் தொடர்புடன் சூழல் தொடர்பான பிரச்சினைகள் மீது நீர் மாசுபடுத்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பில் ஆய்வுகளை நடத்துவதே பிரிவின் பிரதான தொழிற்பாடாகும். காலத்தின் போது 'நாரா'வுக்கு வெளியே குறித்தொதுக்கல் ஒன்றை பொறுப்பேற்பதற்காக சம்பளமற்ற லீவில் ஒரு ஆராய்ச்சி உத்தியோகத்தர் மட்டுமே விடுவிக்கப்பட்டதுடன், அவுஸ்திரேலியாவில் தனது பிஎச்.டி கற்கைகளை முடிப்பதற்காக கல்வி லீவில் இருந்த இன்னொரு உத்தியோகத்தர் 2005 ஏப்ரலில் திரும்பி வரவில்லை. எனினும், பட்டதாரி பயிற்சித் திட்டத்தின் கீழ், இரு பட்டதாரிகள் 2005 ஏப்ரலில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, 2005 ஒக்ரோபரில் நிரந்தரமாக்கப்பட்டனர். மீதமுள்ள பணியாளரின் பலம் இரு ஆராய்ச்சி உதவியாளர்களையும், ஒரு சொற்பதித்தல் இயக்குனரையும், மூன்று ஆய்வுகூட ஊழியர்களையும் உள்ளடக்கியிருந்தது.

பிரிவுசார் செயற்பாடுகளின் பலதரப்பட்ட தேவைகளைச் சமாளிப்பதற்கு ஐந்து கருத்திட்டங்களை பிரிவு அமுல்படுத்தியது. ஐரோப்பிய ஆணைக்குழுவின் நிதிப்படுத்தலிலான கூட்டுமுயற்சியிலான ஆராய்ச்சி கருத்திட்டம் விஸ்தரிப்பு அடிப்படையின் மீது ஆண்டு முழுவதும் தொடர்ந்தது. இது சுனாமி தாக்கங்களைக் கருத்திற்கு எடுத்து ஐரோப்பிய யூனியனினால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், கரையோரப் பேணல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உசாவுகை அடிப்படையிலான மூன்று ஆய்வுகளை பிரிவு அமுல்படுத்தியது. மேலும், சுனாமி தொடர்பிலான பூர்வாங்க ஆய்வொன்றை பிரிவு பொறுப்பேற்றுக் கொண்டதுடன், மன்னார் வளைகுடா, பாக்குவிரிகுடா, பாக்கு நீரிணை மற்றும் வங்காள விரிகுடா ஆகியவற்றில் சேது சமுத்திரம் கருத்திட்டம் தொடர்பிலான ஆய்வுகளுடன் கடுமையாகச் சம்பந்தப்பட்டிருந்தது.

காலத்தின் போது, 2004 டிசம்பரில் சுனாமியினால் பெருமளவு சாதனங்களும், உபகரணங்களும் பாதிக்கப்பட்டதனால், ஆராய்ச்சிச் செயற்பாடுகள் தொடர்பிலான பெருமளவு பகுப்பாய்வுப் பணியில் ஒரு தொகை கஷ்டங்கள் அனுபவிக்கப்பட்டன. மேசைகள், அலுமாரிகள் போன்ற ஆய்வுகூட உட்கட்டமைப்பு வசதிகள் சுனாமியின் காரணமாக நாசமடைந்த நிலைமைகளில் விளங்கின. இக் காலத்தின் போது சில சாதனங்களை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| | திட்டம் | | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா/மி) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நீரியல் சூழலின் மாசு படுத்தலின் நிலை | 1.1 | மாசுபடுத்தலுக்கும், அல்கா சமுதாயத்திற்கும் விசேட தொடர் புடன் தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டு நீரியல் சூழலில் நீரின் தரத்தை நிலை | 0.3 | என்.சுரேஷ்குமார் | ஜன 2005 | டிச 2005 |
| 2. | உசாவுகை, ஆலோசனைச் சேவை மற்றும் சோதனைச் சேவைகள், அவசர ஆய்வுகள் | 2.1 | சோதனைச் சேவைகள் | 0.02 | என்.சுரேஷ்குமார் | ஜன 2005 | டிச 2005 |
| | | 2.2 | அவசரகால ஆய்வுகள் | 0.06 | என்.சுரேஷ்குமார் | ஜன 2005 | டிச 2005 |
| | | 2.3 | ஆலோசனை, உசாவுகை சேவை | 0.02 | என்.சுரேஷ்குமார் | ஜன 2005 | டிச 2005 |
| 3. | ஆய்வுகூடத்திற்கு தத்துவ வமளிப்பினைப் பெறுவதற் கான செய்முறை | 3.1 | சூ.ஆ.பி. ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட மேம்படுத்தல் திட்டம் | 0.2 | என்.சுரேஷ்குமார் | ஜன 2005 | டிச 2005 |
| 4. | சாதனங்களின் கொள்வனவு | 4.1 | சாதனங்களின் கொள்வனவு | 0.32 | என்.சுரேஷ்குமார் | ஜன 2005 | டிச 2005 |
| 5. | வெளியார் நிதிப்படுத்த லிலான கருத்திட்டங்கள் | 5.1 | பல்பயன்படுத்தல் நீரியல் முறைமையில் (MAMAS) கம இரசாயனங்களை நிருவகித்தல் | 39,778 யூரோ | என்.சுரேஷ்குமார் | ஜன 2005 | டிச 2005 |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1.1 மாசுபடுத்தலுக்கும், அல்கா தொகுதிக்கும் விசேட மேற்கோளுடன் தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டு நீர்வாழ் சூழலில் நீரின் தரத்தின் நிலை

நடைமுறையிலான காணிப் பயன்பாட்டு வடிவமைப்புகளுடன் வளவை கங்கை, கிரிந்தி ஓய, மற்றும் மெனிக் கங்கை ஆகிய தெரிவு செய்யப்பட்ட மூன்று ஆற்று முறைமைகளின் தற்போதைய மேற்பரப்பு நீர் மாசுபடுதல் போக்குகளை மதிப்பிடுவதே ஆய்வின் நோக்கமாகும். இது தொடர்பில் மேற்பரப்பு நீரின் தரம் மீது விரிவான அடிமட்ட தகவல் திரட்டப்பட்டதுடன், ஆற்று முறைமைகளின் வழியே அடையாளங் காணப்பட்ட காணிப் பயன்படுத்தல் வடிவமைப்புகள் தொடர்பில் நீரின் தரத்தின் போக்குகள் பகுப்பாயப்பட்டன. உட்பிரதேச ஆற்றோர மீன்களுக்கான உத்தேசமான பயமுறுத்தல்களை அடையாளங் காண்பதற்கும், குடிக்கும், குளிக்கும் மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்கு மேற்பரப்பு நீரின் தரத்தின் பிரச்சினைகளை அங்கீகரிப்பதற்கும், இந்த ஆற்று முறைமைகளில் காணி அடிப்படையிலான மாசுபடுத்தல் சுமைகளை மதிப்பிடுவதற்கும் இத் தகவல் பயன்படுத்தப்படும்.

ஆற்று முறைமைகளில் மேற்பரப்பு நீரின் மாதிரிப்படுத்தல் மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. APHA முறைகளைப் பயன்படுத்தி முக்கியமான நீரின் தரத்திற்கான சாராமாறிகளுக்காக மாதிரிகள் பகுப்பாயப்பட்டன. இது தொடர்பில், இடக்கிடப்பியல் நிலைமைகளினதும், காணி பயன்பாட்டினதும் அடிப்படையில், கிரிந்தி ஓயவிலிருந்து 16 மாதிப்படுத்தல் அமைவிடங்களும், மெனிக் கங்கையிலிருந்து 16 மாதிரிப்படுத்தல் அமைவிடங்களும், வளவை கங்கையிலிருந்து 17 மாதிரிப்படுத்தல் அமைவிடங்களும் தெரிவு செய்யப்பட்டன. காணிப் பயன்படுத்தலின் கள அளவீடு முடிக்கப்படவுள்ள போதிலும், இக் காலத்தினுள் சகல மூன்று ஆற்று முறைமைகளுக்காக ஆரம்ப அளவீடுகள் மட்டுமே சாத்தியமாகின.

வளவை கங்கையிலிருந்து பெறப்பட்ட நைத்திரேற், நைற்றைட் மற்றும் அமோனியா பெறுமதிகள் முறையே 0.112 முதல் 0.740 மி.கி/லீ., 0.012 - 0.099 மி.கி./லீ., 0.015-0.068 மி.கி./லீ. மற்றும் 0.010 - 0.296 மி.கி./லீ. என்ற வீச்செல்லையில் உள்ளன. கிரிந்தி ஓயவிலிருந்து பெறப்பட்ட நைத்திரேற், நைற்றைட் மற்றும் அமோனியா பெறுமதிகள் 0.291 - 0.835 மி.கி./லீ., 0.014 - 0.110 மி.கி./லீ., 0.036 - 0.0681 மற்றும் 0.015 - 0.171 மி.கி./லீ. என்ற வீச்செல்லையில் உள்ளன. மெனிக் கங்கையிலிருந்து பெறப்பட்ட நைத்திரேற், நைற்றைட். மற்றும் அமோனியா பெறுமதிகள் முறையே 0.171 - 0.676 மி.கி/லீ., 0.009 - 0.074 மி.கி./லீ., 0.02 - 0.084 மி.கி./லீ. மற்றும் 0.01 - 0.219 மி.கி./லீ. என்ற வீச்செல்லையைப் பதிவு செய்தன. மேற்படி மூன்று ஆற்றுமுறைமைகளில் உள்ள மேற்பரப்பு நீரின் தரம் ஏதாவது முக்கியமான நீரின் தரத்தின் சாராமாறிகளில் ஏதாவது குறிப்பிட்ட ஏற்றங்களைக் காட்டவில்லை என்பதை பூர்வாங்க பகுப்பாய்வு காட்டுகின்றது. எனினும், பிரதானமாக BOD மற்றும் TSS ஆகிய மாசுபடுத்தலை காட்டும் சாராமாறிகள் ஆண்டின் சில காலங்களின் போது உயர் பெறுமதியைப் பதிவு செய்தன. வளவைக்கு 2.4 - 3.6 மி.கி./லீ. என்றவாறும், கிரிந்தி ஓயவுக்கு 3.3 - 10.08 மி.கி./லீ. என்றவாறும், மெனிக் கங்கைக்கு 5.8 முதல் 8.81 மி.கி./லீ. வரை என்றவாறும் BOD பெறுமதிகள் வேறுபட்டிருந்தன. TSS பெறுமதிகள் வளவைக்கு 6.02 முதல் 36.82 மி.கி./லீ வரையும், கிரிந்திஓயவுக்கு 6.0 - 13.5 மி.லீ./லீ. வரையும், மெனிக் கங்கைக்கு 5.5 - 23.09 மி.கி./லீ வரையும் வேறுபட்டிருந்தன. எனினும், பெருமளவு அமைவிடங்களில் சகல மூன்று ஆற்று முறைமைகளில் இருந்து பெறப்பட்ட முடிவுகள் குடிநீர் தரத்தின் நியமங்களுக்கான விதந்துரைக்கப்பட்ட மட்டங்களையும், பொஸ்பேற் (2.0 மி.கி/லீ.), மொத்த வன்மை (250 மி.கி/லீ.) மற்றும் கடத்துதிறன் (250μS) பெறுமதிகள் ஆகியவற்றின் சாராமாறிகளுக்கான WHO நியமங்களையும் மீறியிருந்தன எனக் காட்டுகின்றன. தொழில்நுட்ப அறிக்கை தயாரிப்பின் கீழ் உள்ளது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 107

### கருத்திட்டம் 2.1 சோதனைச் சேவைகள்

பிரதானமாக தேசிய சூழல் சட்டத்தினதும் மற்றும் மீன்பிடி நீர்வாழ் வளங்கள் அபிவிருத்திச் சட்டத்தினதும் கீழ் ஒழுங்கு விதிகளுக்கு கைத்தொழில் அதிபர்கள் இணங்குவதற்காக உதவுவதற்காகவும், தமது குடிநீரைச் சோதிப்பதற்காக பொது மக்களுக்கு உதவுவதற்காகவும் கிட்டுகின்ற நிபுணத்துவத்தையும், ஆய்வுகூட வசதிகளையும் பயன்படுத்தி சோதனைச் சேவைகள் நடத்தப்பட்டன. ஆய்வுகூடத்தில் உள்ள பெருமளவு சாதனங்களையும், உபகரணங்களையும் சுனாமி பாதித்ததினால், வெளியார் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை அளித்தல் பெரிதுமே பாதிப்படைந்தது. கிட்டுகின்ற மூலவளங்களுடன், சோதனை பரம்பரையலகு புத்துயிரளிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டது. அடிப்படைச் சோதனை நடைமுறைகள் புத்துயிரளிக்கப்பட்டன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: 60

### கருத்திட்டம் 2.2 அவசரகால ஆய்வுகள்
### பெந்தோட்டை/கொஸ்கொட பகுதிக்கு சுனாமியின் காரணமாக விளைவிக்கப்பட்ட சூழல் சேதத்தின் துரித மதிப்பீடு

பெந்தோட்டையிலிருந்து கொஸ்கொட வரையிலான கரையோரப் பகுதிகளுக்கு சுனாமியினால் விளைவிக்கப்பட்ட சூழல்

சேதங்கள் மீதான ஆய்வுக்கான துரிதமான மதிப்பீடொன்று, ஜனாதிபதி செயலகத்தில் 2005 ஜனவரி 17 அன்று நடைபெற்ற அழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய உயர்மட்ட குழுவின் கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின்படி சூழல், இயற்கை வளங்கள் அமைச்சுடனும், தேசிய வளங்கள், கரையோரப் பேணல் திணைக்களத்துடனுமான கூட்டு முயற்சியுடன் நடத்தப்பட்டது. சூழலுக்கான சேதத்தின் தன்மையினதும் அளவினதும் மதிப்பீடும், சூழலுக்குப் புத்துயிரளிப்பதற்கான சாத்தியமான தலையீடுகள் மீதான விதந்துரைப்புகளும் 2005 பெப்ரவரியில் சூழல், இயற்கை வளங்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### சுனாமியினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதி மீதான நீரின் தரத்தின் மீதான ஆய்வு

சுனாமியின் காரணமாக கரையோர நீருக்கும், இணைந்துள்ள நீர் நிலைகளுக்கும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பதிவு செய்யுமுகமாக, கரையோர சூழலியல் அமைப்புகளுக்கு இத்தகைய சேதத்திலான அலைகள் கொண்டு வரக்கூடிய மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கு எம்மை இயலச் செய்வதற்காக துரித அளவீட்டுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நீரின் தரத்தை கண்காணிப்பதற்கான அளவீடொன்றைப் பொறுப்பேற்பதற்கு முன்மொழியப்பட்டது. கொழும்பு, மொறட்டுவை/பாணந்துறை, களுத்துறை, சீனிகம/ஹிக்கடுவை, காலி, மாத்தறை, தங்காலை, அம்பலாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை, கிரிந்த, பிட்டுபான, புத்தாவ மற்றும் யால ஆகியனவே பிரதான மாதிரிப்படுத்தல் முனைகளாகும். மேலும், மாதிரிப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், மற்றும் பகுப்பாய்தல் ஆகியவற்றுடன் அனுபவிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்களின் காரணமாக, பாணமை, பொத்துவில், திருக்கோயில், ஒலுவில், கல்முனை, காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், திருகோணமலை மற்றும் நிலாவெளி ஆகிய அமைவிடங்கள் கைவிடப்பட்டன. பெருமளவு பகுதிகளில் 23.80 NTU± 23.75 என்ற மட்டங்களுடன் கலங்கற்றன்மை மட்டங்கள் உயர்வாகக் காணப்பட்டன. ஆய்வின் போது பெறப்பட்ட பிரதான நீரின் தரத்தின் சாராமாறிகளின் சராசரி விளைவுகள் வருமாறு: நைத்திரேற்று 0.040 ±0.020 மி.கி/லீ., நைத்றைற் 0.0163± 0.018 மி.கி./லீ., அமோனியா 0.024± 0.048 மி.கி./லீ., மற்றும் பொஸ்பேற் 0.02 ±0.01 மி.கி./லீ. ஆய்வுகூடத்தின் புனருத்தாபன முயற்சிகளின் காரணமாக அனுபவிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக, தொடர்ச்சியான கண்காணித்தலை மேற்கொள்ள முடியவில்லை. மீன்பிடி, நீர்வாழ் வளங்கள் அமைச்சுக்கு ஆரம்ப அறிக்கையின் மூலம் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

### பெருந்திரளான மீன்கள் கொல்லப்பட்ட சம்பவம்

அத்திடிய சதுப்புநிலத்தில் பெருந்திரளான மீன்கள் கொல்லப்பட்ட சம்பவமொன்று 2005 செப்ரெம்பரில் விசாரிக்கப்பட்டது. கரையத்தக்க ஒட்சிசன் குறைவடைந்தமையே காரணத்தைக் குறிப்பிடும் காரணி எனக் கண்டறியப்பட்டது. மேலும், இத்தகைய சம்பவங்களை விசாரிக்குமுகமாக முக்கிய மாசுபடுத்தல் சாராமாறிகளுக்கான சோதனைப் பொட்டளிக்கு கோரிக்கை விடுக்கப்பட்டதுடன். இதைப் பெறுவதற்கு கேள்வியும் அழைக்கப்பட்டது.

### சேது சமுத்திரம் கப்பல் கால்வாய் கருத்திட்டம்

சேது சமுத்திரம் கப்பல் கால்வாய் கருத்திட்டத்தின் தாக்கத்தை கண்காணிக்கும் பணி 'நாரா'வுக்கு ஒப்படைக்கப்பட்டது. இதன் விளைவாக, பிரிவினால் நீரின் தரம் பொறுப்பேற்கப்பட்டதுடன், இரு கப்பல் பயணங்களில் அது பங்கெடுத்தது. முதலாவது கப்பல் பயணம் அடம்ஸ் பாலப் பகுதியையும், மன்னார் விரிகுடாவையும் அளவிடுவதற்காக மன்னாருக்கு 2005 பெப்ரவரியில் பொறுப்பேற்கப்பட்டதுடன், பாக்கு நீரிணையையும், பாக்கு விரிகுடாவையும், வங்காள விரிகுடாவையும், அளவிடுவதற்காக யாழ்ப்பாணத்திற்கு 2005 ஒக்ரோபர் நொவம்பரில் இரண்டாவது கப்பல் பயணமும் பொறுப்பேற்கப்பட்டது. அளவீடு செய்யப்பட்ட பகுதிகளின் அடிமட்ட தகவலை தாபிப்பதும், பொருத்தமான கண்காணித்தல் சாராமாறிகளை நிர்ணயிப்பதுமே இரு கப்பல் பயணங்களின் நோக்கங்களாகும். அளவீடு செய்யப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வதற்காகத் தொகுக்கப்பட்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 70

### கருத்திட்டம் 2.3 ஆலோசனை, உசாவுகைச் சேவை

வழிகாட்டலையும், ஆலோசனையையும் வழங்குவதற்காக பின்வரும் தேசியக் குழுக்களில் பணியணி உறுப்பினர்கள் பங்கெடுத்தார்கள்.

1. **சேது சமுத்திரம் கடல் கால்வாய் கருத்திட்டம்**
   வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அழைக்கப்பட்ட சேது சமுத்திரம் கப்பல் கால்வாய் கருத்திட்டம் மீது ஆலோசனைக் குழுவின் கூட்டங்களில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார்.
2. **இலங்கையில் ஈரநிலப் பேணலுக்கான தேசிய முன்னெடுத்தல் குழு**
   சூழல், இயற்கை வளங்கள் அமைச்சின் கீழ் தேசிய ஈரநிலங்கள் முன்னெடுத்தல் குழுவில் (NWSC) வாதப்பிரதிவாதங்களில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார். இக் குழு ஈரநிலங்கள் மீதான தேசியக் கொள்கையை முடிவாக்கியதுடன், இது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. தேசிய ஈரநில விவரக்கொத்தினதும், ஈரநில ஒழுங்குவிதிகளினதும் தயாரிப்பு NWSC ஊடாக ஆரம்பிக்கப்பட்டது.

**3. எண்ணெய் சிந்துதல் அவசரகால முகாமைத்துவத்தை நிறுவனரீதியாகப் பலப்படுத்துதல்**

தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தை மீளவாய்வதற்கு கடல் தீழ்ப்பு தடுப்பு அதிகாரசபைக்கு உதவியளிப்பதற்காக இயக்க பதிலிறுப்புக் குழாமின் வாதப்பிரதிவாதங்களில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார்.

**4. ஞாலப்பால நீர் முகாமைத்துவத் திட்டம்**

ஒக்ரோபரில் ஞாலப்பால நீர் முகாமைத்துவத்திற்கு மூலோபாயங்களை விருத்தி செய்வதற்கு உள்ளக குழுக் கூட்டத்தை கடல்தீழ்ப்பு தடுப்பு அதிகாரசபை ஆரம்பித்து வைத்ததுடன், உள்ளக குழுக் கூட்டங்களின் செயல்களில் 'நாரா'வை திரு.என்.சுரேஷ்குமார் பிரதிநிதிப்படுத்தினார்.

**5. மீன் நிருமாணமும், செயற்கைக் கருவிகளை ஒழுங்குபடுத்துதலும்**

இந்து சமுத்திர கடலக அலுவல்கள் ஒத்துழைப்பினால் ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்கைக் கற்பார்த்தொடர்களையும், மீன் திரள்கள் கருவிகளையும், நிலக்கீழ் நீர் கட்டமைப்புகளையும் நிருமாணிப்பதற்கும், ஒழுங்குபடுத்துவதற்குமான திட்டம் மீதான கூட்டமொன்றில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார்.

**6. கடலக தீழ்ப்புகளின் விதிமுறை**

2005 ஒக்ரோபரில் நடைபெற்ற கடலக மாசுபடுத்திகளின் விதிமுறைக்கான நடைமுறையை விருத்தி செய்வதில் கடல் தீழ்ப்பு தடுப்பு அதிகாரசபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட "கடலக மாசுபடுத்திகளின் விதிமுறை" மீதான கூட்டமொன்றில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார்.

சூழல் தாக்க மதிப்பீட்டு நடைமுறைகள் தொடர்பில் பின்வரும் கருத்திட்டங்களில் தீவிரமான பங்கெடுப்பு செய்யப்பட்டது:

**அ. மிதவை விமானங்களின் இயக்கம்**

உள்நாட்டு நீர் நிலைகளைப் பாதுகாப்பதையும், மாசுபடுத்தலைத் தடுப்பதையும் உறுதிப்படுத்துவதற்காக மத்திய சூழல் அதிகாரசபைக்கு வழிகாட்டுவதற்கு இந்த அதிகாரசபையினால் நடத்தப்பட்ட "உள்நாட்டு நீர்நிலைகளுக்கு மிதவை விமானங்களினால் பறத்தல் இயக்கங்களை நடத்துதல்" மீது நோக்கிலான கூட்டத்தில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார்.

**ஆ. லுணாவை மற்றும் நீர்கொழும்பு கடல் ஏரிகளில் வாரி இறைக்கப்பட்ட பொருளைத் தற்காலிகமாகக் களஞ்சியப்படுத்தல்**

கரையோரப் பேணல் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட லுணாவை மற்றும் நீர்கொழும்பு கடல் ஏரிகளில் வாரி இறைக்கப்பட்ட பொருளைத் தற்காலிகமாகக் களஞ்சியப்படுத்தல் மீதான அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு, 2005 டிசம்பரில் விதந்துரைப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன.

**இ. மட்டக்களப்பு, திருக்கண்டியமடு-திருகோணமலை வீதி மீது கிண்ணியா படகுத்துறைப் பாலத்தின் நிருமாணம்**

கரையோரப் பேணல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மட்டக்களப்பு, திருக்கண்டியமடு-திருகோணமலை வீதி மீது கிண்ணியா படகுத்துறைப் பாலத்தின் நிருமாணம் மீதான நோக்கிலான குழுக் கூட்டத்தில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார். இது மீன்பிடி, நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தின் திருகோணமலை அலுவலகத்தில் நடைபெற்றதுடன். அவர் இணை அமைவிட சோதனையிலும் பங்கெடுத்தார். கூட்டத்தின் போது கடலக சூழல் மீது 'நாரா'வின் நோக்கிலான கரிசனைகள் CCD மற்றும் RDAஇனால் அவசியமான கரிசனைகளுக்காக விவரமாக விளக்கமளிக்கப்பட்டது.

இக்காலத்தின் போது, மேலும் பின்வரும் உசாவுகை ஆய்வுகளில் பங்கெடுக்கப்பட்டது.

**அ. ரேகாவ, உஸ்ஸங்கொட, கலாமிற்றிய கரையோர சூழலியல் முறைமைகளுடன் இணைந்துள்ள நீர் நிலைகளில் நீரின் தரத்தின் ஆய்வு**

ரேகாவ, உஸ்ஸங்கொட, கலாமிற்றிய கரையோர சூழலியல் முறைமைகளுடன் இணைந்துள்ள நீர் நிலைகளில் நீரின் தரத்தினை ஆய்வதற்காக கரையோரப் பேணல் திணைக்களத்திடமிருந்து GEF நிதியங்களின் கீழ் இவ்வாய்வு நடத்தப்பட்டது. இறுதி அறிக்கையின் சமர்ப்பணம் 2005 ஜூலையில் வெளிவரவுள்ளது. வேறு உத்தியோகபூர்வ பாரப்படுத்தல்களின் காரணமாக, அறிக்கை முடிவாக்கப்படவில்லை என்பதுடன், 2006 ஏப்ரலுக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆ. சிலாபம் கடலேரிக்கு சூழல் பக்கவரையைத் தயாரித்தல்**

இவ்வாய்வு கரையோரப் பேணல் திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரிலும், நிதியங்களிலிருந்தும் நடத்தப்பட்டது. வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, 2005 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது. ஏனைய உத்தியோகபூர்வ பாரப்படுத்தல்களின் காரணமாக அறிக்கையை முடிவுறுத்தல் தாமதமாகியுள்ளதுடன், இது 2006 ஏப்ரலுக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**இ. கொக்கல கடலோரி ஆய்வு**

மேற்படி கருத்திட்டம் MFARஇன் கரையோர வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டத்தினால் (CRMP) 'நாரா'வுக்கு வழங்கப்பட்டது. 2005 ஜுலையில் வரைவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இறுதி அறிக்கை எழுதுதல் நடந்து கொண்டிருக்கிறது.

**ஈ. நீர்த்தாழையின் புனரமைப்பு**

ரேகாவ, உஸ்ஸங்கொட, மற்றும் கலாமெற்றிய ஆகியவற்றில் நீர்த்தாழைகளின் புனரமைப்பு மீதான கருத்திட்ட ஆலோசனையொன்று வரையப்பட்டு, கரிசனைக்காக கரையோரப் பேணல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

முன்னேற்றம் (%): பௌதீக: 80 நிதிசார்: 35

## கருத்திட்டம் 3.1 ESD ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட மேம்படுத்தல் திட்டம்

நவீனமயமான சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் வேறு ஆய்வுகூட விடயங்கள் ஆகியன போன்ற ஆய்வுகூடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. மேலும், சுனாமியினால் ஏற்பட்ட சேதத்தின் காரணமாக ஆய்வுகூட மரத்தளபாடங்களும் நாசமடைந்த நிலைமையில் இருந்தன. அவசரகால நடவடிக்கையொன்றாக, நீர் மாதிரிகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக இரு போத்தல் குளிராக்கிகளின் கொள்வனவுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. சகல பாதிக்கப்பட்ட சாதனங்களும், உபகரணங்களும் சுத்திகரிக்கப்பட்டு, சேதங்களை மதிப்பிடுவதற்கு, சேதமடைந்த பொருட்கள் பற்றி பொருத்தமான உள்ளூர் முகவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. BOD அடைகாப்பானும், குளிரூட்டிகளும் பழுதுபார்க்கப்பட்டு, வேலை செய்யும் நிலைமைக்கு இடப்பட்டது. அணு உறிஞ்சல் திருசியவொளி மானிக்கு அவசியமான பதிலீடு பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, பழுதுபார்த்தல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

முன்னேற்றம் (%): பௌதீக: 60 நிதிசார்: 25

## கருத்திட்டம் 4.1 சாதனங்களின் கொள்வனவு

பல்பயன்பாட்டு நீர்வாழ் முறைமைகளில் கம இரசாயனங்களை நிருவகித்தல் (MAMAS) என்ற ஒரு கூட்டு முயற்சியிலான ஆராய்ச்சிக் கருத்திட்டமானது 2005 டிசம்பர் வரை ஐரோப்பிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நீடிப்பினால் நான்காவது வருடமாக அமுல்படுத்தப்பட்டது. கருத்திட்டத்தினால் விருத்தி செய்யப்பட்ட பெருமளவு வசதிகள் சுனாமியினால் அழிக்கப்பட்டதனால், திலபிலாவின் வளர்ப்பு இருப்பு, மொயினா வளர்ப்பு மற்றும் அல்காவின் (Chlorella) வளர்ப்பு ஆகியன மீள் தாபிக்கப்பட்டு, சிறுபோக மற்றும் பெரும்போக காலங்களின் மாற்றங்களை அடக்குவதற்காக ஜுலையிலும், ஓகஸ்டிலும், டிசம்பரிலும் கள வரிசைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. களன்குட்டியவிலும், மீகல்லாவவிலும் நீரின் தரமும், பூச்சிநாசினி செறிவும் ஆயப்பட்டன. 2005 செப்ரெம்பரில் ஐக்கிய இராச்சியத்தில் ஸ்ரேர்லிங் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி பங்காளிகளின் இறுதிக் கூட்டத்தில் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார். ஆராய்ச்சிப் பங்காளர்கள் கூட்டத்தில் உடன்படிக்கை மீதான அடிப்படையில், 2005 ஒக்ரோபர் 21இலிருந்து 27 வரை 'நாரா'வில் இறுதி அபாய மதிப்பீடு மீதான செயலமர்வொன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. கருத்திட்டத்தின் கீழ் விருத்தி செய்யப்பட்ட PRIMET மென்கணிய பொதியைப் பயன்படுத்தி இறுதி அபாய மதிப்பீட்டு காட்சிகள் நிறைவேற்றப்பட்டதுடன், தொகுப்பதற்காகவும், இறுதி அபாய மதிப்பீட்டினை நிறைவேற்றுவதற்காகவும் நெதர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பங்காளியான Alterra Green World Researchக்கு முடிவுகள் அனுப்பி வைக்கப்பட்டன. "இலங்கைக்கான உள்ளூர் சோதனை இனங்களுக்கு எளிய உயிரியல் பரீட்சைத் தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல்" மற்றும் "பூச்சிநாசினி எச்சச் செறிவின் ஆய்வு" ஆகியன மீதான இறுதி ஒப்படைப்புகள் வரையப்படுவதுடன், ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுமுகமாக கருத்திட்ட இணைப்பாளரான ஐக்கிய இராச்சியத்தின் ஸ்ரேர்லிங் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பின்தொடர் நடவடிக்கை ஒன்றாக, பாடசாலைகளிலும், கமக்காரர்/சனசமூக தாபனங்களிலும் ஒழுங்கு செய்யப்படவுள்ள முறைசாராச் செயலமர்வுகள் மூலம் உள்ளூர் சனசமூகத்திற்கு ஆய்வின் முடிவுகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 67

## 4. தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப அறிக்கைகள்

- 2005 செப்ரெம்பர் திகதியிடப்பட்ட, "அத்திடியவில் நீர் மாசுபடுத்தலின் காரணமாக மீன் பலியாதல்" மீதான தொழில்நுட்ப அறிக்கை மீன்பிடித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- சுனாமியினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளின் நீரின் தரம் மீதான பூர்வாங்கத் தொழில்நுட்ப அறிக்கை, 2006 பெப்ரவரி
- மன்னார் விரிகுடாவினதும், அடம்ஸ் பாலத்தினதும் நீரின் தரம் மீதான அறிக்கை, 2005 மார்ச்
- பாக்குநீரிணை, பாக்கு குடா மற்றும் வங்காள குடா ஆகியவற்றின் நீரின் தரம் மீதான ஆரம்ப தொழில்நுட்ப அறிக்கை, 2005 டிசம்பர்

# மீன்பிடித் தொழில்நுட்பப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** என்.பீ.பி.புண்யதேவ

## 1. 2005ஆம் ஆண்டுக்கான சிறப்பம்சம்

வழுகல் சிங்கி இறால்களின் (*Genus Thenus*) பரிசோதனைரீதியில் பிடித்தல் மீதானதே தற்போதைய கருத்திட்டமாகும். வழுகல் சிங்கி இறால்கள் (*Genus Thenus*) பெரிதுமே இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு கரையோரங்களில் ஆழமற்ற கரையோர நீர்களிலிருந்தே அறுவடை செய்யப்படுகின்றன. ஏற்றுமதிச் சந்தைக்கு மூலவளங்களின் நிலைத்திருக்கத்தக்க சுரண்டலுக்கான நன்கு-சட்டமாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இல்லை. DFAR/DGஇனால் செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், வழுகல் சிங்கி இறால்கள் தற்போது வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு கரையோர நீரிலிருந்து அறுவடை செய்யப்படுவதுடன், பிடிக்கப்படுபவை சிறியவற்றையே அடக்கியுள்ளன. 'நாரா' விரிவான ஆய்வொன்றைப் பொறுப்பேற்று, நிலைத்திருத்தல் சுரண்டலுக்கு இம் மீன்பிடித் தொழிலை நிருவகிப்பதற்கு விதந்துரைப்புகளைச் செய்ய வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

தனியார் நிறுவனத்தின் ஊடாக வழுகல் சிங்கி இறால்களைப் பிடித்தலின் தற்போதைய நிலையைப் பற்றியும், ஏற்றுமதி புள்ளிவிபரங்கள் பற்றியும் தகவல் சேகரிக்கப்பட்டது. கற்பிட்டி, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், மூதூர், முல்லைத்தீவு, கிரிந்த ஆகிய பாரிய அறுவடைப் பகுதிகளுக்கு வருகை தரல்கள் பொறுப்பேற்கப்பட்டன. மீன்பிடி சனசமூகத்தின் பங்கெடுப்புடன் வழுகல் சிங்கி இறால்களை சுரண்டுவதற்காக பரிசோதனைரீதியிலான பிடித்தல் உபகரணங்களை நிருமாணித்தல் நடந்து கொண்டிருக்கிறது. கள வருகை தரல்கள் மூலம் தரவுகளைச் சேகரித்தல், வர்த்தகரீதியிலான பிடிகளை மாதிரிப்படுத்தல், மற்றும் தரவைப் பகுப்பாய்தல் ஆகியன செய்யப்பட்டன. வடக்கு, மற்றும் கிழக்குப் பகுதிகளில் குழப்பங்களின் காரணமாக பரிசோதனைக்கு தடங்கல் ஏற்பட்டது.

| திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா/மி) | பொறுப்பான உத்தியோகத்தர்கள் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|
| புதிய மீன்பிடித்தல் தொழில நுடபங்களை முன்னேற்றுதல் | வழுக்கி சிங்கி இறால்களுகளை (*Genus Thenus*) பரிசோதனை ரீதியிலாகப் பிடித்தல் | 1.5 | கலாநிதி டி.எஸ். ஜயகொடி<br>என்.பீ.பி.புண்ணியதேவ | ஜன 2005 | டிச 2005 |

## 3. செயற்றிறன்

இக் கருத்திட்டத்தின் கீழ், மீன்பிடி உபகரணமொன்று உருவாக்கப்பட்டு, சனசமூகத்தின் பங்கெடுப்புடன் மீன்பிடிப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ஒரு தொகைப் பகுதிகளில் மீனவர்கள் மத்தியில் வழுகல் சிங்கி இறால்களைப் பிடித்தல் ஒரு இலக்குப்படுத்தப்பட்ட மீன்பிடித் தொழில் அல்ல என அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், இம் மீன்பிடித் தொழில் பிரதானமாக முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுவதுடன், மேலே குறிப்பிடப்பட்ட மாவட்டங்களிலிருந்தே வழுகல் சிங்கி இறால்களின் பெரும் பகுதி பிடிக்கப்படுவதாக நிறுவனத்தின் வருகை தரல்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வழுகல் சிங்கி இறால்களைப் பிடிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட உபகரணத்தின் பிடித்தல் செயற்றிறன் போதுமானது என்று பரிசோதனைரீதியிலான மீன்பிடித்தல் தொழிற்பாடுகளிலிருந்து அவதானிக்கப்பட்டதுடன், பரிசோதனைரீதியிலான பகுதியில் வழுகல் சிங்கி இறால்களின் கிட்டும் தன்மை திருப்திகரமானது என்பதும் அவதானிக்கப்பட்டது. எனினும், உபகரணத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக உபகரணத்திற்கு மேலும் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 62

## 4. நடத்தப்பட்ட பயிற்சி/விழிப்பியல் திட்டங்கள்

அறிவைப் பரப்புவதற்காகவும், அனுபவத்தைப் பரிமாறுவதற்காகவும் உதவிப் பணிப்பாளர்களுக்காகவும், மீன்பிடித் தொழில் பரிசோதகர்களுக்காகவும், மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளின் மீனவர்களுக்காகவும் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

## 5. வெளியீடுகள்

ஆராய்ச்சிக் கட்டுரைகள்: குழப்பங்களின் காரணமாக தரவுச் சேகரிப்பினை முடிக்க முடியாததினால் ஆராய்ச்சிக் கட்டுரையை முடிக்க முடியவில்லை.

ஆராய்ச்சி அறிக்கைகள், சிற்றேடுகள்/துண்டுப் பிரசுரங்கள் தயாரிப்பின் கீழ் உள்ளன.

**தடைகள்:**

முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே பெரும்பாலான வழுகல் சிங்கி இறால்கள் பிடிக்கப்படுகின்ற போதிலும், பாதுகாப்புப் பிரச்சினைகளின் காரணமாக திட்டமிட்டவாறு அப்பகுதிகளுக்கு அமைவிட வருகைதரல்களை ஒழுங்குபடுத்த முடியவில்லை. ஆகவே, தனியார் நிறுவனத்திலும், ஏற்றுமதிப் புள்ளிவிபரங்களிலுமே நாம் தங்கியிருக்க வேண்டியிருந்தது. இக் கருத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கெடுக்கையில், வடக்கிலும், கிழக்கிலும் நிலைமைகள் வழமைக்கும் திரும்பும் போது இது தொடரப்பட வேண்டும்.

## நீர்நிலையவியல் பிரிவு - தேசிய நீர்நிலையவியல் அலுவலகம்

**பிரிவுத் தலைவர்:** திரு.எம்.எ.ஆரியவன்ஸ

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

கப்பல்களின் பாதுகாப்பானதும், செயற்றிறனானதுமான பயணத்திற்கு உதவியளிப்பதற்கான சேவைகளை தேசிய நீர்நிலையவியல் அலுவலகம் வழங்குகின்றது. கடல் அட்டவணைகள், கரையோர வலய முகாமைத்துவத்திற்கான தரவு, சூழல் பாதுகாப்பு மற்றும் வேறு தொடர்பான உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் ஏற்பாடே பிரதான சேவையாகும். கடல்சார் வர்த்தகத்தினதும், வேறு கடல்சார் செயற்பாடுகளினதும் வசதிப்படுத்தல் ஊடாக குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் வர்த்தக நன்மைகளையும் செம்மையானதும், புதுப்பிக்கப்பட்டதுமான அட்டவணைகளின் ஏற்பாடு வழங்குகின்றது.

சுனாமியின் விளைவாக அளவீட்டு சாதனத்திற்கும், "சயூரி" கப்பலுக்கும் ஏற்பட்ட பாரிய சேதங்களின் காரணமாக, தேசிய அட்டவணைப்படுத்தல் செய்திட்டத்தின் கீழ் அதன் 2005 - வருடாந்த வேலைத் திட்டத்தை தே.நீ.அ. திருத்தியமைக்க வேண்டியிருந்தது. பின்வரும் விசேட சுனாமிக்குப் பின்னரான அளவீடுகளை தே.நீ.அ. நடத்த வேண்டியிருந்தது:

1. விசேட சுனாமிக்குப் பின்னரான அளவீட்டுச் செய்திட்டம் (பாணந்துறை, பேருவளை, ஹிக்கடுவை, காலி, மிரிஸ்ஸ, புராணவெல்ல, தங்காலை, ஹம்பாந்தோட்டை ஆகிய மீன்பிடித் துறைமுகங்கள் உள்ளடக்கப்பட்டன).
2. காலி பிரதான துறைமுக கால்வாய் அளவீடு (தேசிய அட்டவணைப்படுத்தல் செய்திட்டத்தின் கீழ்)
3. கற்பிட்டி கடல்ஏரி ஆழவளவியல் அளவீடு

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| | செயற்திட்டம் | | திட்டம் | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | சுனாமிக்குப் பின்னரான உடனடி மீட்பித்தல் பணி | 1.1 | கொழும்பு கலவேலைத்தலத்திற்கு கவிழ்ந்த சயூரியை ஏற்றி இறக்குதல் | எம்.ஏ.ஆரியவன்ச<br>டி.ஏ.கருணாசேன | ஜனவரி 2005 | மார்ச் 2005 |
| 2. | சுனாமிக்குப் பின்னரான அளவீட்டுச் செய்திட்டம் | 2:1 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுக அளவீடு. பாணந்துறை, பேருவளை, ஹிக்கடுவை, காலி, மிரிஸ்ஸ, புராணவெல்ல, தங்காலை, மற்றும் ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகங்களின் தென் பகுதி ஆழவளவியல் அளவீடுகள் | எஸ்.என்.எஸ்.அமரசிங்க<br>ஏ.என்.டி.பெரேரா | மார்ச் 2005 | ஜுலை 2005 |
| 3. | தேசிய கோட்டுப் படமியல் செயற்திட்டம் | 3.1 | காலி பிரதான துறைமுக கால்வாய் அளவீடு | எஸ்.என்.எஸ்.அமரசிங்க<br>ஏ.என்.டி.பெரேரா | ஜுலை 2005 | ஒகஸ்ட் 2005 |
| | | 3.2 | கற்பிட்டி கடல் ஏரியின் நீர்நிலையவியல் | எஸ்.என்.எஸ்.அமரசிங்க | செப். | டிச. |
| 4. | சேது சமுத்திரத்திற்கான EIA ஆய்வு | 4.1 | தரவுச் சேகரிப்புக்கு உதவியளித்தல் | எஸ்.ஆர்.சி.ரணவீர<br>ஆர்.எச்.பி.வலிகொடபிட்டிய | ஒக்டோபர் 2005 | நொவ. 2005 |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1.1 கொழும்பு கலவேலைத்தலத்திற்கு கவிழ்ந்த சயூரியை ஏற்றி இறக்குதல்

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை. ஆனால் காப்புறுதி நிறுவனத்தினால் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**கருத்திட்டம் 2.1 சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுக அளவீடு, பாணந்துறை, பேருவளை, ஹிக்கடுவை, காலி, மிரிஸ்ஸ, புராணவெல்ல, தங்காலை, மற்றும் ஹம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகங்களின் தென் பகுதி ஆழவளவியல் அளவீடுகள்**

08 மீன்பிடி துறைமுகங்களின் ஆழவளவியல் அளவீடுகள் முடிக்கப்பட்டுள்ளன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: 95

**கருத்திட்டம் 3.1 காலி பிரதான துறைமுக கால்வாய் அளவீடு**

காலித் துறைமுக கால்வாயின் சுனாமிக்குப் பின்னரான நீர்நிலையவியலின் சேகரிப்பு

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: 90

**கருத்திட்டம் 3.2 கற்பிட்டி கடல் ஏரியின் நீர்நிலையவியல் அளவீடு**

முன்னேற்றம் (%) : பௌதீக: 20 நிதிசார்:

**கருத்திட்டம் 3.3 மேற்படி அளவீடுகளின் தரவு படியமைத்தலும் படம் வரைகலைப் பணியும்**

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: 95

**கருத்திட்டம் 4.1 தரவுச் சேகரிப்புக்கு உதவியளித்தல்**

சேது சமுத்திரம் கப்பல் கால்வாய் பகுதியில் EIA ஆய்வின் நீர்நிலையவியல் தரவின் சேகரிப்பு

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: வெளிநாட்டு அமைச்சினால் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 4. நடத்தப்பட்ட பயிற்சி/விழிப்பியல் செயல்திட்டங்கள்

CARIS GIS பயிற்சி I - 2005 ஜூன்
CARIS GIS பயிற்சி II - 2005 செப்ரெம்பர்
இலங்கை கடற்படைக்கான ஊழியர்கோப்புக்கு பயிற்சி

## 5. வெளியீடுகள்

சம்பந்தப்பட்ட 08 மீன்பிடித் துறைமுகங்களின் அறுவடைக்குப் பின்னரான ஆழவளவியல் வரைபடங்களைச் சமர்ப்பித்தல்.

# உள்ளூர் நீரியல் வளங்கள், நீரியல் விருத்திப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** எம்.எச்.எஸ்.ஆரியரத்ன

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

2005ஆம் ஆண்டின் போது பத்துக் கருத்திட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டன. செய்திட்டங்களை மேற்கொள்வதற்காக ஆண்டின் ஆரம்பத்தில் தலைமை அலுவலகத்தில் நான்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும், அதே வேளை பிராந்திய நிலையங்களில் ஐந்து உத்தியோகத்தர்களும் இருந்தனர். பதில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேபாலிகா ஜயமான்ன பிரிவுக்கு பழையபடி பதவிக்கு அமர்த்தப்பட்டதுடன், RRCஇலிருந்து உத்தியோகத்தர் ஒருவர் உ.நீ.வ.நீ.பி.இன் தலைவராக கடமைகளை ஏற்றுக் கொண்டார். உ.நீ.வ.நீ.பி. இலிருந்து ஓர் உத்தியோகத்தரும், ரேகாவ பி.ஆ.நி. இலிருந்து ஓர் உத்தியோகத்தரும், கடொல்கெலே பி.ஆ.நி.இலிருந்து ஓர் உத்தியோகத்தரும் பிஎச்.டி கற்கைகளுக்காக செப்ரெம்பரில் சென்றனர். தனது பிஎச்.டி. ஐ முடித்துவிட்டு ஜுனில் ஓர் உத்தியோகத்தர் திரும்பவிருந்தார். ஆனால், பிஎச்.டி ஐ முடிப்பதற்காக டிசம்பர் 31 வரை லீவு நீடிப்பினைப் பெற்றுக் கொண்டார்.

ஆண்டின் போது கட்டிடங்களைப் புனரமைப்பதற்கு விசேட வலியுறுத்தல் செய்யப்பட்டது. உட்பிரதேசத்திற்குரிய/பிற நாட்டிற்குரிய அலங்கார மீன்களின் புதிய குஞ்சுகளின் இருப்பு சேகரிக்கப்பட்டன. சேதமடைந்த உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டன. அத்துடன் புதிய உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

ஆண்டின் போது பொறுப்பேற்கப்பட்ட கருத்திட்டங்களை பிரிவு வெற்றிகரமாக மேற்கொண்டதுடன், ஆனால் மீன்களின் நோயை அடையாளங்காணும் செய்திட்டங்களில் ஒரு சிறிதளவு பின்னடைவுகள் இருந்தன. ஏனெனில் நேரகாலத்திற்கு சாதனங்களும், இரசாயனங்களும் கிட்டவில்லை. இதனால், கருத்திட்டம் 1.4இன் கீழ் 2 ஆராய்ச்சி அம்சங்கள் மேற்கொள்ளப்பட முடியவில்லை. சுனாமியின் போது சாதனங்களும், இரசாயனங்களும் சேதமடைந்தன.

நீரின் தரத்தைச் சோதித்தல், அமைவிடத்தைச் சோதித்தல், மீன்களின் நோயை அடையாளங் காணுதல், சிகிச்சை அளித்தல், வேண்டுகோளின் பேரில் நீரியல் வாழ் விருத்தி மீது வேறு அரசாங்கத் திணைக்களங்களுக்கு பயிற்சிச் செய்திட்டங்கள் மற்றும் சேவைகள் ஆகியன தொடர்பான பெருமளவு சேவைகளை பிரிவு வழங்கியது. ரேகாவ பி.பி.நி. ஐச் சேர்ந்ததும், உ.நீ.வ.நீ. பிரிவிவைச் சேர்ந்ததுமான ஆராய்ச்சி உதவியாளர்கள் வருடம் முழுவதும் வேண்டுகோளின் பேரில் சமூக-பொருளாதார பிரிவின் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டனர்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் |
|---|---|---|---|---|
| 1 கரையோர நீர்வாழ் விருத்தி | 1 இறால் நீர்வாழ் விருத்தியில் வைரசு தொற்றுதல்களின் வழிகளை மூடுதல் | 660,000.00 | இ.பி.எம்.ஹீனெற்றிகல | ஜன-டிச 2005 |
| | 2. இறால் ஆரோக்கியம், சூழல் முகாமைத்துவம் | 260,000.00 | எ.எஸ்.எல்.இ.கொரயா | ஜன-டிச 2005 |
| | 3. கடல் பாசிகளினதும், பால்மீன்களினதும் வளர்ப்பையும், குடம்பியின் வாழ்தகவை யும், விருத்தியையும் பாதிக்கும் காரணிகளை நிர்ணயித்தல் | 535,000.00 | பி.எ.டி.அஜித் குமார | ஜன-டிச 2005 |
| 2. உள்ளூர் நீர்வாழ் விருத்தி | 4. இலங்கையின் கிராமியப் பகுதிகளில் கமத்தொழில்/நீர்வாழ் விருத்தி ஒன்றிணைந்த முறைமைகளை முன்னேற்றுதல் | 1,010,000.00 | எம்.எச்.எஸ்.ஆரியரத்ன<br>வி.பஹலவத்தஆரச்சி<br>எ.டி.டபிள்யு.ஆர்.ராஜபக்ஷ<br>எம்.ஜி.ஐ.எஸ்.பராக்ரம<br>எம்.கம்மன்பில | ஜன-டிச 2005 |
| | 5. சிறைபிடிக்கப்பட்ட உட்பிரதேசத்திற்குரிய அலங்கார மீன் இனங்களின் வளர்ப்புத் தொழில்நுட்பத்தினதும், வளர்ப்பினையும், வாழ்தகவினையும் பாதிக்கும் காரணி களினதும் ஆய்வு | 450,000.00 | எம்.ஜி.ஐ.எஸ்.பராக்ரம<br>பி.பி.எம்.ஹீனெற்றிகல | ஜன-டிச 2005 |

| | | | |
|---|---|---|---|
| 6. இலங்கையில் சட்டவிரோதமான பதிவு செய்யப்படாததும், ஒழுங்குபடுத்தப்படாததுமான (IUU) மீன்பிடித்தலை ஆய்வு செய்தல் | 770,000.00 | பி.எ.டி.அஜித் குமார<br>டி.ஏ.அத்துகோறள<br>யு.லியனகே | ஜன-டிச 2005 |
| 7. நன்னீர் வெளிநாட்டு அலங்கார மீன் இனங்களின் உயர் தரத்திலானதும், உயர் கிராக்கியிலானதுமான குஞ்சுகளின் இருப்பினை விருத்தி செய்தல் | 3,000,000.00 | எம்.ஜி.ஐ.எஸ்.பராக்ரம<br>இ.பி.எம்.ஹீனெற்றிகல | ஜன-டிச 2005 |
| 8. வர்த்தகரீதியில் முக்கியமான நீர் வாழ் தாவரங்களை விருத்தி செய்தல் | 525,000.00 | எ.எஸ்.எல்.இ.கொரயா | ஜன-டிச 2005 |
| 9. உள்ளூரில் கிட்டுகின்ற இயற்கையான உற்பத்திகளைப் பயன்படுத்தி அலங்கார மீன்களில் நிறத்தை விருத்தி செய்வது மீதான பரிசோதனை | 230,000.00 | எ.டி.டபிள்யு.ஆர்.ராஜபக்ஷ | ஜன-டிச 2005 |
| 10.இலங்கையின் தென் கரையோரத்தின் கரையை அண்மித்த கடலக சூழலில் முறைமைகள் மீது இந்து சமுத்திரத்தில் சுனாமியின் சூழலியல் தாக்கங்களைக் கண்காணித்தல் | 460,000.00 | வி.பஹலவத்தஆரச்சி | ஜன-டிச 2005 |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1.1 இறால் நீர்வாழ் விருத்தியில் வைரசு தொற்றுதல்களின் வழிகளை மூடுதல்

தொற்றப்படாத குஞ்சு இருப்புக்களினால் உற்பத்தி செய்யப்பட்ட இறால் குடம்பிகள் வைரசு தொற்றுதல்களைக் காட்டியுள்ளன. இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடைகாப்பு வளர்ப்புக் கட்டங்களின் போது சுத்தமான குடம்பிகள் தொற்றப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றது. வேறுபட்ட புவியியல் அமைவிடங்களில் வளர்ந்துள்ள மற்றும் வளர்ப்புக் கட்டங்களின் உள்ளேயும், வெளியேயும் வைரசு தொற்றுதலின் சகல சாத்தியமான வழிகளை நிர்ணயிப்பதற்காக முறைமையாக ஆய்வு செய்வதற்கே இவ்வாய்வு பொறுப்பேற்கப்பட்டது. Vibrio இனங்களுக்கு இடையிலான ஒன்று கூடுதலைக் கண்டறிதல் மீது ஆய்வு கரிசனையைக் கொண்டிருந்தது. வேறுபட்ட புவியியல் அமைவிடங்களில் வெளியில் வளர்க்கும் கட்டங்களின் உள்ளேயும், வெளியேயும் வைரசு தொற்றுதலின் சகல சாத்தியமான வழிகளை நிர்ணயிப்பதற்காக முறைமையான ஆய்வின் மீது இவ்வாய்வு அடிப்படையைக் கொண்டிருந்தது. இதனால் தற்போதைய வளர்ப்பு முறைமைகளில் Vibrio இனங்களுக்கு இடையிலான ஒன்றுகூடல் கண்டறியப்பட்டது.

சுனாமியின் மூலம் நுண்ணுயிரியல் ஆய்வுகூடமும், PCR ஆய்வுகூடமும் சேதமடைந்தன. ஆகவே, இவ்வாய்வு முடிக்கப்பட முடியவில்லை. இரு ஆய்வுகூடங்களைப் புதுப்பித்தல், உபகரணங்களை பழுதுபார்த்தல் (வரம்புகள், ஓட்டோ கிளேய்கள், அடைகாப்பான்கள்), உபகரணங்களையும், இரசாயனங்களையும் கொள்வனவு செய்தல் ஆகியன வருடம் முழுவதும் நடந்தன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 55 நிதிசார்: 99.94

**தடைகள்:**

ஆய்வுகூடத்தைப் பழுதுபார்ப்பதிலும், சாதனங்களைப் பழுதுபார்ப்பதிலும் தாமதம்.

2005ஆம் ஆண்டின் இறுதியிலேயே சாதனங்களின் பழுதுபார்த்தல் முடிக்கப்பட்டது.

### கருத்திட்டம் 1.2 இறால் ஆரோக்கியம், சூழல் முகாமைத்துவம்

நோய்வாய்ப்பட்ட இறால்களை நீருக்குள் கமக்காரர்கள் விடக்கூடாது என்ற போதிலும் பண்படுத்தப்படாத நோய்வாய்ப்பட்ட இறால்களை விடுவித்தல் இன்னுமே பதிவு செய்யப்படுகின்றன. நோய்க் காலங்களின் போது அதிகரித்த எண்ணிக்கையிலான இறால்களை பண்படுத்தப்படாத பிடிகளும், பொங்குமுக மீன்பிடி பதிவுகளும் காட்டுகின்றன. வளர்க்கப்பட்ட இறால்களில் வருடம் முழுவதும் வெள்ளைப் புள்ளி நோய்களைத் தவிர வேறு நோய்க் குணங்குறிகள் பதிவு செய்யப்பட்டன.
நீர் மூலத்திலும், வளர்ப்புக் குளங்களிலும் பக்டீரியா தரத்தையிட்டு விரிவான ஆய்வுகள் நோய்க் காலங்களின் போது

மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும். சூழல் மீதும், மற்றும் வேறு கிரத்தியேன்கள் மீதும் நோய்வாய்ப்பட்ட குணங்களைப் பரிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்களின் தாக்கத்தில் மேலும் ஆய்வுகள் விரிவாக ஆயப்படுவது அவசியமானதாகும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 89.5

**தடைகள்:**

வாகனம் கிடைக்காமை, இரசாயனங்களைக் கொள்வனவு செய்வதில் தாமதம்

### கருத்திட்டம் 1.3: கடல் பாசிகளினதும், பால் மீன்களினதும் வளர்ப்பையும், குடம்பியின் வாழ்தகவையும், விருத்தியையும் பாதிக்கும் காரணிகளை நிர்ணயித்தல்

பால் மீன்களும் (*Chanos chanos*) மற்றும் கடல் பாசிகளும் (*Lates calcarifer*) ஆழ்கடலில் இயற்கையாகவே வளர்கின்றன. வடமேற்குப் பகுதியில் உயர்வான வற்றுப்பெருக்குடன் கரைக்கு பால் மீன் குடம்பிகள் வருகின்றன. இருந்த போதிலும், பகுதியில் சிவில் குழப்பங்களின் காரணமாக கடந்த 20 ஆண்டுகளின் போது, குஞ்சுகளைச் சேகரிக்க முடியவில்லை. இதன்படி, நாட்டின் சந்ததித் தேவைக்கு உற்பத்தி செய்வதற்கு இந்த இனங்கள் செயற்கையாக வளர்க்கப்பட முடியும் என்பது நியாயமானதேயாகும். பால் மீன்கள் நன்னீருக்கும், உவர்நீருக்கும் தாக்குப்பிடிக்கும் என்பதனால், அவற்றை பல்லாண்டு நீர்த்தேக்கங்களில் வைத்துக் காப்பாற்றலாம். இரையாக தூனா மீன்பிடித்தலில் இது அதிகளவு கிராக்கியைக் கொண்டுள்ளது. இதனால் கடல் பாசிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் நல்லதொரு கிராக்கியைக் கொண்டுள்ளது.

இயற்கையான உணவு வளர்ப்பு மீது சோதனைகள் நடத்தப்பட்டன. இவை வெற்றிகரமாக முடிக்கப்பட்டன. மிதவை வலைக் கூடுகளில் ஆசிய கடல்பாசிகளின் (*Lates calcarifer*) சந்ததி இருப்பு முகாமைத்துவம் மீது SIDA/SAREC சர்வதேச செயலமர்வில் சுவரொட்டியொன்று சமர்ப்பிக்கப்பட்டது. கடல் பாசிகளின் அல்லது பால் மீன்களின் வளர்ப்பினை மேற்கொள்ள முடியாததினால், அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

முன்னேற்றம் (%) : பௌதீக: 50 நிதிசார்: 22.37

இயற்கையான உணவு வளர்ப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

**தடைகள்**

உட்கட்டமைப்பில் தவறுகைகள். சந்ததி மீன்களின் சேகரிப்பில் கஷ்டங்கள்

### கருத்திட்டம் 1.4: இலங்கையின் கிராமியப் பகுதிகளில் கமத்தொழில்/நீர்வாழ் விருத்தி ஒன்றிணைந்த முறைமைகளை முன்னேற்றுதல்

கிராமிய சனசமூகத்தினால் செய்யப்படக்கூடிய பலதரப்பட்ட குறைந்த ஆகுசெலவிலான நீர்வாழ்விருத்தி செயற்பாடுகள் மூலம் உள்ளூர் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேசிய மீன்பிடி அபிவிருத்தித் திட்டம் முன்னுரிமையை வழங்கியுள்ளது. கிராமிய நீர்வாழ் விருத்தியை முன்னேற்றுவதே இப்பிரச்சினையை கவனத்திற்கெடுப்பதற்கான வழிவகைகளில் ஒன்றாகும். இதன் பிரகாரம், பின்வருமாறு, இக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நான்கு ஆராய்ச்சி மூலத்துவங்கள் வடிவமைக்கப்பட்டன.

அ. *Puntius tittteya*இன் (Cherry barb) வளர்ச்சி, வாழ்தகவு மற்றும் இனப்பெருக்கம் மீது விட்டமின் Cஇன் தாக்கம்.

ஆ. சனசமூகப் பங்கெடுப்புடன் கிராமிய நீர்வாழ் விருத்தியை முன்னேற்றுதல்

இ. கடல் பாசி வளர்ப்பு

ஈ. நன்னீர் குடம்பிக்கு பின்னரான இறாலின் உற்பத்தி

### (அ) *Puntius tittteya*இன் (Cherry barb) வளர்ச்சி, வாழ்தகவு மற்றும் இனப்பெருக்கம் மீது விட்டமின் Cஇன் தாக்கம

இலங்கையில் முக்கியமாக உட்பிரதேசத்திற்குரிய அலங்கார மீன் இனங்களில் *Puntius titteya* (Chery barb) ஒன்றாகும். இவை ஏற்றுமதிக்காக பாரிய எண்ணிக்கைகளில் பண்படுத்தப்படாத வழியில் சேகரிக்கப்படுகின்றன. இதன் விளைவாக உள்ளூரில் மீன்கள் அழிந்து போகின்றன. பண்படுத்தப்படாத சேகரிப்பினைத் தடுப்பதற்காக, சிறைப்பிடித்தல் வளர்ச்சியில் கமக்காரர்கள் சம்பந்தப்பட வேண்டும்.

மீன் உணவில் அத்தியாவசியமான மூலப்பொருளாக விட்டமின் C (அஸ்கோபிக் அமிலம்) கருதப்படுவதுடன், இனப்பெருக்கச் செயற்பாட்டில் அஸ்கோபிக் அமிலத்தின் பத்திய முறை குறைநிரப்பு அம்சம் உறுதியான தாக்கங்களைக் கொண்டுள்ளது. ஆகவே, வளர்ச்சியையும், வாழ்தகவையும், முட்டை மற்றும் குடம்பியின் தரத்தையும் மதிப்பாயுமுகமாக *P.titteya*இன் போஷாக்கு நிலைமையை அதிகரிப்பதற்கு இவ்வாய்வு நடத்தப்பட்டது.

மீன் உணவில் உயர்வான விட்டமின் C *P.titteya*இன் வளர்ப்பு செயற்பாட்டினை உயர்த்துகின்றது. இம் முறையானது மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையையும், சினைப்படுத்தல் சதவீதத்தையும் அதிகரிக்கின்றது.

**தடைகள்**

கடோல்கெலே பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தில் வாகனம் இன்மை

### (ஆ) சனசமூகப் பங்கெடுப்புடன் கிராமிய நீர்வாழ் விருத்தியை முன்னேற்றுதல்

சனசமூகப் பங்கெடுப்புடன் கிராமிய நீர் வாழ் விருத்தியை முன்னேற்றுவதற்காக ஹம்பாந்தோட்டை கரையோர வலய முகாமைத்துவக் கருத்திட்டத்தினாலும் (HICZMP), ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரேகாவ, உஸ்ஸங்கொட மற்றும் கலமெற்றியாவுக்கான உலகளாவிய சூழல் வசதியினாலும் (GEFRUK) மூலத்துவம் (ஆ) நிதிசார்ரீதியாக ஆதரவளிக்கப்பட்டது. ஓரளவு தீவிரமாக நீர்வாழ் விருத்தி நடைமுறைகளில் உணவு ஆகுசெலவானது ஆகக்கூடுதலானது என்பதனால், ஆகுசெலவு குறைந்த மீன் உணவைத் தயாரித்தல் தேசிய தேவைகளில் ஒன்றாகும். இதன் பிரகாரம், தங்கல்ல துறைமுகத்திலிருந்து மீன் கழிவைப் பயன்படுத்தி ஆகுசெலவு குறைந்த நீர்வாழ் உணவு தயாரிக்கப்பட்டது. இது திலபியா (GIFT இனம்), முன்கூட்டிய சந்ததியையும், உயர் தரமான சந்ததியையும் வளர்த்தல், GIFTஐக் குளத்தில் வளர்த்தல், சனசமூகப் பங்கெடுப்புடன் GIFTஐக் கூடுகளில் வளர்த்தல், சிமெந்து தொட்டிகளில் பாரிய கட்டம் வரை நன்னீர் குடம்பிக்குப் பின்னரான இறால் வளர்ப்பு ஆகியனவற்றுக்காகச் சோதிக்கப்பட்டது.

தயாரிக்கப்பட்ட நீர்வாழ் உணவு 20-30% புரதத்தைக் கொண்டிருந்ததுடன், இது நாட்டின் நீர்வாழ் விருத்தி அபிவிருத்தியில் பயன்படுத்தப்பட முடியும்.

அடிமட்டத்திற்காக ஒரு துண்டுப் பிரசுரம் (சிங்களத்திலும், தமிழிலும்) தயாரிக்கப்பட்டதுடன், பிரதிகளை அச்சிடுதல் நடந்து கொண்டிருக்கிறது.

நிதிசார் முன்னேற்றம்: ஹம்பாந்தோட்டை கரையோர வலய முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கும் (HICZMP), ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரேகாவ, உஸ்ஸங்கொட மற்றும் கலமெற்றியாவுக்கான உலகளாவிய சூழல் வசதிக்கும் (GEFRUK) முறையே ரூபா 169,000.00 மற்றும் ரூபா 95,000.00 கிட்டியுள்ளது.

**தடைகள்**

(அ) சோதனைகளின் ஆரம்பத்திலேயே மீன் கழிவைச் சேகரிக்க முடியவில்லை. ஏனெனில், சுனாமியின் காரணமாக கடல் மீன்களின் இந்த உபயோகம் ஆகக் குறைந்திருந்தது.
(ஆ) கடல் பாசி வளர்ப்பு
(இ) நன்னீர் குடம்பிக்குப் பின்னரான இறாலின் உற்பத்தி

கருத்திட்டத்தின் இந்த இரு மூலத்துவங்களும் சுனாமியின் மூலம் பாதிப்படைந்ததினால், இவற்றை மேற்கொள்ள முடியவில்லை.

முன்னேற்றம் (%) : பௌதீக: 75 நிதிசார்: 26.72

### கருத்திட்டம் 1.5: சிறைபிடிக்கப்பட்ட உட்பிரதேசத்திற்குரிய அலங்கார மீன் இனங்களின் வளர்ப்புத் தொழில்நுட்பத்தினதும், வளர்ப்பினையும், வாழ்தகவினையும் பாதிக்கும் காரணிகளினதும் ஆய்வு

இயற்கையான சேகரிப்பினையும், சிறைபிடிக்கப்பட்ட நிலையில் வளர்கின்ற இனங்களையும் நன்னீர் அலங்கார மீன் கைத்தொழில் பிரதானமாக உள்ளடக்கியுள்ளது. இலங்கையின் உட்பிரதேசத்திற்குரிய மீன் இனங்களுக்கு உயர்வான கிராக்கியொன்று உள்ளது. உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ள பெருமளவு மீன் இனங்கள் ஏற்றுமதிக்காக பண்படுத்தப்படாமலேயே சேகரிக்கப்படுகின்றன. இது உட்பிரதேசத்திற்குரிய மீன் வளங்கள் அழிந்து போவதை விளைவிக்கின்றது. உட்பிரதேசத்திற்குரிய இனங்களை வளர்க்கும் ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் ஊடாக வளர்ப்பினையும், நோய் நிலைமைகளை அடையாளங் காண்பதையும் பாதிக்கும் சூழல் காரணிகள் ஆயப்பட்டன.

சிறைப்பிடித்தல் வளர்ப்பில் எல்லாமாக 11 மீன் இனங்கள் பயன்படுத்தப்பட்டன. பதினொரு இனங்களில் 8 இனங்கள் சிறைப்பிடித்தலில் வெற்றிகரமாக வளர்க்கப்பட்டன. இந்த இனங்கள் வருமாறு: Lay titteya (*Puntius titteya*), Dumbara pethiya (*Puntius plurotaenia* ), Dankudu pethiya (*Puntiussrilankensis*), Depulliya (*Puntius cumingii)*, Pathirana salaya (*Danio pathirana*), Bulath hapaya (*Puntiusnigrofasciatus)*, Thalkossa (*Belontia signata*), and Malpulutta (*Malpulutta kretseri*).

Gal pandi (*Garra ceylonensis*), Asoka pethiya (*Puntius asoka*) மற்றும் Heetha massa ஆகியன இன்னுமே வெற்றியீட்டவில்லை.

மீன் இனங்களின் மத்தியில் அடையாளம் காணப்பட்ட மிகவும் பொதுவான நோய் நிலைமை வெள்ளைப் புள்ளி நோயாகும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 5 நிதிசார்: 38.6

**தடைகள்**

வாகனங்கள் கிட்டவில்லை. நிருமாண வேலையில் தாமதம்.

**கருத்திட்டம் 1.6: இலங்கையில் சட்டவிரோதமான பதிவு செய்யப்படாததும், ஒழுங்குபடுத்தப்படாததுமான (IUU) மீன்பிடித்தலை ஆய்வு செய்தல்**

IUU மீன்பிடித்தலின் மதிப்பீடானது அறிக்கையிடப்படாத பிடிகளுக்கு மட்டுமன்றி, ஆனால் மீன் இருப்புக்களின் சுரண்டல் மட்டங்களில் அதிக செம்மையான மதிப்பிடுதலுக்கும் முக்கியமானதாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் IUU மீன்பிடித்தலின் ஆய்வுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதை FAO அங்கீகரித்துள்ளது.

இலங்கையின் நீர்த்தேக்கங்களில் ஆழாக்கு வலை மீன்பிடித்தலில் கண்ணறை கட்டுப்பாடுகளினதும், கியர் கட்டுப்பாடுகளினதும் காரணமாக, மீன்பிடி தரவு சேகரிப்பாளர்களுக்கு இந்த IUU மீன்பிடித்தலுக்கான தரவுகளை அளிப்பதில் மீனவர்கள் ஒத்துழைப்பதில்லை. இருந்த போதிலும், இலங்கையின் பெருமளவு நீர்த்தேக்கங்களில் சிறிய கண்ணறை (< 6.9 செ.மீ) ஆழாக்கு வலைகளும், அத்துமீறல் வலைகளும் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், மைய நீர்த்தேக்கங்களில் கடற்கரை கயிற்று வலைகளும், தடைசெய்யப்பட்ட வலைகளும், ஒற்றை-மெல்லிழை ஆழாக்கு வலைகளும் அளவுக்கதிகம் பயன்படுத்தப்படுவதுடன், ஆனால் தேசிய மீன்பிடி புள்ளிவிபரங்களில் இந்த தரையிறக்கங்கள் அறிக்கையிடப்படுவதில்லை. தேசிய உள்நாட்டு மீன் உற்பத்திக்கு அதன் பங்களிப்பினை ஆய்வதற்கும், மீன் இருப்புக்களைப் பேணுமுகமாக விஞ்ஞான ரீதியான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை வரையறுப்பதற்கும் IUU மீன்பிடித்தலை அளவிடுதல் முக்கியமானதாகும்.

தரவைப் பகுப்பாய்தல் நடந்து கொண்டிருந்தது. தரவு பகுப்பாயப்பட்ட பின்னர் விஞ்ஞானரீதியான அறிக்கையை வெளியிட முடியும். பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன:

- ஒற்றை - மெல்லிழை ஆழாக்கு வலைகள், கட்டு வலைகள், கடற்கரை கயிற்று வலை, மற்றும் சிறிய கண்ணாடியிலான ஆழாக்கு வலைகள் ஆகியன தடைசெய்யப்பட்டிருந்த போதிலும், உள்நாட்டு நீர் நிலைகளில் தொழிற்படுத்தப்பட்டன.
- 'சால தல' மீன்பிடித்தல் முழுமையாக பதிவு செய்யப்படாத மீன்பிடித்தலாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- கட்டுப்படுத்தப்படாத மீன்பிடித்தல் செயற்பாடாக < 3 1/2" வார்ப்பு வலைகள் அடையாளங் காணப்பட்டன.
- மிதமிஞ்சிய கடற்கரை கயிற்று வலை பயன்படுத்தப்பட்டதன் காரணமாக, திலபியாவின் (O.nilotics) LC பெறுமதி ராஜாங்கனை குளத்தில் குறைவடைந்துள்ளது.
- நீர்த்தேக்கங்களில் சிறிய திலபிலாவுக்கு எதுவித கெடுதலின்றி 16 மி.மீ. வலை பயன்படுத்தப்பட முடியும்.
- தரவைப் பகுப்பாய்தல் நடந்து கொண்டிருந்தது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: 51.5

**தடைகள்:**

2005 நொவம்பர் வரை தரவைப் பதிவதற்கு பிரிவில் கணனிகள் இருக்கவில்லை.

### கருத்திட்டம் 1.7: நன்னீர் வெளிநாட்டு அலங்கார மீன் இனங்களின் உயர் தரத்திலானதும், உயர் கிராக்கியிலானதுமான குஞ்சுகளின் இருப்பினையும விருத்தி செய்தல்

இலங்கையில் பிரசித்தமான ஏற்றுமதி முனைப்பிலான வர்த்தகங்களில் ஒன்றாக அலங்கார மீன் கைத்தொழில் விளங்குகின்றது. சில நன்னீர் வெளிநாட்டு அலங்கார மீன் வகைகளுக்கு ஏற்றுமதி மற்றும் உள்ளூர் சந்தையில் பெரும் கிராக்கியொன்றுள்ளது. வளர்ப்பு நோக்கங்களுக்காக உயர் தரத்திலான குஞ்சு இருப்பினை அலங்கார மீன் வளர்ப்போர் கோருகின்றார்கள். இதனால் அதிக இலாபங்களைப் பெறுமுகமாக அவர்கள் மீன் முட்டைகளின் அடைகாக்கும் வீதத்தையும், வளர்க்கும் போதும், விருத்தி செய்யும் போதும் மீன் குஞ்சுகளின் வாழ்தகவு வீதத்தையும் அதிகரிப்பதற்கு உதவியை நாடுகின்றார்கள். ஆகவே, மீன் முட்டைகளின் அடைகாக்கும் வீதத்தையும், குஞ்சுகளின் வாழ்தகவையும், உயர் தரத்திலான செயற்கை உணவை வகுப்பதையும் பாதிக்கும் காரணிகளை ஆய்வதற்கு அவசரமான தேவையுள்ளது.

சுனாமியின் மூலம் ஏற்கனவே இருந்த குஞ்சுகள் அழிந்ததினால், குஞ்சுகள் சேகரிக்கப்பட்டன. குஞ்சின் இருப்புக்களைப் பராமரிப்பதற்காக, வகைகளின் முன்னேற்றத்திற்கு தெரிவிலான வளர்ப்புச் சோதனைகள் நடத்தப்பட்டன. ஆகுசெலவு குறைந்த செயற்கை உணவுகள் வகுத்தமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டன.

குஞ்சு இருப்புக்களாக 15க்கு மேற்பட்ட வெளிநாட்டிலான அலங்கார இனங்கள் விருத்தி செய்யப்பட்டன. அந்த இனங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. Oscar (*Astronotus ocellatus*), Gold fish (*Carassius auratus*), Carp (*Cyprinus carpio*), Tetra sp. (*Paracheirodon spp.*), Barb sp. (*Barbus spp.*), Cat fish (*Phractocephalus* sp), Loach sp (*Acanthocobitis* sp), Fighters (*Betta splendens*), Angels (*Pterophyllum scalare*), Gouramy (*Colisa spp.*), Guppy (*Poecilia reticulata*), Mollies (*Poecilia latipinna*), Sward tails (*Xiphophorus helleri*), Platies (*Xiphophorus maculates*). அத்துடன் 20க்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான இனங்களும் கிட்டுகின்றன.

வரவு செலவுத் திட்டத்தில் சிமெந்து துண்டத்திலான தொட்டிகளின் (100 தொட்டிகள்) நிருமாணம் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால், கேள்வி நடைமுறையில் தாமதத்தின் காரணமாக அது நிருமாணிக்கப்படவில்லை.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 19.4

**தடைகள்:**

வாகனம் கிட்டவில்லை.

ஆண்டின் முதல் 6 மாதங்களின் போது அலங்காரப் பிரிவு புனரமைக்கப்பட்டது.

கேள்வி நடைமுறையில் தாமதம்.

### கருத்திட்டம் 1.8: வர்த்தகரீதியில் முக்கியமான நீர் வாழ் தாவரங்களை விருத்தி செய்தல்

உலகில் அலங்கார நீர் வாழ் தாவரக் கைத்தொழில் பாரிய கிராக்கியைக் கொண்டுள்ளது. இக் கைத்தொழில் பெரிதுமே பண்படுத்தப்படா சேகரிப்பிலேயே தங்கியுள்ளது. இது நாட்டில் நீர் வாழ் தாவரத்தின் உயிரின பன்னிலையாக்கத்தைப் பாதிக்கும். எனினும், இலங்கையில் பெருமளவு இனங்கள் விருத்தி செய்யப்பட முடியும். இயற்கையான இனப்பெருக்க நடைமுறைகளே கைத்தொழிலில் உள்ள பாரிய பிரச்சினையாகும்.

முக்கியமான இனங்களின் வளர்ச்சியையும், இனப்பெருக்கத்தையும் மேம்படுத்துவதற்கான முறைகளும், நடைமுறையிலான முறைகளுக்கு மேம்படுத்தல்களும் கைத்தொழிலின் விஸ்தரிப்புக்கு முக்கியமானவையாகும். குறைந்த ஆகுசெலவிலான விருத்தி செய்தல் முறைகளினதும், நடைமுறைகளினதும் ஊடாக, குடிசைக் கைத்தொழிலாக இக் கைத்தொழில் பிரசித்தப்படுத்தப்பட முடியும்.

2004ஆம் ஆண்டில் சுனாமியினால் சகல சேகரிக்கப்பட்டிருந்த தாவரங்களும் அடித்துச் செல்லப்பட்டன. அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் சூழலியல் அளவீடு ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டினுள் ஒரு சில இனங்கள் மட்டுமே சேகரிக்கப்பட முடிந்தது. இந்த விருத்திச் சோதனைகளில், சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொட்டிகள் தாவர வளர்ச்சியை குறைத்ததுடன், தொடர்ச்சியாக தொட்டிகள் சுத்திகரிக்கப்பட்ட பின்னரும் கூட ஒரு சில வாரங்களினுள் தாவரங்கள் இறந்தன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 70 நிதிசார்: 42.5

**தடைகள்**

சுனாமியினால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாக, 2005 ஒகஸ்ட் முதலே ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

வாகனங்கள் கிடைக்கவில்லை.
அவசியமான இரசாயனங்களைப் பெறுவதில் தாமதம்.
சுனாமியின் மூலம் சாதனங்கள் சேதமடைந்தன.

**கருத்திட்டம் 1.9: உள்ளூரில் கிட்டுகின்ற இயற்கையான உற்பத்திகளைப் பயன்படுத்தி அலங்கார மீன்களில் நிறத்தை விருத்தி செய்வது மீதான பரிசோதனை**

ஏற்றுமதி சந்தைக்கு மீன்கள் உற்பத்தி செய்யப்படும் போது மீன்களின் நிறமே கரிசனைக்கு எடுக்கப்படுவதற்கான அத்தியாவசியமான குணநலன்களில் ஒன்றாகும். உள்ளூரில் கிட்டுகின்ற குறைந்த விலையிலான உற்பத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம், ஏற்றுமதி மீன்களில் இயற்கையான நிறங்களை விருத்தி செய்வதற்கு இப்பரிசோதனையில் முயற்சி எடுக்கப்பட்டது.

ஏற்றுமதி தரத்திலான மீன் குஞ்சுகள் (கோல்டன் மொலி) கொள்வனவு செய்யப்பட்டு, ரேகாவ பி.அ.நி.இல் பராமரிக்கப்பட்டது. உள்ளூரில் கிட்டுகின்ற உற்பத்திகளை (கரட், பீட்ருட், பூசனி போன்ற) பயன்படுத்தி நிறத்தைச் சேர்த்து மீன் உணவுகள் தயாரிக்கப்பட்டன. இந்த உணவுகள் மீன்களுக்கு ஊட்டப்பட்டதுடன், கோரிக்கைவிடப்பட்ட நிறமானி இல்லாதபடியினால் சோதனைப் பனல் ஒன்றைப் பயன்படுத்தி நிறம் கண்காணிக்கப்படும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: 10.2

**தடைகள்:**

ரேகாவ, பி.ஆ.நி.க்கு வாகனங்கள் இல்லாமை.
நிறமானியைக் கொள்வனவு செய்ய முடியாமை.

**கருத்திட்டம் 1.10: இலங்கையின் தென் கரையோரத்தின் கரையை அண்மித்த கடலக சூழலில் முறைமைகள் மீது இந்து சமுத்திரத்தில் சுனாமியின் சூழலியல் தாக்கங்களைக் கண்காணித்தல்**

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

(i). நீர்கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டை வரையிலான தெற்குக் கரையோர வளைவின் வளைவே சூழலியல் இயற்கை வாழிடங்கள் மீது இந்து சமுத்திரத்தில் சுனாமியின் தாக்கம் மீதான துரித மதிப்பீடு முடிக்கப்பட்டுள்ளது.

(ii). நீர்கொழும்பு, ரேகாவ, மற்றும் மாவெல்ல ஆகியவற்றில் சுனாமியின் பின்னர் கடல்புற்கள் சூழலியல் முறைமைகளின் சூழலியல் சாராமாறிகளின் நீண்ட கால கண்காணித்தல் நடத்தப்பட்டுள்ளது.

(iii) இலங்கையின் தென் கரையோரத்தின் வழியே நீர்த்தாழைகளின் சூழலியல் சாராமாறிகளின் நீண்ட கால கண்காணித்தல் நடத்தப்பட்டுள்ளது.

(iv) பேருவளை மற்றும் ரேகாவ கற்பார்த்தொடர்களில் கடல்பாசி சூழலியல் சாராமாறிகளின் நீண்டகால கண்காணித்தல் நடத்தப்பட்டுள்ளது.

(v) மேற்படி சூழலியல் முறைமைகளுடன் இணைந்துள்ள கடற்றளவுயிரினத்துக்குரிய இயற்கை வாழிடங்களின் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. அவசியமான நடவடிக்கைக்காக இடைக்கால அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

**தடைகள்:**

ஒன்றுமில்லை.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 73

## 5. விஸ்தரிப்புப் பணி

1. நீர்த்தாழை தாவர வருக்கம் மீது பாடசாலைச் சிறுவர்களுக்கான விழிப்பியல் செய்திட்டம் > 3,000 மாணவர்கள்
2. மீன்பிடிப்போர்களினதும், மீன்பிடித்தல் சங்கங்களினதும் மத்தியில் அறிவைப் பரப்புதல் 30 மீனவர்கள்

3. ஜயவர்தனபுர, ருகுணு மற்றும் ரஜரட்டை ஆகிய பல்கலைக்கழகங்களில் கள கல்விச் செய்திட்டம் நடத்தப்பட்டது.
4. கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் உட்பிரதேசத்திற்குரிய மீன் விருத்தி நடைமுறைகளைச் சோதித்து, மீன் பிடித்தொழில் அமைச்சுக்கு அறிக்கையை வழங்குதல்.
5. பயிற்சித் திட்டங்கள் மூலம் உட்பிரதேசத்திற்குரிய சிறைபிடித்தல் விருத்தியின் அறிவைப் பரப்புதல் 60 நபர்கள்
6. அமைவிடத்தைச் சோதித்தலும், பண்ணை நிருமாணத்திற்கு அறிக்கைகளை வழங்குதலும்
7. மீன் பண்ணைகளில் நீரின் தரத்திற்கு அறிக்கையை வழங்குதல்
8. மீன் வளர்ப்பவர்களினால் கொண்டு வரப்பட்ட மீன் மாதிரிகளுக்கு நோய்களைக் கண்டறிதலும், சிகிச்சையளிப்புகளை சிபார்சு செய்தலும், நோய்க்கு அறிக்கைகளை வழங்குதலும் 15 நபர்கள்
9. பயிற்சித் திட்டங்கள் ஊடாக அலங்கார மீன் விருத்தியினதும், முகாமைத்துவத்தினதும் அறிவைப் பரப்புதல் 200 நபர்கள்
10. அலங்கார மீன்களை வளர்ப்போருக்கு தகவலையும், தொழில்நுட்பத்தையும் வழங்குதல்
11. நண்டை கொழுக்க வைத்தல் மீது சனசமூகத்திற்கு 2 நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது. 50 நபர்கள்
12. 10 நாட்களைக் கொண்ட அலங்கார மீன் வளர்ப்புப் பயிற்சிகள் (ஆண்டுக்கு 03 பயிற்சிகள்) 60 நபர்கள்

**விழிப்பியல் செய்திட்டங்கள்**

1. சேது சமுத்திர கால்வாய் கருத்திட்டத்திற்காக மன்னார் பகுதியில் நீர் தாழையினதும், கடல் புற்களினதும் மீதான மதிப்பீடு.
2. கரையோர சூழலியல் முறைமைகள் மீதான விழிப்பியல் செய்திட்டம்
3. CRMPஇலிருந்து வெளியார் நிதிப்படுத்தல்கள் மூலம் நீர்த்தாழை பூங்கா முன்னேற்றச் செயற்பாடுகள்
4. மாத்தறை மாவட்டத்தில் சுனாமிக்குப் பின்னரான ஆய்வுக் குழுவைப் பிரதிநிதிப்படுத்தியது.
5. மீன்பிடித் தொழில் அமைச்சினால் மாத்தறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நடமாடும் சேவையைப் பிரதிநிதிப்படுத்தியது.
6. நீர்த்தாழை பேணல் என்ற தலைப்பின் கீழ் NIFNE மாணவர்களுக்கு விரிவுரை ஆற்றப்பட்டது.

**வெளியீடுகள்**

NARA - SIDA சர்வதேச செயலமர்வுக்கான சுருக்கம்

1. ஆசிய கடல் bass lates calcarifer குஞ்சு இருப்பு முகாமைத்துவம் - அஜித் குமார, பி.எ.டி.
2. சிறைபிடிக்கப்பட்டுள்ள சில உட்பிரதேசத்திற்குரிய மீன் இனங்களின் வளர்ப்புத் தகுதியைப் பாதிக்கின்ற சில சூழல் மற்றும் நீரின் தர சாராமாறிகளின் பொருத்தமான வீச்செல்லைகள் - பராக்கிரம, எம்.ஜி.ஐ.எஸ்., கித்சிறி, எச்.எம்.பி, ஹீனற்றிகல, பி.பி.எம். ஜயசேகர, எம்.எஸ்.எஸ், ரூபிகா, ஜி.ஆர்.எச்.
3. அலங்கார மீன் வளர்ப்பு நடைமுறைகளையும், அவற்றின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் பாதிக்கும் பொதுவான நோய்கள் - ஹீனற்றிகல, பி.பி.எம்., பராக்கிரம, எம்.ஜி.ஐ.எஸ்., ஜயசேகர, எம்.எஸ்.எஸ்.
4. கடந்த கால அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு விசேட மேற்கோளுடன் நீர்கொழும்பு கடலேரியில் கடற் புல் சூழலியல் முறைமைகளில் மாற்றங்கள் - பஹலவட்டஆரச்சி, வி., அமரசிங்க, எம்.டி., ஜயமான்ன, எஸ்.சி.
5. இறால் பண்ணைக் கழிவுகளுக்கு உயிரியல் பரிகரிப்பு முறைகளின் பயன் - கொரயா, எ.எஸ்.எல்.இ., ஜயசிங்க, ஜே.எம்.பி.கே.
6. இறால் விருத்தி கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு எதிர்கால மூலோபாயங்கள் - கொரயா, எ.எஸ்.எல்.இ., ஜயசிங்க, ஜே.எம்.பி.கே.
7. நீர் வாழ் தாவர கைத்தொழிலினதும், எதிர்கால ஆராய்ச்சித் தேவைகளினதும் கண்ணோட்டம்- கொரயா, எ.எஸ்.எல்.இ.
8. ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான விசேட மேற்கோளுடன் இலங்கையில் கிராமிய நீர் வாழ் விருத்தியின் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கான சனசமூகப் பங்கெடுப்பு அணுகுமுறை - ஆரியரத்ன, எம்.எச்.எஸ்.
9. சனசமூகப் பங்கெடுப்புடன் நிலத்திலான குட்டைகளில் Macrobrachium rossenbergi என்ற நன்னீர் சிங்கி இறாலின் விருத்தி மீதான பூர்வாங்க ஆய்வு - ராஜபக்ஷ, டபிள்யு.டி.டபிள்யு.ஆர்., ஜயமான்ன, எஸ்.சி.
10. *Oreochromis niloticus* என்ற நிலே திலபியா சிறு மீன்களினதும், குஞ்சுகளினதும் உற்பத்தி முறைமைகளுக்கான அறிமுகம்.

**வேறு நிகழ்வுகளின் சுருக்கம்**

1. இலங்கை டச்சு கால்வாய் முந்தல் பகுதியில் இறால் நோயைக் கட்டுப்படுத்துவதில் உயிரினம் சார்ந்த பயன்- கொரியா, எ.எஸ்.எல்.இ., ஆசிய நீர் வாழ் விருத்தியில் 6ஆவது கருத்தரங்கு, மீன் சுகாதாரப் பிரிவு, ஆசிய மீன்பிடித் தொழில் சபை, கொழும்பு, இலங்கை.
2. தென் இலங்கையின் கரையோரப் பிராந்தியத்தில் கடலக கிரத்திகேனின் பருவகால மாறலைப் பாதிக்கும் உடற்றொழில் இரசாயன சாராமாறிகள் - கம்மன்பில, எம்., குமாரணதுங்க, பி.ஆர்.ரி.

3. இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம்.

கள அடிப்படையிலான செயற்பாடுகள் ஊடாக சூழல் கல்வி: மாற்று முகவர்களாக ஆசிரியர்கள் - கருணாநாயக்க, எஸ்., பல்லேவத்த, என்., ஜயசூரிய, ரி., ஜயமான்ன, எஸ்.சி. (சுருக்கம்).

### ஆராய்ச்சிக் கட்டுரைகள்

1. இலங்கையில் கிராமிய நீர்வாழ் விருத்தியை முன்னேற்றுவதற்காக மழை நீரினால் இயக்கப்படும், குறைந்த ஆகுசெலவிலான, சிறிய அளவிலான திலபியா அடைகாப்பான் (நுண்-அடைகாப்பான்) - உலர் வலயத்திற்கான விசேட மேற்கோள் - ஆரியரத்ன, எம்.எம்.எஸ்., தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகைக்கு அனுப்பப்பட்டுள்ளது.
2. சனசமூகப் பங்கெடுப்பு மூலம் இலங்கையில் கிராமிய நீர்வாழ் விருத்தியை முன்னேற்றுதல் - ஆரியரத்ன, எம்.எச்.எஸ், சில்வா, பி.கே.டீ., (2005) Sri Lanka Journal of Aquatic Sciences, தொகுதி 11க்கு அனுப்பப்பட்டுள்ளது.

### நூல்கள்

அலங்கார மீன் வளர்ப்பு (அச்சகத்தில்)

அலங்கார மீன் கைத்தொழிலில் தொட்டியைத் தயாரித்தலும், பராமரித்தலும், நீர் முகாமைத்துவமும்.

### துண்டுப் பிரசுரங்களும், நூலேடுகளும்

ஐந்து சிங்கள துண்டுப் பிரசுரங்களும், நூலேடுகளும் வெளியிடப்பட்டன.

### அறிக்கைகள்

1. கரையோர சூழலியல் முறைமைகள் மீது சுனாமி அலைகளின் தாக்கம் மீதான இடைக்கால அறிக்கை
2. சேது சமுத்திரம் கால்வாய் கருத்திட்டத்திற்கு மன்னார் பகுதியில் நீர்த்தாழை, கடல் புற்கள் மீதான மதிப்பீடு
3. அத்திடிய ஏரியில் மீன்களின் மரணத்திற்கான அறிக்கை

### செயலமர்வுகளின் பங்கெடுப்பு

1. “சக்திமிக்கதாக ஆலோசனையை எழுதுதல், ஆராய்ச்சியை நடத்துதல், வெளியிடுதல்” மீதான செயலமர்வு - SLASS (07).
2. “மீன் நோயை அறிதலும், சுகாதார முகாமைத்துவமும்” மீதான செயலமர்வு - களனி பல்கலைக்கழகம் (04)
3. இலங்கையில் பல்-பயன்பாட்டு நீர் வாழ் முறைமைகளின் கம இரசாயனங்களை நிருவகித்தல் மீதான செயலமர்வு - பேராதனைப் பல்கலைக்கழகம் (01)
4. அத்துமீறுகின்ற தாவரவினத்தினதும், விலங்கினத்தினதும் தேசிய பட்டியலை மதிப்புரைத்தல் மீதான செயலமர்வு
5. இலங்கையில் நீர்த் தேக்கங்களின் பேணலினதும், முகாமைத்துவத்தினதும் மீதான குறுகிய பாடநெறி (PGIS), பேராதனை (02)

### பயிற்சி (கடல் கடந்த நாடுகள்)

1. உயர்தரமான நன்னீர் நீர் வாழ் விருத்தி, உள்நாட்டு நீர்வாழ் விருத்தி ஆராய்ச்சி நிறுவனம், தாய்லாந்து (01)
2. கரையோர வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டத்தின் கீழ் உள்ளூர் மட்ட உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி (01).

### தேசிய

1. SLAAS (03)
2. SLAFAR (05)

### சர்வதேசக் கருத்தரங்கு

இலங்கையில் ஆசிய நீர் வாழ் விருத்தியில் நோய்கள் மீதான 6ஆவது கருத்தரங்கு (02 உத்தியோகத்தர்கள்).

# தகவல் தொழில்நுட்பப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** திரு.எ.பீ.எ.கே.குணரத்ன

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

நீர் வாழ் வளங்களின் முகாமைத்துவத்திற்கும், பேணலுக்கும், அபிவிருத்திக்கும் சகல பங்குடமையாளர்கள் மத்தியில் தகவலைத் திரட்டுவதற்கும், படிநிலைப்படுத்துவதற்கும், பரிமாறுவதற்கும், பரப்புவதற்கும் தகவல் தொழில்நுட்ப மேடையொன்றை வழங்குவதற்கான பொறுப்பினை தகவல் தொழில்நுட்பப் பிரிவு கொண்டுள்ளது.

கணனி பிரயோக முன்னேற்றத்தைப் பொறுப்பேற்றுள்ள பிரிவானது 'இன்டர்நெற்' சேவைகளையும், புவியியல் தகவல் முறைமைகளையும், சேய்மை கூருணர்வுப் பகுத்தலையும், மாதிரிப்படுத்தலையும், கணனிப் பிரயோகங்களில் பயிற்சியையும் வழங்குகின்றது. நீர் வாழ் வளங்கள் மீது உள்ளூர் மற்றும் பிராந்திய மட்ட தரவுத் தளங்களை பிரிவு விருந்தோம்புவதுடன். நீர் வாழ் வளங்கள் ஆராய்ச்சியில் சம்பந்தப்பட்டுள்ள வேறு நிறுவனங்களுக்கான தொடர்புகளையும் வழங்குகின்றது.

ஆண்டின் முதலாவது காலாண்டின் போது, சுனாமியினால் பாதிக்கப்பட்ட கணனி வலைப்பின்னலையும் கணனிகளையும் பழுதுபார்ப்பதில் பணியாளர் ஈடுபட்டிருந்தனர். மூன்று புதிய உத்தியோகத்தர்கள் பட்டதாரி பயிற்சியாளர் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தனர்.

ஒரு தகவல் உத்தியோகத்தரையும், 01 கருத்திட்ட உதவியாளரையும் (GIS/RS), 01 கருத்திட்ட உதவியாளரையும் (தரவுத் தளம்), 01 கருத்திட்ட உதவியாளரையும் (முகாமைத்துவம்) மற்றும் 01 உதவி வலைப்பின்னல் நிருவாகியையும் பிரிவின் பணியாளர் உள்ளடக்கியிருந்தனர்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| செயற்திட்டம் | | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா/மி) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. த.தொ. பிரயோக முன்னேற்றமும், ஆதரவும் | 1.1 | 'நாரா' இணைய தளத்தையும், வேறு 'இன்டர்நெற்' சேவைகளையும் முன்னேற்றுதலும், தரமுயர்த்தலும் | 2.4 | ஏ.பீ.எ.கே.குணரத்ன ஜானக லொக்குகமகே | தொடர்ச்சியானது | |
| 2. GIS மற்றும் சேய்மை கூருணர்வு | 2.1 | நீர்கொழும்பு நீரேரியில் கூருணர்விலான பகுதியின் முகாமைத்து வத்திற்கான GIS மற்றும் சேய்மை கூருணர்வு மூலோபாயங்களை முன்னேற்றுதல் | 0.15 | ஏ.பீ.எ.கே.குணரத்ன | 2003 | 2007 |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1.1 'நாரா' இணைய தளத்தையும், வேறு 'இன்டர்நெற்' சேவைகளையும் முன்னேற்றுதலும், தரமுயர்த்தலும்

'நாரா'வுக்கு தோதான தகவல் தொழில்நுட்பத்தையும், 'இன்டர்நெற்' சேவைகளை வழங்குவதையும், 'நாரா' இணைய தளம் ஊடாக தகவலைப் பரப்புவதையும் தொடரும் ஒரு கருத்திட்டமே இதுவாகும். ஆண்டின் முதலாவது காலாண்டின் போது, சுனாமியினால் பாதிக்கப்பட்ட கணனி வலைப்பின்னல் தொகுதிகளும், தனிப்பட்ட கணனிகளும், வேறு சுற்றாடல்களும் பரிசோதிக்கப்பட்டதுடன், மீட்கப்படக்கூடிய பொருட்களும் பழுதுபார்க்கப்பட்டன. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மீது தரவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கான தரவுத் தளமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இணைய தளத்திலான ஈ-மெயில் முறைமை தரமுயர்த்தப்பட்டது. நன்கு வடிவமைக்கப்பட்ட மாதிரித் தகட்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் இணைய தளம் தரமுயர்த்தப்பட்டது. வேறுபட்ட ஒழுக்காறுகளில் கருத்துப் பரிமாறல் குழுக்களை அமைப்பதற்கான வசதிகளை வழங்குமுகமாக செய்திப் பலகையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆண்டின் போது பணியாளர்கள் தனிப்பட்ட கணனியைப் பழுதுபார்ப்பதிலும், தரமுயர்த்துவதிலும் ஈடுபட்டிருந்தனர். CARP வலைப்பின்னலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் ஆராய்ச்சி ஆகுசெலவை மதிப்பாய்வதற்கு பயன்படுத்தப்படும் INFORM

தரவுத்தளம் முடிக்கப்பட்டு, CARPக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நிருவாகப் பிரிவுக்கு ஆளணியினர் தகவலைக் களஞ்சியப்படுத்துவதற்கான தரவுத்தளம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆண்டின் போது 'நாரா'வில் நடத்தப்பட்ட வேறுபட்ட செயலமர்வுக்கான அச்சிடுதல் பணியில் பிரிவு ஈடுபட்டிருந்தது.

அட்டவணைப்படுத்தல் முறைமையை அமைப்பதற்கான மென்கணியம் விநியோகஸ்தரினால் விநியோகிக்கப்படவுள்ளது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: 100

### கருத்திட்டம் 2.1: நீர்கொழும்பு நீரேரியில் கூருணர்விலான பகுதியின் முகாமைத்துவத்திற்கான GIS மற்றும் சேய்மை கூருணர்வு மூலோபாயங்களை முன்னேற்றுதல்

ஆண்டின் முதலாவது காலாண்டின் போது, சுனாமி தொடர்பிலான மேலதிகப் பணிகளைக் கவனித்ததன் காரணமாக கருத்திட்டச் செயற்பாடுகள் தாமதமடைந்தன. நீர்கொழும்பு கடலேரியிலும், சூழவுள்ள பகுதியிலும் உள்ள கரையோர இயற்கை வாழிடங்கள் அடையாளங் காணப்பட முடியும். 2002 ஒகஸ்டில் எடுக்கப்பட்ட பிரதிமை ஓரளவு நீர்வாழ் இயற்கை வாழிடங்களைத் தெளிவாகக் காட்டியது. கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரை முருகைக் கற்பார்த்தொடர் 10 மீ. ஆழம் வரை அடையாளங் காணப்பட முடியும். ஒகஸ்டின் போது கடல் மட்டமானது ஆண்டின் வேறு மாதங்களை விடக் குறைவானதாகும் என அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இயற்கை வாழிட கண்காணித்தல் ஆய்வுக்காக ஓரளவு நீர்வாழ் தாவர வருக்கத்தினையும், முருகைக் கற்பார்த்தொடரையும் எல்லை பிரிப்பதற்கு ஒகஸ்டில் எடுக்கப்பட்ட செய்மதி பிரதிமையைப் பெற்றுக் கொள்வதற்கு விதந்துரைக்கப்படுகின்றது. அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: 100

### வெளிவாரி நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்கள்:

### அவுஸ்திரேலிய சர்வதேச கமத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தினால் (ACIAR) நிதிப்படுத்தப்பட்ட GISஐப் பயன்படுத்தி வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித்தலுக்கான பருவகால தொட்டிகளின் தெரிவு

தெரிவு செய்யப்பட்ட பருவகால தொட்டிகள் மீது நீரேந்துபரப்பினை எல்லை பிரிப்பதற்கு உயரத்தின் தரவு இல்லாமையின் பிரச்சினைக்கு கருத்திட்டம் முகங்கொடுக்கின்றது. எதிர்பார்க்கப்பட்டவாறு நீரேந்துபரப்பு தாவர வருக்கத்திற்கும், மீன் உற்பத்தித்திறனுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க உறவு கண்டறியப்பட முடியவில்லை. மீன்பிடித்தல் மற்றும் நீர்வாழ் விஞ்ஞானங்களில் GIS இடஞ்சார்ந்த பகுப்பாய்வுகள் மீதான செயலமர்வொன்றின் முடிவுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. இது அதன் கருத்துக் கோர்வையின் தொகுதி 2இல் வெளியிடப்பட்டது.

### 2. சேது சமுத்திரம் கப்பல் கால்வாய் கருத்திட்டம்

கூருணர்விலான இயற்கை வாழிடத்தை திட்டமிடுவதற்காக ஒக்ரோபர் இறுதியின் போது யாழ்ப்பாணத்திற்கு களப் பயணமொன்று செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட செய்மதி பிரதிமைகளை கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டு அமைச்சினால் நிதியங்கள் கிட்டச் செய்யப்படவில்லை. எனினும், கிட்டுகின்ற Landsat பிரதிமையைப் பயன்படுத்தி முருகைக் கற்பார்த் தொடர்கள் திட்டமிடப்பட்டன. முருகைக் கற்பார்த்தொடர் பகுதியின் விஸ்தீரணம் 4.68 கி.மீ.$^2$ எனக் கண்டறியப்பட்டது.

## 4. வெளியீடுகள்

### ஆராய்ச்சி கட்டுரைகள்

### சர்வதேச

1. டீ சில்வா, எஸ்.எஸ்., டபிள்யு. எம்.எச்.கே. விஜேநாயக்க, எ.பீ.எ.கே. குணரத்ன மற்றும் யு.எஸ்.அமரசிங்க, 2005. வளர்ப்பு - அடிப்படையிலான மீன்பிடிச் செயற்பாடுகளுக்கு பல்லாண்டு சாராத நீர்த்தேக்கங்களின் தெரிவுக்கான அளவினை விருத்தி செய்வதற்காக GIS கருவிகளைப் பயன்படுத்துதல். மீன்பிடி, நீர்வாழ் விஞ்ஞானங்களில் GIS இடர் சார்ந்த பகுப்பாய்வுகள் (தொகுதி 2) பதிப்பு: ரி.நிஷாடா, பி.ஜே. மற்றும் சி.இ.ஹொலிங்வோர்த், மீன்பிடி, நீர்வாழ்வு GIS ஆராய்ச்சிக் குழு, ஜப்பான், பக்.559-572

**பிராந்திய/உள்ளூர்**

1. குணரத்ன, எ.பீ.எ.கே.. 2005: நீர்வாழ் வளங்கள் முகாமைத்துவத்திற்கான தரவையும், தகவலையும் தோற்றுவித்தல்: GIS மற்றும் சேய்மை கூருணர்வுப்படுத்தல் அணுகுமுறை (சுருக்கம்) இலங்கையில் மீன்பிடி, நீர் வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வின் செயலமர்வுக் கருத்துக் கோர்வை, மார்ச் 29 - 31, 2005, 'நாரா', கொழும்பு

2. விஜேநாயக்க, டபிள்யு.எச்.எம்.கே., ஜயசிங்க, யு.எ.டி., அமரசிங்க, யு.எஸ்., குணரத்ன, எ.பீ.எ.கே. மற்றும் சேனா எஸ்.டீ.சில்வா (2005) சேய்மை கூருணர்வு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பல்லாண்டு சாரா நீர்த்தேக்கங்களில் உருவவியல் குணவியல்புகளினதும், நீர்வாழ் தாவர வருக்கத்தினதும் தொகைரீதிப்படுத்தல், இலங்கையில் மீன்பிடி, நீர் வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வின் செயலமர்வுக் கருத்துக் கோர்வை, மார்ச் 29 - 31, 2005, 'நாரா', கொழும்பு

## 5. நடத்தப்பட்ட பயிற்சி/விழிப்பியல் செய்திட்டங்கள்

1. பேராதனை, PGIAஇல் 2005 டிசம்பர் 12இலும், 13இலும் INFORM மீதான வருடாந்த பயிற்சித் திட்டத்தில் திருமதி ஜயரத்ன பங்கெடுத்தார்.

## 6. வேறு செயற்பாடுகள்

1. கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபைக்கு (CARP) INFORM தரவுத் தளம் சமர்பிக்கப்பட்டது.

**தடைகள்**

i. ஓரளவுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பணியாளர் தகவல் தொழில்நுட்பத் துறையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.
ii. தனிப்பட்ட கணனியின் பராமரிப்புடன் ஈடுபட ஒரு நபர் தேவையாகும்.
iii. இடப்பரப்பு இன்மை

# நூலக, தகவல் பிரிவு

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

நீரியல் கைத்தொழிலில் ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பயனுள்ள தகவலைச் சேகரித்தல், பரப்புதல், மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான பங்கினை நூலக, தகவல் பிரிவு வகிக்கின்றன. பிரிவின் மையமாக நூலகம் விளங்குவதுடன், பலதரப்பட்ட தகவலை வளங்களின் ஊடாக பரப்பப்பட்ட விஞ்ஞானரீதியிலான அறிவுக்கு அடைதல் மூலம் விஞ்ஞானிகளின் மனதின் புதுமாற்றத்தினாலும், செயல்நோக்கத்தினாலும் ஆராய்ச்சி ஆய்வுகளை முழுமைப்படுத்துவதில் தகவலின் சேகரிப்பு, ஒழுங்குபடுத்தல், மற்றும் பரப்புதல் ஆகியவற்றில் பிரதானமாக நோக்கினைக் கொண்டுள்ளது.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| திட்டம் | | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. நூலக, தகவல் பிரிவு | 1.1 | இலங்கையில் நீர்வாழ் வளங்கள் துறைக்குச் சேவையாற்றுவதற்காக ஒருங்கிணைப்பு வலைப்பின்னல் நூலகத்தையும், தகவல் முறைமையையும் தாபித்தல் | 0.231 | வீ.ரூபசிங்க<br>எஸ்.லியனஆரச்சி<br>ஒ.கே.பி.நந்தன | ஜன 2005 | டிச 2005 |
| | 1.2 | நூலக வளங்களைக் கையகப் படுத்தல் | 1.93 | வீ.ரூபசிங்க<br>எஸ்.லியனஆரச்சி<br>ஒ.கே.பி.நந்தன | ஜன 2005 | டிச 2005 |
| | 1.3 | வளங்களைப் பங்கிடுதல் | 0.70 | வீ.ரூபசிங்க<br>ஒ.கே.பி.நந்தன<br>எஸ்.லியனஆரச்சி | ஜன 2005 | டிச 2005 |
| 2. விஞ்ஞானரீதியான சஞ்சிகைளை வெளியிடுதல் | 2.1 | மீன்பிடி, நீரியல் வளங்கள் தொடர்பான விஞ்ஞான ரீதியான தகவலை வெளியிடுதல் | 0.4 | எஸ்.சி.ஜயமான்ன<br>என்.சுரேஷ்குமார்<br>ஒ.கே.பி.நந்தன | தொடர்ச்சியானது | |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1.1 இலங்கையில் நீர்வாழ் வளங்கள் துறைக்குச் சேவையாற்றுவதற்காக ஒருங்கிணைப்பு வலைப்பின்னல் நூலகத்தையும், தகவல் முறைமையையும் தாபித்தல்

கருத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு: (அ) தேசிய நீரியல் வளங்கள் மீதான தகவலைப் பெறுவதற்கு ஆர்வம் கொண்டுள்ள யாராவது ஒருவர் 'நாரா' நூலகத்திற்கு வராமல் அடைதலைக் கொண்டிருப்பதை இயலச் செய்தல் மற்றும் (ஆ) அவற்றின் உபயோகிப்பாளர் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நூலகத்தின் 'மல்ரி மீடியா'வில் தகவலைக் கிடைக்கச் செய்தல் மற்றும் அவற்றின் குறிப்பான தேவைகளுக்குத் தொடர்பான தகவலை அடைதல்.

அக்கறையிலான தரப்புகளுக்கு 'நாரா' இணையதளம் ஊடாக கணனிமயப்படுத்தப்பட்ட நூல்விபரப்பட்டியல் தரவுத்தளத்திற்கான அடைதல் வழங்கப்பட்டது. இணைய தளம்: www.nara.ac.lk

பட்டதாரி மாணவர்களுக்கு சேவைகளை நூலகம் வழங்கியுள்ளதுடன், வேறுபட்ட பகுதிகளிலிருந்து வந்த உபயோகிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 1013 ஆகும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 60 நிதிசார்: 70

### கருத்திட்டம் 1.2 நூலக வளங்களைக் கையகப்படுத்தல்

சஞ்சிகைகளுக்கு சந்தாக்கள் செலுத்தப்பட்டதுடன், நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

கொள்வனவு செய்யப்பட்ட சஞ்சிகைகளினதும், நூல்களினதும் பட்டியல் கீழே வழங்கப்பட்டுள்ளது:

**நூல்கள்**

1. Tam. N.F.Y. , Field Guide to Hong Kong Mangroves Acc. 4514
2. Tam. N.F.Y., Hong Kong Mangroves Acc.4515
3. Valavanis, Vasilis d, Geographic Information systems in Oceanography and Fisheries Acc.4531

**சஞ்சிகைகள்**

1. Fresh Water Biology vol.50 (1 - 12)
2. Fisheries Oceanography vol.14 (1 - 3)
3. Aquaculture Nutrition vol.11 (1 - 6)
4. Fisheries Management & Ecology vol.12 (1 - 6)
5. Readers Digest (Feb-Dec.)
6. Aquaculture vol.241, vol . 250
7. Time vol.165 (1 - 25), vol. 166 (1 - 22)
8. Fortune vol. 151 (1 -11), vol.152 (1 -10)

முன்னேற்றம் (%) : பௌதீக: 50 நிதிசார்: 50

## கருத்திட்டம் 1.3 வளங்களைப் பங்கிடுதல்

நீர்வாழ் வளங்கள் தொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழகம் - PGIAஇலிருந்து 12 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

1. நமராமே, எஸ்.வை., மாசுபடுத்தலை மதிப்பிடுதல்
2. சில்வா, இ.ஐ.எல்., மாசுபடுத்தலும், உயிரியல் பன்னிலையாக்கமும்
3. ராமசாமி, எம்.எஸ்., மாசுபடுத்தல், கொள்ளை நோயியல் பரவுகின்றவை
4. வீரசூரிய, எஸ்.வி.ஆர். மற்றும் திசநாயக்க, சி.பீ., இலங்கையில் குடிநீரின் இரசாயனத் தரம்
5. முனவீர, ஜி.கே., கம-இரசாயனங்களும், மறுதலையான சூழலியல் தாக்கங்களும்
6. முனவீர, எல்., பூகோள வெப்பவியல், இலங்கையின் நிலைமை
7. பொன்சேகா, ஜி.என்., சூழல் நட்புறவிலான சக்தி மூலங்கள்
8. சித்திரவடிவேல், கே., யாழ்ப்பாண கடல் ஏரியில் உண்ணத்தக்க நண்டுகளைப் பிடித்தல் மற்றும் இனங்கள் அடக்கத்தின் அம்சங்கள்
9. ரவீந்திரன், போதைப் பொருட்களைக் கண்டறிவதற்கு சாம்பல் நிற கீரியைப் பயன்படுத்தல்
10. சித்திரவடிவேல், கே., யாழ்ப்பாணம் கடல்ஏரியில் இறால் பிடித்தலில் பயன்படுத்தப்படும் பிரதான மீன்பிடித்தல் கருவிகளின் செயற்றிறன்
11. விக்ரமசிங்க, யு. மற்றும் டயஸ், ஆர்.கே.எ்ஸ்., பேரை ஆற்றின் தென் மேற்கு தொகுதியில் *Chironimid* குடம்பியின் பன்னிலையாக்கமும், சில சூழலியல் அம்சங்களும்
12. திசநாயக்க, சி.பீ., முழுச் சூழலின் விஞ்ஞானம்

முன்னேற்றம் (%) : பௌதீக: 60 நிதிசார்: 60

## 4. வெளியீடுகளும், விஞ்ஞானரீதியிலான சஞ்சிகைகளும்

2005ஆம் ஆண்டின் போது 'நாரா' ஆசிரியர் பீட சபை நியமிக்கப்படவில்லை. மாற்றீடாக, கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன மற்றும் திரு.சுரேஷ்குமார் ஆகியோரை அடக்கி ஆசிரியர் பீடக் குழுவொன்று 2005 மேயில் நியமிக்கப்பட்டது. இக் குழு குறுகிய காலத்திற்கு (2005 மே - செப்ரெம்பர்) மட்டுமே பணியாற்றியது. ஏனெனில் நிருவாகத்தினால் குழு செல்லுபடியற்றதாக்கப்பட்டது. ஆகவே, சஞ்சிகையின் வெளியீடு மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், நிதிசார் ஒதுக்கீடும் பயன்படுத்தப்படவில்லை.

2005 மே - செப்ரெம்பரின் போது, பின்வரும் பணிகளை குழு முடித்துள்ளது.

1. 'நாரா' சஞ்சிகை தொகுதி 37க்கு விஞ்ஞானக் கட்டுரைகளை வரவழைத்துள்ளது. கிடைக்கப்பெற்ற எட்டுக் கையெழுத்துப் பிரதிகள் மதிப்பாயப்பட்டதுடன், அவசியப்பட்ட திருத்தங்களுக்காக கட்டுரையாசிரியர்களுக்கு மீள அனுப்பப்பட்டது.

2. பின்வரும் துண்டுப் பிரசுரங்கள் பதிக்கப்பட்டன

1. சிங்களத் துண்டுப் பிரசுரமொன்று திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அலங்கார மீன்களை வளர்த்தல்
உட்பிரதேசத்திற்குரிய அலங்கார மீன்களை வளர்த்தல்
சேற்று குட்டைகளை தயாரித்தல்
அலங்கார மீன் வளர்ப்பு செயற்பாடுகளில் தோன்றும் பிரச்சினைகள்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: சஞ்சிகையின் வெளியீடு செய்யப்படாததினால் பயன்படுத்தப்படவில்லை.

# கடல்சார் உயிரியல் வளங்கள் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி (திருமதி) சம்பா அமரசிறி

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

வாழும் கடல்சார் வளங்களின் முகாமைத்துவத்தினதும், அபிவிருத்தியினதும் மீது ஆராய்ச்சியை நடத்துவதற்கான பொறுப்பைக் கடல்சார் உயிரியல் வளங்கள் பிரிவு கொண்டுள்ளது.

இரு பாரிய துறைகள் மீது ஆராய்ச்சி நோக்கினைக் கொண்டிருந்தது:

மீன்பிடி மூலவளங்களை நிலைத்திருத்தத்தக்கதாகப் பயன்படுத்தல்

சூழலியல்ரீதியில் முக்கியமான கடலக இயற்கை வாழிடங்களினதும், மூலவளங்களினதும் பேணலும், முகாமைத்துவமும்

பிரிவின் செயற்திட்டம் பின்வரும் மூன்று ஆராய்ச்சி செய்திட்டங்களைக் கொண்டுள்ளது: மீன்பிடி மூலவளங்களின் பேணலும், பராமரிப்பும், முருகைக் கற்பார்த்தொடரின் முகாமைத்துவம் மற்றும் ஆமைகளின் பேணலும், முகாமைத்துவமும். பிரதான ஒழுக்காறுகளை உள்ளடக்குவதற்காக, ஒன்பது ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் 2005ஆம் ஆண்டில் நடத்தப்பட்டு, முடிக்கப்பட்டது.

பிரிவின் பதவியணியினர் 09 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும், 11 ஆராய்ச்சி உதவியாளர்களையும், 12 மாதிரிப்படுத்துனர்களையும், 02 நீர்மூழ்கி உதவியாளர்களையும், 1 ஆய்வுகூடச் சிப்பந்தியையும், 2 தரவுப் பதிவு இயக்குனர்களையும், ஒரு தட்டச்சாளரையும், 2 தொழிலாளர்களையும் அடக்குகின்றது. கருத்திட்டத் திட்டமிடல், அமுலாக்கல், மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றுக்கான பொறுப்பை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் கொண்டுள்ளனர். கள தரவைச் சேகரித்தல், தரவைத் தொகுத்தல், மீன் மாதிரிகளைப் பகுப்பாய்தல் ஆகியனவற்றின் மூலம் ஆராய்ச்சிக்கு உதவியளிப்பதே ஆராய்ச்சி உதவியாளர்களினதும், நீர்மூழ்கி உதவியாளர்களினதும் பொறுப்புக்களாகும். தரவுத்தளங்களை தரமுயர்த்துவதற்காக கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தலிலிருந்தும், தெரிவு செய்யப்பட்ட கரையோர மீன்பிடித்தலிலிருந்தும் மீன்பிடித்தல் புள்ளிவிபரங்களைச் சேகரிப்பது மாதிரிப்படுத்துனர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதேவேளை, பிரிவின் தரவுத் தளங்களைப் பராமரிப்பதற்கான பொறுப்பினை தரவுப் பதிவு இயக்குனர்கள் கொண்டுள்ளனர்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| | திட்டம் | | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மீன்பிடி வளங்களின் மதிப்பீடும், முகாமைத்துவமும் | 1.1 | கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தலைக் கண்காணித்தல் | 1,566.000 | சி.அமரசிறி | தொடர்ச்சியான கருத்திட்டம் | |
| | | 1.2 | கரையோர சிறிய விரிகடலுக்குரிய மீன்பிடி வளங்களை மதிப்பிடுதலும், முகாமைப்படுத்தலும் | 1,100,000 | பி.ரி.பெர்னாண்டோ | தொடர்ச்சியான கருத்திட்டம் | |
| | | 1.3 | அவற்றின் சூழலியல் சாராமாறிகள் தொடர்பில் பருவகால மீன்பிடித்தலின் ஆய்வு | 180,000 | வி.சமரவீர | 2005 | |
| | | 1.4 | இறாலின் துணை பிடியினதும், மீன் உணவொன்றை உருவாக்குவதற்கு மேற்படியின் உபயோகத்தினதும் மதிப்பீடு | 750,000 | பி.எ.எ.ரி.ஜயவர்தன | ஜன. 2004 | டிச. 2005 |
| | | 1.5 | முள்ளந்தண்டு அற்ற சிங்கி இறாலின் முட்டை விடுவித்தலின் அதே இடத்திலான வளர்ச்சி மதிப்பீடும், ஆய்வும் | 192,000 | யு.எஸ்.பி.கே.லியனகே | ஜன. 2004 | டிச. 2005 |
| | | 1.6 | மும்மடிப்பை மீன்பிடித்தல் வளங்களின் முன்னேற்றமும், முகாமைத்துவமும் | 1,274,000 | ஆர்.மல்தெனிய | ஜன. 2004 | டிச. 2007 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.7 | கடல் ஆமைக்கான விஞ்ஞானரீதியிலான அடிப்படையிலான திட்டத்தைத் தாபித்தல் | 662,000 | ஆர்.மல்தெனிய டி.ஹேரத் | 2003 | 2006 |
| 1.8 | கற்பார்த்தொடரையும், அதன் இணைந்த விலங்கினத்தையும் கண்காணித்தல் | 500,000 | எ.ராஜசூரிய | தொடர்ச்சியான கருத்திட்டம் | |
| 1.9 | ஏற்றுமதி முனைப்பான மீன்பிடித்தல்கள் (Chanks சிங்கி இறால்கள் மற்றும் பாரிய மும்மடிப்பை) மீதான ஆய்வு | 1,225,000 | ஆர்.மல்தெனிய | 2004 | 2006 |
| 1.10 | சாதனங்களின் கொள்வனவு | 690,000 | | | |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1.1: கடற்கரையினிங்குகின்ற மீன்பிடித்தலைக் கண்காணித்தல்

தரவுத்தள முகாமைத்துவத்தினதும், சுரண்டல் மட்டங்களின் மதிப்பீட்டினதும், இருப்பு மதிப்பீட்டினதும் நோக்கத்திற்காக பாரிய விரிகடலுக்குரிய மீன்பிடித்தல் மீது தரவைச் சேகரிப்பதே இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். ஆறு பாரிய இறங்கு துறை அமைவிடங்களில் அடிப்படையைக் கொண்ட 12 நிரந்தரமான மாதிரிப்படுத்துனர்களினால் கற்பிட்டியிலிருந்து திருகோணமலை வரை மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு கரையோரங்களில் பாரிய இறங்குதுறை அமைவிடங்களில் தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. வேறுபட்ட படகு வகைகளுக்கு பிடி மற்றும் முயற்சித் தரவு, நீள அடுக்கு நிகழ்வுத் தரவு, இனங்களின் அடக்கம், மற்றும் தொடர்பான உயிரியல் தகவல் ஆகியன சேகரிக்கப்பட்டு, பாரிய விரிகடலுக்குரிய தரவுத் தளத்தில் பதியப்பட்டன. தரவுப் பகுப்பாய்வுக்கும், உற்பத்தி மதிப்பீட்டுக்கும், அதன் உள்ளீட்டு தரவுக்கும், முறைமையியலுக்கும் 2005இல் பாரிய விரிகடலுக்குரிய மீன்பிடித்தலுக்கான தரவுத்தளத்திற்கு பெருமளவு மாற்றங்கள் செய்யப்பட்டன. 2005ஆம் ஆண்டுக்கான சகல தரவுகளும் பதியப்பட்டு, உற்பத்தி தொகைகள் மதிப்பிடப்பட்டன. பெரிதுமே கரிசனையிலான சகல பகுதிகளிலும் முதன்மையான இனங்களாக தூனா விளங்கியதாக ஆண்டின் இறுதிப்பகுதியில் அதிகரித்து வரும் போக்கொன்றை உற்பத்தி மதிப்பீடுகள் காட்டுகின்றன. தரவுத் தளம் புதுப்பிக்கப்பட்டு, வருடாந்த தரவுச் சுருக்கங்கள் MFARDக்கும், IOTCக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. இது MFARDக்கும், வேறு சம்பந்தப்பட்ட அதிகார வர்க்கத்தினருக்கும் சமாளிப்பதற்காக தரவுத்தள முகாமைத்துவத்திற்கும், உற்பத்தி மதிப்பீட்டுக்கும் தொடர்ச்சியான கருத்திட்டமொன்றாகும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 64.79

### கருத்திட்டம் 1.2: கரையோர சிறிய விரிகடலுக்குரிய மீன்பிடி வளங்களை மதிப்பீடுதலும், முகாமைப்படுத்தலும்

கற்பிட்டியிலிருந்து திருகோணமலை வரை தெரிவு செய்யப்பட்ட மீன் இறங்குதுறை அமைவிடங்களில் சிறிய விரிகடலுக்குரிய மீன்பிடித்தல் தரவுச் சேகரிப்புத் திட்டம் நடத்தப்பட்டது. MBRDஇன் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் நுணுக்கமான மேற்பார்வையின் கீழ் ஆராய்ச்சி உதவியாளர்களினாலும், மாதிரிப்படுத்துனர்களினாலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. படகுகளின் விவரக் கூற்றுக்கள், மீன்பிடித்தல் தொழிற்பாடுகளின் விபரங்கள், மொத்தப் பிடி, அதன் இனங்களின் அடக்கம் போன்ற அவசியமான தகவல் பதியப்பட்டது. மேலதிகமாக, மீன்பிடித்தலின் அமைவிடம் மற்றும் ஆழம், பயன்படுத்தப்பட்ட மீன் பிடித்தல் உபகரணங்கள், பயன்படுத்தப்பட்ட மீன்பிடித்தல் உபகரணங்களின் எண்ணிக்கை, மற்றும் அவற்றின் அளவுகள் (கண்ணறை அளவுகளுடன் பயன்படுத்தப்பட்ட வலைத் துண்டுகளின் எண்ணிக்கை), மற்றும் ஒவ்வொரு கப்பலுக்குமான மீன்பிடித்தல் நேரம் ஆகியன பதிவு செய்யப்பட்டன. இதற்குப் புறம்பாக, தொழிற்படுத்தப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை மற்றும் கப்பல்களினால் பயன்படுத்தப்பட்ட மீன்பிடித்தல் உபகரணங்களின் வகை ஆகியனவற்றை பொறுத்தளவில் ஆய்வுப் பகுதியில் மீன்பிடித்தல் செயற்பாடு கண்காணிக்கப்பட்டது. வர்த்தகரீதியில் முக்கியமான இனங்களின் நீளங்களும் அளவிடப்பட்டன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 58.68

### கருத்திட்டம் 1.3: அவற்றின் சூழலியல் சாராமாறிகள் தொடர்பில் பருவகால மீன்பிடித்தலின் ஆய்வு

பருவ கால அடிப்படையில் இலங்கையில் நிலவுகின்ற பெருமளவு மீன்பிடித்தல் இருப்பதுடன், அவற்றின் சூழலியல் மற்றும் உயிரியல் சாராமாறிகள் தொடர்பில் சில மீன்பிடித்தல்களின் பருவகாலத் தன்மைக்கான காரணத்தைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்தும், அத்துடன் நீர்கொழும்பிலிருந்தும், தெற்கிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மீன் இருப்புக்களுக்கு (அரை கருட மூக்கு, கொங்கர் விலாங்குமீன்கள், *Exoceitidae*, *Trichiuridae* மற்றும் Needle fish) பிடி மற்றும் முயற்சி தரவும், தொடர்பான தகவலும் சேகரிக்கப்பட்டன. அரை கருட

மூக்குகளின் உணவூட்டல் சூழலியலினதும், கொங்கர் விலாங்கு மீன்களின் இனப்பெருக்க உயிரியலினதும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தரவுகள் பதியப்படுவதுடன், பகுப்பாய்வும், அறிக்கை எழுதுதலும் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 103.47

## கருத்திட்டம் 1.4: இறாலின் துணை பிடியினதும், மீன் உணவொன்றை உருவாக்குவதற்கு மேற்படியின் உபயோகத்தினதும் மதிப்பீடு

படகு மூலமான இறாலின் வருடாந்த துணை பிடித்தலை மதிப்பிடுவதற்காக கற்பிட்டி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகியவற்றில் இறால் பிடித்தல் ஆயப்பட்டது. மன்னாரிலிருந்தும், போர்த்துக்கல் குடாவிலிருந்தும் மதிப்பிடப்பட்ட வருடாந்த இறால் துணை பிடித்தல் முறையே 300 மெ.தொ. மற்றும் 360 மெ.தொ. ஆகும். இறால் பதப்படுத்தல் பொறிகளிலிருந்து தோற்றுவிக்கப்படும் கழிவு வருடத்திற்கு 600 தொன்களாகும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 42.62

## கருத்திட்டம் 1.5: முள்ளந்தண்டு அற்ற சிங்கி இறாலின் முட்டை விடுவித்தலின் அதே இடத்திலான வளர்ச்சி மதிப்பீடும், ஆய்வும்

இலங்கையில் தென் கரையோரப் பிராந்தியத்தில் சிங்கி இறால் பிடித்தலின் 82%க்கு *P.homorus* என்ற முள்ளந்தண்டு அற்ற சிங்கி இறால் பங்களிக்கின்றது. கண்காணித்தலின் போது பிடிகளில் வீழ்ச்சியுறும் போக்கு அவதானிக்கப்பட்டதுடன், இது குறைந்த அளவிலான சிங்கி இறால்களினதும், புதைக்கப்பட்ட பெண் சிங்கி இறால்களினதும் (மேல்கோட்டின் நீளம் 6 செ.மீ.க்கு குறைவாகவும், மொத்த நீளம் 16 செ.மீ.க்கு குறைவாகவும்) மீதான அதிகரித்த பிடித்தல் அழுத்தத்திற்கு காரணங்கற்பிக்க முடியும். குறைந்த அளவிலானதும், புதைக்கப்பட்ட பெண் சிங்கி இறால்களினதும் பிடியின் காரணமாக இருப்பு மீது மறுதலையான தாக்கத்தைக் குறைப்பதற்கு பகுதியளவிலான தீர்வொன்றைக் கண்டறிவதே ஆய்வின் நோக்கமாகும்.

பூர்வாங்க சோதனையொன்றாக, வளர்ச்சியைக் கண்காணிப்பதற்காக ரேகாவ பி.ஆ.நி.இல் சிமெந்து தொட்டிகளில் ஆறு குறைந்த அளவிலான சிங்கி இறால்கள் இருப்புச் செய்யப்பட்டதுடன், தங்காலைக்கு அப்பால் கடலில் கூடுகளில் நான்கு குறைந்த அளவிலான சிங்கி இறால்கள் இருப்புச் செய்யப்பட்டன. அவற்றுக்கு ஒரு நாளைக்கு இரு தடவைகள் (உடல் பாரத்தின் 10%) இருவால்வு மாசிமம் ஊட்டப்பட்டது. சிமெந்து தொட்டிகளில் நீரின் தரம் கண்காணிக்கப்பட்டதுடன், DOவும், உலர்தன்மையும் முறையே 7.8 - 9ppt மற்றும் 33 - 35ppt என்ற வீச்செல்லையில் வைக்கப்பட்டிருந்தது. தனிப்பட்ட உடல் நீளங்களும், நிறையும் இரு வாரங்களுக்கு ஒரு முறை கண்காணிக்கப்பட்டன.

முதிராத முட்டைகளுடனான புதைக்கப்பட்ட பெண் சிங்கி இறால்கள் முட்டைகளை விடுவிப்பதற்கு எடுக்கின்ற நேரத்தைக் கண்காணிப்பதற்காக சிறைபிடிக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தன. முட்டைகளை விடுவதற்கு எடுக்கப்பட்ட நேரத்துடனும், காலத்துடனும் நிறமாற்றங்கள் ஊடாக அவதானிக்கப்பட்ட முதிர்ச்சிக் கட்டங்கள் கண்காணிக்கப்பட்டன.

எட்டு மாத ஆய்வின் போது அவதானிக்கப்பட்ட சிமெந்து தொட்டிகளில் குறைந்த அளவிலான சிங்கி இறால்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இருக்கவில்லை. புதைக்கப்பட்ட பெண் இனங்களுடனான பரிசோதனையில், முதிர்ச்சியடைந்த முட்டைகளும், பின்னரான குடம்பிகளும் 24இலிருந்து 30 நாட்கள் வரையிலான நேர காலத்தில் விடுவிக்கப்பட்டன. இக் காலத்தின் போது, வெளிர் செம்மஞ்சள் நிறத்திலிருந்து கடும் செம்மஞ்சளுக்கும், பின்னர் கபில நிறத்திற்கும் மாற்றமடைவது அவதானிக்கப்பட்டது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: 51.8

## கருத்திட்டம் 1.6: மும்மடிப்பை மீன்பிடித்தல் வளங்களின் முன்னேற்றமும், முகாமைத்துவமும்

மீன்பிடித்தலின் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவ நோக்கத்திற்காக மும்மடிப்பை மீன்பித்தல் மீதான பிடி, முயற்சி, இனங்கள், பிடியின் அளவு அடக்கம் மற்றும் சமூக பொருளாதாரத் தரவு போன்ற மீன்பிடித்தல் செயற்றிறன் மீதான தரவைச் சேகரிப்பதே இக் கருத்திட்டத்தின் நோக்கங்களாகும். நாட்டின் வட மேற்கு, மேற்கு மற்றும் தெற்கு கரையோரங்களை அடக்கும் கண்டகுளிய, சிலாபம், நீர்கொழும்பு, பேருவளை, ஹம்பாந்தோட்டை மற்றும் கிரிந்த ஆகிய பாரிய இறங்குதுறை அமைவிடங்களில் தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இவ்வருடத்திற்கான (2005) உற்பத்தி மதிப்பீடு 2004இல் விட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. ஏனெனில் சுனாமியினால் மீன்பிடிப்படகுகளினதும், உபகரணங்களினதும் இழப்பின் காரணமாக இவற்றில் பெரும்பான்மையானவை மீன்பிடிப் பருவத்தின் போது தொழிற்படுத்தப்படவில்லை. சுனாமியின் காரணமாக இயற்கை வாழிடத்திற்கான அழிவும் வீழ்ச்சிக்கு பங்களித்திருக்கக்கூடும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் சிறிய அளவிலான மீனவர்களுக்கு அதிக அடையத்தக்க மீன்பிடித்தலில் இடங்களை வழங்குவதன் மூலம் மீன்பிடித்தல் வாய்ப்புக்களை உயர்த்தும் நோக்கத்துடன் இலங்கையின் தெற்கு கரையோரமான கிரிந்தவுக்கு அப்பால்

அமைப்பதற்காக செயற்கை கற்பார்த்தொடரொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. பொழுதுபோக்கிலான மீன்பிடித்தலையும், விளையாட்டு மீன்பிடித்தல் வாய்ப்புக்களையும் செயற்கைக் கற்பார்த்தொடர் உயர்த்தும். கற்பார்த் தொடரின் முளைக்கோலிடுதல் அலகுகள் கொங்கிரீட்டுடன் நிரப்பப்பட்ட பழைய ரயர்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டதுடன், கடல் அமைதியடையும் போது அமைத்தல் வேலை இடம்பெறும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 54.15

## கருத்திட்டம் 1.7: கடல் ஆமைக்கான விஞ்ஞானரீதியிலான அடிப்படையிலான திட்டத்தைத் தாபித்தல்

**1.7அ** கடல் அலைகளின் தொடருகின்ற வாழ்தகவுக்கான சமகால பயமுறுத்தல்களை அடையாளங் காண்பதும், சக்திமிக்கதும், பொறுப்பானதுமான ஆமை பண்ணை மீது கடல் ஆமை அடைகாப்பான்களுக்கு வழிகாட்டல்களைத் தயாரிப்பதும், கடல் ஆமைகளின் பேணலுக்கும், முகாமைத்துவத்திற்கும் விதந்துரைப்பினைச் செய்வதுமே இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். கண்டகுளியவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை ஆமை முட்டையிடும் தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. சுனாமியினால் பெருமளவு முட்டையிடும் கவனத்தைத் திருப்பியதன் காரணமாக ஆய்வுப் பகுதியில் முதல் மூன்றிலிருந்து நான்கு மாதங்களுக்கு துரிதமான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. எனினும், இதன் பின்னர் வெள்ளவத்தை, மொறட்டுவை, லுணாவை போன்ற கடற்கரைகளிலிருந்து ஆமை கரையை அடையும் பெருமளவு தருணங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. இங்கு கடந்த வருடங்களின் போது ஆமைகள் முட்டையிடுவது பற்றி அறிவிக்கப்படவில்லை என்ற அதேவேளை இந்துருவ, கஹந்தமோதர, கொடவாயா, வளவைமோதர, மற்றும் உஸ்ஸன்கொட போன்ற பாரிய முட்டையிடும் கடற்கரைகளில் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

அடைகாப்பு வழிகாட்டல் தயாரிக்கப்பட்டு, சட்டபூர்வமாக்குவதற்கும், அமுலாக்குவதற்கும் வனவாழ்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.7ஆ இலங்கையில் கடலக இனங்களின் ஜெனோம்களின் ஆய்வு

இலங்கையில் கண்டறியப்படும் ஆமை இனங்களை அடையாளங் காண்பதற்கு பயன்படுத்தக்கூடிய மூலக்கூற்று முறையொன்றை உருவாக்குவதே கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். காலி மாவட்டம், நீர்கொழும்பு மாவட்டம், சிலாபம், கற்பிட்டி மற்றும் கண்டகுளிய பகுதிகள் ஆகியனவே ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளாகும். RAPD பகுப்பாய்வுக்கு 15 RAPD நிரப்பல்கள் நிரையிடப்பட்டதுடன், நிரப்பல்கள் OPA 4 மற்றும் OPG 2 ஆகியன ஒவ்வொரு இனங்களுக்குமான வேறுபாட்டிலான வடிவமைப்புகளைக் காட்டின. ஆகவே இந்த நிரப்பல்கள் (அத்துடன் குறிப்பான வடிவமைப்புகளும்) ஒவ்வொரு இனங்களின் அடையாளங் காட்டலுக்கும் பயன்படுத்தப்பட முடியும். நான்கு இனங்களுக்கு இழைமணி கட்டுப்பாட்டுப் பிரதேச பெருக்கம் மேற்கொள்ளப்பட்டது. ஐந்து இடைவிடா வரிசைகள் (GT3, LH1, HB 3, OR 3 மற்றும் கலப்பினம்) பல்பெருக்க ஒழுங்குக்கு உட்பட்டதுடன், ஐந்து இடைவிடா வரிசைகளுக்கு இடைகளில் 77% அமைப்பொப்பு கண்டறியப்பட்டது. இந்த 5 இடைவிடா வரிசைகளுக்காகப் பெறப்பட்ட கால வரலாற்றுக்குரிய மரமானது பச்சை ஆமைக்கு ஒலிவ் ரிட்லே மிகக் கிட்டியது என்பதையும், மரமண்டையும், கூரிய வளைந்த அலகும் ஒன்றுக்கு ஒன்று நெருங்கியது என்பதையும் காட்டியது. மரத்தின் பிரகாரம், கலப்பினமானது ஒலிவ் ரிட்லேக்கு மிகக் கிட்டியதாக கண்டறியப்பட்டது. எமது மாதிரிகளுக்காக பெறப்பட்ட களவரலாற்றுக்குரிய மரத்திற்காகவும் இலங்கையிலிருந்து ஒலிவ் ரிட்லே ஒன்றுக்கான மூலவுயிருரு வங்கியிலிருந்து பெறப்பட்ட 2 இடைவிடா வரிசைகளுக்கும், பசுபிக் பிராந்தியத்திலிருந்து பச்சை ஆமைக்கும், கூரிய வளைந்த அலகுக்கும் இடையிலான கலப்பினத்திற்கும் இதையொத்த முடிவுகள் பெறப்பட்டன. ஆராய்ச்சி அறிக்கை முடிக்கப்பட்டுள்ளதுடன், அது நூலகத்தில் கிட்டுகின்றது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: 96.14

## கருத்திட்டம் 1.8: கற்பார்த்தொடரையும், அதன் இணைந்த விலங்கினத்தையும் கண்காணித்தல்

2004 டிசம்பரின் சுனாமியின் தாக்கங்களை நிர்ணயிப்பதே 2005இல் முருகைக் கற்பார்த்தொடர் அளவீடுகளின் ஆரம்பநிலைக் குறிக்கோளாகும். வட மேற்கு, மேற்குக் கரையோரம், தெற்குக் கரையோரம் மற்றும் கிழக்குக் கரையோரம் ஆகியவற்றில் முருகைக் கற்பார்த்தொடர்கள் அளவீடு செய்யப்பட்டன. முருகைக் கல் இயற்கை வாழிடங்கள் மீது கற்பார்த்தொடர்களுக்கான சுனாமி சேதம் கண்டறியப்பட்ட அதேவேளை, மணற் கல்லும், பாறை கற்பார்த்தொடர் இயற்கை வாழிடங்களும் கண்கூடான சேதத்தைக் கொண்டிருக்கவில்லை. சேதமானது மிக உயர்வான நிலையில் வேறுபட்டிருந்தது. வடமேற்கில், சராசரி கடல் மட்டத்தை விட சுமார் ஒரு மீட்டருக்கு மேலாக கடல் மட்டம் உயர்ந்திருந்த போதிலும் முருகைக் கற்களுக்கான சேதம் இருக்கவில்லை. மேற்குக் கரையோரத்தில் ஆழமற்ற நீர் முருகைக் கல் இயற்கை வாழிடங்கள் இருக்கவில்லை என்பதுடன், சுனாமியினால் மணற்கல் இயற்கை வாழிடங்கள் சேதமடைந்திருந்தன. தெற்கு கரையோரத்தின் வழியேயும், கிழக்கு கரையோரத்தின் பகுதிகளிலும் குறைந்ததிலிருந்து நடுத்தரம் வரையிலான சேதம் தெரிந்தது. முருகைக் கற்களுக்கு ஆகக் கூடுதலான சேதம் மட்டக்களப்பின் தெற்கே கிரான் குளத்திலும், திருகோணமலையில் டச்சுக் குடாவிலும் தெரிந்தது.

இந்தியாவின் சேது சமுத்திரக் கப்பல் கால்வாய் கருத்திட்டம் தொடர்பில், யாழ்ப்பாணம் குடாநாட்டைச் சுற்றி கற்பார்த் தொடர் இயற்கை வாழிடங்கள் மீது அடிமட்ட தரவுகளைச் சேகரிப்பதற்கு களப்பயணமொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட அமைவிடங்களில் சுனாமியின் காரணமாக கற்பார்த்தொடர் இயற்கை வாழிடங்களுக்கு கண்டறியக்கூடிய சேதம் இருக்கவில்லை.

'நாரா'வின் முருகைக் கல் மேற்கோள் சேகரிப்பு ஒப்பீட்டுக்கான மேலதிக மாதிரிகளுடன் புதுப்பிக்கப்பட்டதுடன், இலங்கையில் வன்முருகைக் கற்களின் இனங்கள் பங்கீடு மீது தரவுத் தளமும் புதுப்பிக்கப்பட்டது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 100 நிதிசார்: 93.71

### கருத்திட்டம் 1.9: ஏற்றுமதி முனைப்பான மீன்பிடித்தல்களை (Chanks சிங்கி இறால்கள் மற்றும் பாரிய மும்மடிப்பை)

chanks மற்றும் கடல் வெள்ளரி ஆகியன நாட்டின் பாரிய மீன்பிடித்தல் ஏற்றுமதி பண்டங்களில் ஒன்றாகும். இவ்வினங்கள் பண்படுத்தாமலேயே பிரத்தியேகமாக சுரண்டப்படுகின்றன. அவை சிறுபுலனுறுப்பிலான விலங்குகள் என்பதனாலும், உள்ளூர்மயப்படுத்தப்பட்ட பங்கீட்டிலிருந்தே வருகின்றன என்பதனாலும் சுரண்டலுக்கு அவை உயர்வான ஊறுபடத்தக்க தன்மையிலானவையாகும். Chanksக்கு மட்டுமே ஒழுங்குவிதிகள் இயற்றப்பட்டுள்ளன. இருப்பு மதிப்பிட்டுக்கும், சுரண்டல் மட்டங்களை மதிப்பிடுவதற்குமான நோக்கத்திற்காகவே chanksஇனதும் கடல் வெள்ளரிகளினதும் மீதான தரவைச் சேகரிக்கும் நோக்கத்துடன் இக் கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. பிடியினதும், முயற்சியினதும் புள்ளிவிபரங்களைச் சேகரிப்பதன் மூலமும், நிலத்தடிநீர் அளவீடுகளை மேற்கொள்வதன் மூலமும் பொறுப்பேற்பதற்கு இது திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வளங்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளின், விசேடமாக மன்னார் வளைகுடா, பாக்குநீரிணை, பாக்கு விரிகுடா, திருகோணமலைக்கு அப்பால், மட்டக்களப்பு, கல்முனை மற்றும் கிரிந்த ஆகியவற்றின் கரையோர நீர்நிலைகளில் பிரதானமாகக் கண்டறியப்படுகின்றன. பாதுகாப்பற்ற பகுதிகளில் இறங்குதுறை அமைவிடங்கள் அமைந்திருந்தமையினால் பெருமளவு தருணங்களில் பிடியினதும், முயற்சியினதும் புள்ளிவிபரங்களின் சேகரிப்புக்கு இடையூறு ஏற்பட்டது. சுனாமியினால் நீரில் மூழ்கும் கருவிகளின் இழப்பின் காரணமாக, பருவகாலத்தின் போது கிரிந்தவில் chanksக்கும் கடல் வெள்ளரிக்கும் நீரில் மூழ்குதல் மேற்கொள்ளப்பட முடியவில்லை. ஆகவே, பதப்படுத்தல் நிலையங்களுக்கு மட்டுமே தகவல் சேகரிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 9.38

### கருத்திட்டம் 1.10: சாதனங்களின் கொள்வனவு

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 93

## 4. வெளியீடுகள்
### அறிக்கைகள்

1. கரையோர மீன் வளங்கள் மீது சுனாமியின் தாக்கம் - பி.எ.ரி.பெர்னாண்டோ

2. கரையோர மீன்பிடித்தலினதும், எதிர்கால அபிவிருத்தியினதும் மீது சுனாமியின் தாக்கம். இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் எக்கனோமிக் ரிவியூவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கட்டுரை - பி.எ.ரி.பெர்னாண்டோ

3. இலங்கையில் கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தலைக் கண்காணித்தலும், மதிப்பிடுதலும் - சி.திசநாயக்க

4. இலங்கையின் வட மேற்கு கரையோரப் பிராந்தியத்தில் முள்ளந்தண்டற்ற நாய்மீன் சுறா மீன்பிடித்தலை மதிப்பாய்தல் - சி.திசநாயக்க

5. ராஜசூரிய, எ., பெரேரா, என். மற்றும் பெர்னாண்டோ, எம் (2005), திருகோணமலையில் முருகைக் கற்பார்த் தொடரின் நிலை, சௌட்டர் டி., லிண்டன் (பதிப்பு), இந்து சமுத்திரத்தில் முருகைக் கற்பார்த் தொடரின் சீர்கேடு, நிலை அறிக்கை, 2005, CORDIO. உயிரியல், சூழல் விஞ்ஞானத் திணைக்களம், கல்மார் பல்கலைக்கழகம், சுவீடன், பக்கம் 97-103

6. ராஜசூரிய, எ. (2005), 1998இன் முருகை வெளுறல் நிகழ்வினதும், 2004இன் சுனாமியினதும் பின்னர் இலங்கையில் முருகைக் கற்பார்த்தொடரின் நிலை. சௌட்டர் டி., லிண்டன் (பதிப்பு), இந்து சமுத்திரத்தில் முருகைக் கற்பார்த் தொடரின் சீர்கேடு, நிலை அறிக்கை, 2005, CORDIO. உயிரியல், சூழல் விஞ்ஞானத் திணைக்களம், கல்மார் பல்கலைக்கழகம், சுவீடன், பக்கம் 83-96

7. ஹப்புதந்திரி எஸ்.எஸ்.கே., கிரிந்தவைச் சுற்றி மீன்பிடித்தல் வளங்களின் தற்போதைய நிலை, கிரிந்த மீன்பிடித்தல் துறைமுகத்தின் மீன் அபிவிருத்தி மீது பணியாற்றும் ஜப்பானிய குழாமுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.

8. சுனாமி வற்றுப்பெருக்கு அலைகளினால் அழிவின் பின்னர் மீன்பிடித்தல் கைத்தொழிலை மீள் தாபிப்பதற்கான மூலோபாயம்

9. கடற்கரையினீங்குகின்ற மணல் அகழ்வுக்கு சூழல் தாக்க மதிப்பீடு - சி.அமரசிறி, எஸ்.சி.ஜயமான்ன, ஆர்.மல்தெனிய

10. இலங்கையின் பாதுகாக்கப்பட்ட கடலக விலங்கினத்தின் மதிப்பாய்வு - டி.என்.ஈ.ரண்மடுகல

11. இலங்கையில் தூனா தூண்டில் மீன்பிடித்தலுக்கு மாற்று இரையாக பால் மீன் இருக்க முடியுமா? - இ.ஜே.வி. சமரவீர

**கட்டுரைகள்**


1. ஹப்புதந்திரி, எஸ்.எஸ்.கே., மற்றும் பி.எ.எ.ரி. ஜயவர்தன, 2006, நீர்கொழும்புக்கும், ஹெந்தலவுக்கும் அப்பால் அபரிதமாகவுள்ள இறாலின் எதிர்வு கூறல் மாதிரிகள்

2. ஹப்புதந்திரி, எஸ்.எஸ்.கே., ஜே.மொரயோ மற்றும் எஸ்.லெக் (2005) பிடி/முயற்சி தரவைப் பயன்படுத்தி இலங்கையின் கரையோர நீர்நிலைகளில் அபரிதமான சாடினின் மாறலின் எதிர்வுகூறல், ICES, ஜேர்னல் ஒப் மரைன் சயன்ஸ்.

3. ஹப்புதந்திரி, எஸ்.எஸ்.கே., ஜே.மொரயோ மற்றும் எஸ்.லெக் (2005) இலங்கையின் கரையோர மீன்பிடித்தலில் Amglugaster Sirm க்கான தரப்படுத்தப்பட்ட அபரிதமான காட்டிகள்

4. ஹப்புதந்திரி, எஸ்.எஸ்.கே., எம்.சி.எஸ். வில்லனேவா மற்றும் ஜே.மொரயோ (2005), இலங்கையின் கரையோர சூழலியல் முறைமையில் அயனமண்டல ஒன்றுடன் மற்றொன்று இணைந்து செயற்படுதல்: ECOPATH தூண்டல், Journal of Experimental Marine Biology and Ecology

5. லியனகே, யு.எஸ்.பி.கே. மற்றும் டபிள்யு. எம்.ரி.பீ.வன்னிநாயக்க (2005), இலங்கை, ரேகாவ கடல் ஏரியில் *Meretrix casts* மட்டியின் மென் இழையங்களின் உலர் நிறையில் பருவகால மாற்றங்கள்

6. பட்டர்சன் எட்வேர்ட், ஜே.கே., குல்கர்னி, எஸ்., ஜெயபாஸ்கரன், ஆர்., லாசராஸ், எஸ்., மேரி, எ., வெங்கட்ராமன், கே., பிரபா தாஸ், எஸ்., தமலண்டர், ஜே, ராஜசூரிய, எ, ஜெயகுமார், கே., குமரகுரு, எ., மாரிமுத்து, என்., சுலுகா, ஆர் மற்றும் வில்சன் ஜே. (2005). இந்திய கண்டத்திலும், அந்தமானிலும், நிக்கோபர் தீவுகளிலும் 2004 சுனாமியின் தாக்கங்கள், வில்கின்சன், சி., சௌட்டர், டி., கோல்ட்பேர்க், ஜே (பதிப்பு) சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் முருகை கற்பார்த்தொடர்களின் நிலை. அவுஸ்திரேலியா கடலக விஞ்ஞான நிறுவனம், பக். 85-87

7. ராஜசூரிய, எ., பெரேரா, என்., கருணாரத்ன, சி., பெர்னாண்டோ, எம்., ரேம்லாண்டர், ஜே., (2005), சுனாமியின் பின்னர் இலங்கையில் முருகைக் கற்பார்த்தொடர்களின் நிலை: 2005, அவுஸ்திரேலியா கடலக விஞ்ஞான நிறுவனம், பக். 99-100

8. சமரவீர, இ.கே.வி. மற்றும் சி.அமரசிறி (2005), இலங்கையில் அலகு மீன் பிடித்தலின் தற்போதைய நிலை

9. விஹில்மஸன், டி., பட்டர்சன் எட்வேர்ட், ஜே.கே., ராஜசூரிய, எ., தமலண்டர், ஜே. மற்றும் பெரேரா, என். (2005), முருகைக் கற்பார்த்தொடர் வளங்களின் நிலையை மதிப்பிடுதலும், முகாமைத்துவத்தை மேம்படுத்துதலும்: தென் ஆசியாவில் அனுபவங்களும், சாதனைகளும் சௌட்டர் டி., லிண்டன் (பதிப்பு), இந்து சமுத்திரத்தில் முருகைக் கற்பார்த்தொடரின் சீர்கேடு, நிலை அறிக்கை, 2005, CORDIO. உயிரியல், சூழல் விஞ்ஞானத் திணைக்களம், கல்மார் பல்கலைக்கழகம், சுவீடன், பக்கம் 66-82

10. சஹீர், எச்., அலிஸன், டபிள்யு., தேவ்ஸ், ஜி., கண், ஜே., ராஜசூரிய, எ., சொலன்ட், ஜே.எல்., சுவீட்டன், எச்., டாம், ஜே., தோம்ஸன், எ., மற்றும் வேக்வோர்ட், எம். (2005), மாலைதீவின் தீவுகளினதும், கற்பனை முருகைக் கற்றீவுகளினதும் முருகைக் கற்பார்த்தொடர்களின் சுனாமிக்கு பின்னரான ஆய்வு, வில்கின்சன், சி., சௌட்டர், டி., கோல்ட்பேர்க், ஜே (பதிப்பு) சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் முருகை கற்பார்த்தொடர்களின் நிலை. அவுஸ்திரேலியா கடலக விஞ்ஞான நிறுவனம், பக். 111-123

# சமுத்திரவியல் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி கே.அருளானந்தன்

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

எமது கடலக வலயங்களின் கைத்தொழில் மற்றும் மூலோபாய சுரண்டலுக்கு உதவியளிப்பதற்கு புத்திகூர்மையுடன் நிருவகிப்பதற்கும், எமது நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் சூழல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கரையோர மற்றும் கடலக மூலவளங்களை நிருவகிப்பதற்கும் சமுத்திரவியல் பிரிவு பாடுபடுகின்றது.

சமுத்திரவியல் பிரிவுசார் செயற்பாடுகள் மூன்று பாரிய துறைகளின் கீழ் நடத்தப்பட்டன.

- **கரையோர சமுத்திரவியல்**

  சூழல் சீர்கேட்டினைத் தடுப்பதற்காக கரையோர மூலவளங்களின் நிலைத்திருத்தல் முகாமைத்துவத்திற்கான நிலைமைகளை மேம்படுத்துவதற்கு கரையோர நீர் நிலைகளின் நீர் இயக்கவிசையியலுக்கு புரிந்து கொள்தலை உத்தேசமாகக் கொண்டிருத்தல்.

- **கடற்கரையினீங்குகின்ற சமுத்திரவியல்**

  நிருமாணக் கைத்தொழிலுக்கும், இலங்கையைச் சுற்றி கடல் மட்ட மாறலுக்கும் மாற்றீடாக கடற்கரையினீங்குகின்ற மணல் வண்டல்களின் அடையாளங் காட்டல் மீது நோக்கினைக் கொண்டிருத்தல்.

- **சமுத்திரவியல் தரவு முகாமைத்துவம்**

  இறுதிப் பயன்படுத்துனர்கள், ஆராய்ச்சியாளர்கள், பட்டப்பின் படிப்பு மாணவர்கள் ஆகியோருக்கும், அரசாங்க மற்றும் தனியார் தாபனங்களுக்கும் தரவையும், தகவலையும் கிட்டச் செய்வதை உத்தேசமாகக் கொண்டிருத்தல்.

மேற்படி திட்டமிடப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, பின்வரும் தேசியத் தேவைகளை பிரிவு சமாளித்தது.

- சேது சமுத்திரம் கப்பல் கால்வாயின் கருத்திட்டத்தின் தாக்கத்தை கண்காணித்தல்
- கடல் மட்டங்கள் மீதான அடிப்படையில் சுனாமி முன்கூட்டிய எச்சரிக்கை முறைமையைத் தாபித்தல்

மேற்படி மூன்று பிரதான துறைகளைச் சூழ்ந்து சமுத்திரவியல் பிரிவு 6 ஆராய்ச்சி கருத்திட்டங்களை நடத்தி, முடித்து வைத்தது. பிரிவின் பணியாளர் 07 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும், 03 ஆராய்ச்சி உதவியாளர்களையும், 01 சிற்றூழியரையும் அடக்கியுள்ளது. கருத்திட்ட திட்டமிடல், அமுலாக்கம் மற்றும் அறிக்கையிடல் ஆகியன உட்பட சகல ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பொறுப்பானவர்களாவர். களத் தரவுகளைச் சேகரித்தல், தரவைத் தொகுத்தல், மாதிரிகளைப் பகுப்பாய்தல் ஆகியவற்றின் மூலம் ஆராய்ச்சிக்கு உதவியளிப்பதே ஆராய்ச்சி உதவியாளர்களின் பொறுப்புக்களாகும்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| கருத்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூபா) | பொறுப்பான உத்தியோகத்தர்கள் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|
| 1. கரையோர நீர் நிலைகளினதும், இணைந்த நீர்களினதும் சமுத்திரவியல் ஆய்வுகள் | 665,000 | கே.அருளானந்தன்<br>எச்.பீ.ஜயசிறி<br>எஸ்.யு.பி.ஜினதாஸ | ஜன. 2004 | டிச. 2005 |
| 2. இலங்கை தேசிய சமுத்திரவியல் தரவு நிலையம் | 140,000 | கே.தென்னக்கோன் | ஜன. 2004 | டிச. 2005 |
| 3. தேசிய சமுத்திரவியல் நிலையம் | 150,000 | கே.தென்னக்கோன் | ஜன. 2004 | டிச. 2005 |
| 4. இலங்கை நீர்களைச் சுற்றி குறுகிய, நீண்ட கால கடல் மட்ட மாற்றங்களைக் கண்காணித்தலும், மாதிரிப்படுத்தலும் | 430,000 | இ.எம்.எஸ்.விஜேரத்ன | ஜன. 2004 | டிச. 2005 |
| 5. செய்மதி சமுத்திரவியல் | 350,000 | ஜே.கே.ராஜபக்ஷ | ஜன. 2004 | டிச. 2005 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. புவியியல் சமுத்திரவியல் - கடற்கரையினீங்குகின்ற மணல் வண்டல்களை ஆராய்தல் | 590,000 | எஸ்.யு.பி.ஜினதாஸ | ஜன. 2004 | டிச. 2005 |
| மொத்தம் | 2315,000 | | | |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1: கரையோர நீர் நிலைகளினதும், இணைந்த நீர்களினதும் சமுத்திரவியல் ஆய்வுகள்

தெற்கு கரையோரம் மீது அமைந்துள்ள கொக்கல கடல் ஏரி ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்தின் திசைதிருப்பலானது நீரின் பௌதீக குணவியல்பினை மாற்றி இக் கடல் ஏரியில் உபயோகிப்பாளர்கள் மோதலை உருவாக்கியுள்ளது. உயிருள்ள மூலவளங்களின் நிலைத்திருத்தல் சுரண்டலின் முன்னேற்றத்திற்கு நீர் இயக்கவிசையியல் மற்றும் மீன்பிடித்தல் பிரச்சினைகளை சிறப்பாக புரிந்து கொள்வதை ஆய்வு உத்தேசமாகக் கொண்டுள்ளது. கடல் ஏரியின் நீர் பரிமாற்ற பொறிமுறையைத் தாபிப்பதற்கு நீர் இயக்கவிசையியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. கடல் ஏரியின் உயிரியல் பன்னிலையாக்கம் மீதான பௌதீக, உயிரியல் மற்றும் இரசாயன சாராமாறி, வண்டல் இயக்கவிசையியல் மற்றும் வண்டல் படிவியல் ஆகியன மதிப்பாயப்பட்டன. பிளாந்தன் இயக்கவிசையியலும், கடல் ஏரியின் ஆரம்பநிலை உற்பத்தித்திறனும் தாபிக்கப்பட்டுள்ளது.

கடல் ஏரி அமைவிடத்திற்கும், ஆற்றுப்பக்கத்திற்கும் (வாரபொக்க எல) இடையில் நீர் மட்ட வித்தியாசத்தின் காரணமாக வரட்சியின் போது உவர்நீர் உட்புகுதல் அவதானிக்கப்பட்டுள்ளது. இது படலைகள் மூடப்பட்டுள்ள போதிலும் கூட, மடைப் படலைகளின் ஊடாக உவர் நீர் உட்புகுதலை உருவாக்குகின்றது. உயர் உவர்தன்மையிலான காலத்தின் போது (பெப்ரவரி மற்றும் மார்ச்), மேல்நீரோட்டப் பகுதிகளின் (மத்தேகொட பாலம்) மேற்பரப்பு மற்றும் கீழ்ப்பகுதி உவர்த்தன்மைகள் முறையே 16 மற்றும் 22 PSU ஆகும். கௌனஎலவின் மேற்பரப்பு மற்றும் கீழ்ப்பகுதி உவர்த்தன்மை 34 PSU ஆகும். கடல் ஏரி நீர்களின் மாதாந்த சராசரி உவர்த்தன்மை 20இலிருந்து 34.5 PSU வரை பலமாக வேறுபட்டது. 2004 நொவம்பர் மற்றும் மார்ச் ஆகியனவற்றின் போது முறையே குறைந்தபட்ச, ஆகக்கூடுதலான உவர்த்தன்மைகள் அவதானிக்கப்பட்டன. கொக்கல கழிமுக முறைமையின் புனரமைப்புக்காக கரையோர மூலவளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 69.33

### கருத்திட்டம் 2: இலங்கை தேசிய சமுத்திரவியல் தரவு நிலையம் (NODCSL)

இலங்கையில் நீர்களின் சமுத்திரவியல் தரவைக் கையகப்படுத்தலினதும், காப்பகப்படுத்தலினதும், பரப்புதலினதும் ஆற்றலளவுகளை உயர்த்துவதையும், IOC நாடுகளுக்கு இடையில் சமுத்திரவியல் தரவையும், தகவலையும் பரிமாறுவதற்கு வசதிப்படுத்துவதையும் இலங்கை தேசிய சமுத்திரவியல் தரவு நிலையக் (NODCSL) கருத்திட்டம் உத்தேசமாகக் கொண்டுள்ளது.

பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

மூன்று சமுத்ர மாரு அறிக்கைகளை முழுமையாக கணனிமயப்படுத்துதல்.

இலங்கையைச் சுற்றி இந்து சமுத்திரத்தில் சமுத்திரவியல் தரவை பெறுதலும், கோவைப்படுத்துதலும் (கடல் மேற்பரப்பு வெப்பநிலை, அலை, மின்னோட்டம்)

NOAA (தேசிய சமுத்திரவியல், வளிமண்டலத்திற்குரிய சங்கம்) அரசாங்கங்களுக்கு இடையிலான சமுத்திரவியல் ஆணைக்குழு (IOC), இந்திய சமுத்திர தகவல் சேவை நிலையம் (INCOIS) ஆகியவற்றின் இணைய தளங்களில் இருந்து பெறப்பட்ட தகவல் பெறப்பட்ட தரவுகள் நிலை மடிப்புத்தாளில் NODC மடிப்புக்களில் காப்பகப்படுத்தப்படுகின்றது.

களஞ்சியப்படுத்தலின் தரமுயர்த்துதல் நடந்து கொண்டிருக்கிறது. இரு மாதிரிச் சுவடிகள் முழுமையாகத் தொகுக்கப்பட்டன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 100

### கருத்திட்டம் 3: தேசிய சமுத்திரவியல் நிலையம் (NOC)

சமுத்திரங்கள் தொடர்பில் செயற்பாடுகளினதும், வேறு முன்னெடுப்புகளினதும் தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பின் அடிப்படையில் சர்வதேச ஒத்துழைப்பினை வசதிப்படுத்துவதற்கு நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. UNESCOஇன் அரசாங்கங்களுக்கு இடையிலான சமுத்திரவியல் ஆணைக்குழுவினதும் (IOC) IOCஇன் குவியமுனையினதும் உறுப்பாக 'நாரா'வில் NOCஐத் தாபிப்பது அதன் கடப்பாடாகும்.

மத்திய இந்து சமுத்திரத்திற்கான IOC பிராந்தியக் குழுவுக்கான நான்காவது அமர்வு 205 டிசம்பர் 8 - 10 நடத்தப்பட்டது. இந்த கருத்துமேடையில் பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, மாலைதீவு, இலங்கை, தாய்லாந்து மற்றும் சவூதி அரேபியா ஆகியவற்றிலிருந்து பேராளர்கள் பங்கெடுத்தனர்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 95 நிதிசார்: 100

**கருத்திட்டம் 4: இலங்கை நீர்களைச் சுற்றி குறுகிய, நீண்ட கால கடல் மட்ட மாற்றங்களைக் கண்காணித்தலும், மாதிரிப்படுத்தலும்**

பௌதீக நடைமுறைகள், காற்று அழுத்தம், உவர்த்தன்மை, வெப்பநிலை, காற்று வடிவமைப்பு அல்லது கடல் மட்டத்தின் அலை அமைப்பு ஆகியவற்றின் ஒன்றிணைந்த தாக்கங்களைத் தாபிப்பது மீது கருத்திட்டம் நோக்கினைக் கொண்டுள்ளது. கருத்திட்டங்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட தரவும், தகவலும் இலங்கையைச் சுற்றி கரையோர நிருமாணங்களின் தொழிற்பாட்டினையும் மற்றும் எந்திரவியலையும், கப்பலோட்டத்தையும், கடல் மட்டத்தில் நீண்ட கால கண்காணித்தலையும் பயன்படுத்துவதை உத்தேசமாகக் கொண்டுள்ளது. கரையோர சூழலின் நிலைத்திருத்தல் முகாமைத்துவத்திற்கும், தணிப்பு நடவடிக்கைகளுக்கும் நீண்ட கால கடல் மட்ட தரவு அவசியமானதாகும்.

பின்வரும் செயற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன:

- பாக்கு குடா, பாக்கு நீரிணை, மன்னார் விரிகுடா, மற்றும் இணைந்த நீர்கள், களனி ஆறு ஆகியவற்றின் விநியோக வடிவமைப்பின் இலக்கரீதியிலான மாதிரிகள் வகுத்தமைக்கப்பட்டன.
- குறுகிய மற்றும் நீண்ட கால கடல் மட்ட மாறலின் மதிப்பீடு
- புதிய மேற்கோள் கடல் மட்டத்தினைத் தாபித்தல்

முன்னேற்றம் (%) : பௌதீக: 98 நிதிசார்: 42.83

**கருத்திட்டம் 5: செய்மதி சமுத்திரவியல்**

கடல் மேற்பரப்பு வெப்பநிலை, பைட்டோ பிளாங்கன் பங்கீடு தொடர்பிலான சமுத்திர நிறம், செய்மதி பிரதிமைகள் ஊடாக இயக்கவிசையியல், பைட்டோ தொகுப்பு போன்ற சமுத்திர மாறலிகளைக் கண்காணித்தல் மீது ஆய்வு நோக்கினைக் கொண்டிருந்தது. மேகத் துணிக்கைகள், கதிர்வீச்சுப் பாயம், வளிச் சொல் துணிக்கைகள் போன்ற வளிமண்டலத்திற்குரிய மாறலிகளையும் கண்காணிப்பதற்கு பிரதிமைகள் பயன்படுத்தப்படுகின்றன. நோக்கத்திற்காக மிதமான துணிப்பு பிரதிமைப்படுத்தல் திருசிய கதிர மானி ச் செய்மதி பிரதிமைகள் பயன்படுத்தப்பட்டன. அயனமண்டல மற்றும் ஓரளவு அயனமண்டல நாடுகளுக்கான மேகத்தைக் கண்டறிதலுக்கான வழிமுறைகள் விருத்தி செய்யப்பட்டன. அரேபிய கடலுக்கும், வங்காள விரிகுடாவுக்குமான SST மற்றும் வர்ண வரைபடம் தயாரிக்கப்பட்டது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 25 நிதிசார்: 13.75

2006 மேயில் இருந்து கருத்திட்டத்தின் பொறுப்பு உத்தியோகத்தர் செய்மதி பிரதிமைகளின் படிநிலைப்படுத்தல் மீது தாய்லாந்து ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் புவிதகவல் மையத்தில் பயிற்சியை மேற்கொள்கின்றன.

**கருத்திட்டம் 6: புவியியல் சமுத்திரவியல் - கடற்கரையினீங்குகின்ற மணல் வண்டல்களை ஆராய்தல்**

சமுத்திர படிநிலையை புரிந்து கொள்ளுதல் (பொங்கியெழுதல், வெப்பவியல், நகருதல்) நீர் திரளையும், அதன் உற்பத்தித்திறனையும் அடையாளங் காணுதல், இலங்கையின் கண்டமேடையின் உயிரற்ற கனிப்பொருள் மூலவளங்களை ஆராய்தல் ஆகியன மீது கருத்திட்டம் நோக்கினைக் கொண்டுள்ளது. நிருமாணக் கைத்தொழிலுக்கு காணி அடிப்படையிலான மணலின் தட்டுப்பாடானது சிவில் எந்திரவியல் நிருமாணங்களுக்கு கடலக திரள்களின் (மணல், சரளைக்கல், முருகைக்கல், வண்டல்கள்) பிரித்தெடுப்புக்கு பொருத்தமான அமைவிடங்களைச் சுரண்டுவதற்கும், தெரிவு செய்வதற்கும் உத்தேசமான கடற்கரையினீங்குகின்ற வண்டற்படிவு கனிப்பொருள் வைப்புக்களின் (மணல்) அடையாளங் காட்டலுக்கு ஆய்வினை மீள் நோக்கப்படுத்தியது.

பாக்கு குடா, பாக்கு நீரிணை, மன்னார் விரிகுடா ஆகியவற்றின் கடற்கரையினீங்குகின்ற வண்டல் பங்கீட்டு வடிவமைப்பு திட்டமிடப்பட்டது. திருகோணமலையிலிருந்து புல்மோட்டை வரையிலான கடற்கரையினீங்குகின்ற நீரின் பாரமான கனிப்பொருள் பங்கீட்டு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, உத்தேசமான அபிவிருத்தியாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: 42.83

**தடைகள்**

கடற்கரையினீங்குகின்ற ஆராய்ச்சி கப்பல் கிடைக்காததினால் அது அக் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்திற்கு ஊறுவிளைவித்தது.

## 3. 2005ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட விஞ்ஞான கட்டுரைகளும், மற்றும் அறிக்கைகளும்

**அறிக்கைகள்**

1. துரித மதிப்பீட்டு அளவீட்டின் மீதான அடிப்படையில் பாக்கு குடா, அடம்ஸ் பாலம் மற்றும் மன்னார் குடா ஆகியவற்றின் அடிமட்ட நிலைமைகளைத் தாபித்தல் மீதான அறிக்கை, எஸ்.யு.பி.ஜினதாச
2. சமுத்ர மாரு கப்பல் பயண வரைபடங்கள் (SM 1, 2, 9) - மீள்தயாரிப்பு - கே.தென்னக்கோன்
3. கொக்கல கடல் ஏரியின் ஆய்வு மீதான இடைக்கால அறிக்கை, 2005 - எச்.பீ.ஜயசிறி
4. துரித மதிப்பீட்டு அளவீட்டின் மீதான அடிப்படையில் பாக்கு குடா, அடம்ஸ் பாலம் மற்றும் மன்னார் குடா ஆகியவற்றின் அடிமட்ட நிலைமைகளைத் தாபித்தல், 2005.

**கட்டுரைகள்**

1. அருளானந்தன், கே., 2005, ஆழமற்ற அயனமண்டல கடல் ஏரியான புத்தளம் கடல் ஏரி மீதான நன்னீர் வெளியேற்ற ஒழுங்கு விதிகளின் தாக்கங்கள், இலங்கை, இந்து சமுத்திர கடலக சூழல் மகாநாடு, பெப்ரவரி 14-18, 2005, பேர்த், அவுஸ்திரேலியா.
2. ஜயசிறி, எச்.பீ., 2005, மூன்று கரையோர கடல் ஏரிகளின் ஆரம்பநிலை உற்பத்தித்திறனும், தொடர்பான அம்சங்களும், இலங்கை, இலங்கையில் மீன்பிடித்தல், நீர்வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வு, 2005 மார்ச் 29-31
3. ஜயசிறி, எச்.பீ., மற்றும் பிரியதர்ஷினி, டபிள்யு.என்.சி., 2005. மன்னார் குடாவிலும், பாக்கு குடாவிலும் கடலக பிளாந்தனினதும், கடற்றளவுயிரினதும் பன்னிலையாக்கமும், அபரிதமான தன்மையும், இலங்கை, SLAFAR, 11ஆவது வருடாந்த அமர்வு
4. ஜினதாஸ, எஸ்.யு.பி. மற்றும் விஜேரத்ன, இ.எம்.எஸ். (2005), யால கரையோர வளைவிலும் ஆசியாவிலும், பசுபிக் கரையோரங்களிலும் சுனாமி ஆபத்தினைத் தடுப்பதற்கு புவி - உருவவியல் செல்வாக்குகளின் மதிப்பீடு, ஆசிய, பசுபிக் கரையோரங்கள் மீதான சர்வதேச மகாநாடு, கொரியா.
5. ஜினதாஸ, எஸ்.யு.பி. மற்றும் அருளானந்தன், கே. (2005), இலங்கை, ஆசிய, பசுபிக் கரையோரங்களைச் சுற்றி கரையோர ஆழவளவிற்குரிய மாற்றங்களுடன் சுனாமியினால் தோற்றுவிக்கப்பட்ட விரைவான வளர்ச்சியினதும், நெடுங்குத்தான வெள்ளப்பெருக்கினதும் ஆய்வு.
6. ஜினதாஸ, எஸ்.யு.பி. (2005), யாலவின் கரையோர வலயத்தில் சுனாமி அலைகளின் ஆபத்தினைத் தடுப்பதற்கு புவி - உருவவியல் செல்வாக்குகள், இலங்கை (சுவரொட்டி), கரையோர வலயம் - IIஇல் காணியும், சமுத்திரமும் ஒன்றுடன் மற்றொன்று இணைந்து செயற்படுதல் - திறந்த விஞ்ஞானக் கூட்டம், நெதர்லாந்து
7. ஜினதாஸ, எஸ்.யு.பி. (2005), கடல் நீர் மின்னோட்ட முறைமையுடன் வண்டற்படிவு கனிப்பொருட்களினதும், கீழ் மட்ட அடையல்களினதும் பங்கீடு, Journal of Fisheries and Aquatic Science, தொகுதி 10.
8. ஜினதாஸ, எஸ்.யு.பி. (2005), 2 D தாக்குப்பிடித்தல் பிரதிமைகளின் வழிவகைகளினால் கரையோர வலயத்தில் உப்பினதும், நன்னீர் ஒருமுகப்படுத்தலினதும் எல்லை கோலுதல், செயலமர்வு கருத்துக் கோர்வை, இலங்கையில் மீன்பிடித்தல், நீர்வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வு, 'நாரா' கேட்போர்கூடம், கொழும்பு
9. ராஜபக்ஷ ஜே.கே. லால் சமரக்கோன், 2005, பல்-கூருணரி, பல்-நேர செய்மதி தரவைப் பயன்படுத்தி காணிப் போர்வை, காணி பயன்படுத்தல் வகைப்படுத்தல், மேகொங் டெல்டா, தென் வியட்நாம், 26ஆவது சேய்மை கூருணர்வுப்படுத்தல் மீதான ஆசிய மகாநாடு.
10. ராஜபக்ஷ, ஜே.கே., கிங் சன் ஊ, மஸ்குட் மெஹ்தியவ், லால் சமரக்கோன், 2005, சுனாமி தாக்கங்களின் விரைவான மதிப்பீட்டுக்கு உயர் துணிப்பு பிரதிமைகள்; காலி நகரம், இலங்கை, சுனாமி விஞ்ஞான பொது அரங்கு, AIT
11. ராஜபக்ஷ, ஜே.கே., 2005, Terra/MODIS மேக கண்டுபிடித்தல் அல்கோரிதமும், அவற்றின் பிராந்திய மாற்றங்களும், இலங்கையில் மீன்பிடி, நீர்வாழ் ஆராய்ச்சி, 'நாரா' சர்வதேச செயலமர்வுக் கருத்துக்கோர்வை

12. தென்னக்கோன், ரி.கே.டி., "இலங்கையில் சமுத்திர சக்தி ஆராய்ச்சியின் தேவை", மீன்பிடித்தல், நீர்வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வின் கருத்துக் கோர்வை, 2005 மார்ச் 29-31, 'நாரா', கொழும்பு, இலங்கை.

13 பட்டிஆரச்சி, வி., விஜேரத்ன, இ.எம்.எஸ்., இந்து சமுத்திர சுனாமியினால் தூண்டப்பட்ட கரையோர, துறைமுக அலைவுகள், சமுத்திர அலை அளவீடு, மதிப்பாய்வு மீதான ஐந்தாவது சர்வதேச கருத்தரங்குக்கு சமர்ப்பிக்கப்பட்டது. WAVES 2005, மட்ரிட், ஸ்பெயின், 2005 ஜுலை 3-7

14. எம்.எ.மெரிபீல்ட், வை.எல்., பயரிங், ஜி. பிரான்ட்ரிட், ஆர், பரே, பீ.கிளொன்ஸ்கி, டபிள்யு. நைட், எல்., கொங், சி. மகோரி, பி. மனுருங், சி. மக்கிரீரி, டபிள்யு. மிச்செல், எப்.ஷிலிங்டன், இ.எம்.எஸ். விஜேரத்ன, பி. கோல்ட் வெல, ஜே.ஜார்டின், எஸ். நக்கஹர, எப்.வை., போர்ட்டர், என்., குருள்கை, இந்து சமுத்திரத்தின் வற்றுப்பெருக்கு மானி அவதானிப்புகள், சுனாமி, 2004, டிசம்பர் 26, புவி பௌதீக ஆராய்ச்சி மடல்கள், 32, 2005.

15. விஜேரத்ன, இ.எம்.எஸ். மற்றும் பட்டிஆரச்சி, சி., இலங்கையின் கரையோரத்தின் வழியே 2004 டிசம்பர் 26இனதும், 2005 மார்ச் 28இனதும் சுனாமி அலை அலைவுகளின் குணவியல்புகள், ஆசிய, பசுபிக் கரையோரங்கள் மீது மூன்றாவது சர்வதேச மகாநாடு, 2005, செப்ரெம்பர் 4-8, கொரியா.

16. விஜேரத்ன, இ.எம்.எஸ்., கரையோரத்தின் மீது சுனாமியினதும், புயல் கிளம்பல்களினதும் போக்கு, "இயற்கை அழிவுகளும், புவி விஞ்ஞானிகளின் வகிபங்கும்" மீதான இலங்கை புவிவரலாற்றியல் சங்கத்தின் இருபத்தியோராவது வருடாந்த அமர்வுகள், பேராதனை பல்கலைக்கழகம், 2005

17. விஜேரத்ன, இ.எம்.எஸ்., சரித்த பீ.பட்டிஆரச்சி மற்றும் எமா கேல், பருவப் பெயர்ச்சி சுற்றினை மாதிரிப்படுத்துதலும், பாக்கு நீரிணை ஊடாக நீர் பரிமாற்றமும், IOMEC, 2005 பெப்ரவரி 14-18, பேர்த், மேற்கு அவுஸ்திரேலியா

18. விஜேரத்ன, இ.எம்.எஸ்., மற்றும் எல். ரிட்பேர்க், பாரிய (அதிபர உவர்) வற்றுப்பெருக்கு உள்வாங்கியொன்றில் வற்றுப்பெருக்கு அலையையும், விநியோகத்தையும், வதிவிட நேரத்தையும் மாதிரிப்படுத்தல், புத்தளம் கடல் ஏரி, இலங்கை, IOMEC, 2005 பெப்ரவரி 14 - 18 , பேர்த், மேற்கு அவுஸ்திரேலியா

19. விஜேரத்ன, இ.எம்.எஸ்., மற்றும் சரித்த பீ. பட்டிஆரச்சி, இலங்கையின் நீர்களில் கடல் மட்ட மாறுபடுந்தன்மை, IOMEC, 2005 பெப்ரவரி 14 - 18 , பேர்த், மேற்கு அவுஸ்திரேலியா

### வழங்கப்பட்ட மேற்பார்வை/பயிற்சிகள்

1. செல்வி எஸ்.லியனகே, மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டிடக்கலைத் திணைக்களம்.
2. எம்.எஸ்சி (கட்டிடக் கலை) - கே.தென்னக்கோன்
3. திரு.ஜே.கே.ஜி.பி.சஞ்ஜீவ, பட்டப்பின்படிப்பு விஞ்ஞான நிறுவனம்
4. எம்.எஸ்சி (சமுத்திரவியல்) எச்.பீ.ஜயசிறி
5. திரு.கே.கதிரகீதன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், 2005
6. மீன்பிடி விஞ்ஞானத்தில் டிப்ளோமா, எச்.பீ.ஜயசிறி

### மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகள்

புவிமேற்பரப்பியல் மீதான செயலமர்வு, நில அளவைப் பாடசாலை, தியத்தலாவை, இலங்கை, 2005 ஜுலை 11-15 - எஸ்.யு.பி.ஜினதாச

இலங்கை இந்திய கண்டமேடையில் வெளி ஓரத்தின் சித்தரிப்பு மீதான இந்திய இலங்கை செயலமர்வு, 2005 ஏப்ரல் 25-30, எஸ்.யு.பி.ஜினதாச

கடலின் சட்டம் மீதான பயிற்சிச் செயலமர்வு, கொழும்பு, இலங்கை, 2005 மே 16-25, எஸ்.யு.பி.ஜினதாச

ஆராய்ச்சிக் கப்பல் மூலம் பயிற்சி, கப்பலிலான பயிற்சி, PNGஇலிருந்து டார்வின் வரை, சிட்டி பல்கலைக்கழகம், 24.06.2005 - 08.07.2005, டபிள்யு.எஸ்.சி.பிரியதர்ஷினி

வற்றுப்பெருக்கு மானியையும், உபகரணத்தையும் கையாள்தல் மீதான உயர்தர பயிற்சி, சமஷ்டி கடலக முகவராண்மை (BHS), ஜேர்மனி, 06-17.09.2005, இ.எம்.எஸ்.விஜேரத்ன

### கட்டுரைகளும், துண்டுப் பிரசுரங்களும்

கரைந்த ஒட்சிசனினதும், உயிரியல் உற்பத்தித்திறனினதும் மீதான செய்திப்பத்திரிகைக் கட்டுரை விஸ்தரிப்பு அலகுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நீர்வாழ் சூழலியல் முறைமைகளில் கரைந்த ஒட்சிசனினதும், உயிரினவியலினதும் மீதான துண்டுப் பிரசுரம் (சிங்களத்தில்)

### வேறு செயற்பாடுகள்

2005 மே 28 அன்று காலி, ஜின்தோட்டை மகா வித்தியாலயத்தில் மீன்பிடி அமைச்சின் ஒன்றுதிரட்டுதல் சேவையில் பங்கெடுப்பு.

### பங்கெடுக்கப்பட்ட கருத்தரங்குகள்/செயலமர்வுகள்/மகாநாடு/பரஸ்பரக் கருத்துப் பரிமாறல்

சேது சமுத்திரம் மீதான இலங்கை, இந்திய தொழில்நுட்ப மட்ட கருத்துப் பரிமாறல்கள்

முதலாவது சுற்று 2 - 03.01.2005

இரண்டாவது சுற்று 01.08.2005

கே.அருளானந்தன்

INGOOS/JCOMN மேற்கு இந்து சமுத்திரம் XBT பயிற்சி செயலமர்வு, மிராமர், கோவா, இந்தியா

2005 ஒக்ரோபர் 5-7

கே.அருளானந்தன்

இந்து சமுத்திர கடலக சூழல் மகாநாடு (IOMEC), பேர்த். அவுஸ்திரேலியா, 2005 பெப்ரவரி 14-18

கே.அருளானந்தன் மற்றும் இ.எம்.எஸ்.விஜேரத்ன

காலநிலை மாற்ற பொதுசன விழிப்பியல் கருத்தரங்கு, எடையளவியல் திணைக்களம், இலங்கை 25.10.05

டபிள்யு.என்.சி.பிரியதர்ஷினி

# அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி ரஞ்ஜித் எதிரிசிங்க

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

மீன்பிடித்தலினதும், நீர்வாழ் வளங்களினதும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத் துறையில் பலதரப்பட்ட அம்சங்கள் மீது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணியை அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பப் பிரிவு மேற்கொள்கின்றது. மீன், கடல் உணவுகள், நீர்வாழ் விருத்தி, மற்றும் அலங்கார மீன் கைத்தொழில் ஆகியவற்றுக்கு நுண் உயிரியலினதும், இரசாயன சாராமாறிகளினதும் ஆய்வுகூட சோதித்தல் சேவைகளைப் பிரிவு வழங்குகின்றது. அதாவது சோதனைச் சேவைகள், கடல் உணவு உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் நீர்வாழ் உணவு உற்பத்திகளை முன்னேற்றுதல் ஆகிய மூன்று பிரதான குழுக்களாக பிரிவின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் வகைப்படுத்தப்பட முடியும். 2005ஆம் ஆண்டின் போது இப்பாரிய துறைகளின் கீழ் நான்கு ஆராய்ச்சி கருத்திட்டங்களும், ஒரு சோதனைச் சேவையும் நடத்தப்பட்டன. மேலதிகமாக, மீன்பிடி கைத்தொழிலுக்கு சுனாமியின் தாக்கத்தை ஆய்வதற்காக இரு விசேட கருத்திட்டங்களும் நடத்தப்பட்டன.

தரக்கட்டுப்பாடு ஆய்வுகூடத்தின் நுண் உயிரியல் மற்றும் இரசாயனவியல் பிரிவுகள் கைத்தொழிலுக்கு சோதித்தல் சேவைகளை நடத்தியுள்ளன. ISO 170 25 தர உறுதிப்படுத்தலின் பிரகாரம் சேவைகளின் விஸ்தரிப்புடன் ஆய்வுகூடங்கள் ஈடுபட்டுள்ளன. மீன் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத் துறையில் பலதரப்பட்ட பிரச்சினைகள் மீது பெருமளவு பொதுசன மற்றும் கைத்தொழில் விழிப்பியல் திட்டங்களை அ.பி.தொ.பி. இன் பணியாளர்கள் நடத்தியுள்ளனர். சுனாமியின் பின்னர் மீன் பாவனை மீது விழிப்பியலை உயர்த்துவதை இத்திட்டங்கள் பிரதானமாக இலக்குப்படுத்தின. மேலதிகமாக, மீன் பதப்படுத்தல் பொறிகளின் பிரச்சினைகளைக் களைவதிலும், சுகாதாரப் பிரச்சினைகளைக் கையாள்வதிலும் பயிற்சித் தொழில்நுட்ப ஆளணியினரினால் கைத்தொழிலுக்கு இப்பிரிவு சேவைகளை வழங்கியது.

தற்போது 05 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், 07 ஆராய்ச்சி உதவியாளர்கள், 01 தரவுப் பதித்தல் இயக்குனர், மற்றும் 02 ஆய்வுகூடச் சிப்பந்தி மற்றும் 07 பயில்திறனிலான ஊழியர்களைக் கொண்ட வேறு ஆதரவளிக்கும் பணியாளர் ஆகியோரை பிரிவு கொண்டுள்ளது. ஓர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் வெளிநாட்டில் பிஎச்.டி. திட்டத்திற்காக கற்கின்றார். தற்போது, பிரிவில் ஒரு தொகை வெற்றிட பதவிநிலைகள் உள்ளன. ஓர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் கடல் உணவு பாதுகாப்பு முகாமைத்துவம் மீது சிங்கப்பூரில் பயிற்சியை மேற்கொண்டுள்ளதுடன், இரு ஆராய்ச்சி உதவியாளர்கள் தாய்லாந்தில் நோய் எதிர்ப்பு பகுப்பாய்வு மீதான குறுகியகால பயிற்சியைப் பின்பற்றுகிறார்கள். மேலதிகமாக, ஆய்வுகூட முகாமைத்துவம் மீது பாடநெறியொன்றை ஓர் ஆராய்ச்சி உதவியாளர் முடித்துள்ளார். ISO தரக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் தேவையின்படி, பிரிவின் பணியணி உறுப்பினர்கள் SLSI இல் ஒரு தொகை பயிற்சித் திட்டங்களில் பங்கெடுத்தனர்.

2004 டிசம்பர் 26 அன்று சுனாமியினால் பிரிவு பெரிதுமே சேதமடைந்தது. சம்பவத்தினால் இரசாயனவியல், நுண்உயிரியல், மற்றும் போஷாக்கு ஆய்வுகூடங்கள் ஆகியனவும், பதப்படுத்தல் தொழிற்சாலையும் மோசமாகச் சேதமடைந்தன. சில ஆய்வுகூடச்சாதனங்களும், அலுவலக விடயங்களும் சேதமடைந்தன. தாக்கம் மிகவும் பாரதூரமானது என்பதுடன், ஆகவே ஆண்டின் போது நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பெருமளவு கருத்திட்டங்களின் செயற்பாடுகள் குழப்பமடைந்தன. எனினும், தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தின் செயற்பாடுகள் 2 வாரங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஆனால், நுண் உயிரியல் மற்றும் இரசாயனவியல் ஆய்வுகூடங்களின் செயற்பாடுகள் சில மாதங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டன. மீன் பதப்படுத்தல் தொழிற்சாலையின் சாதனங்கள் இனிமேல் தான் மாற்றீடு செய்யப்படவுள்ளன.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| இல. | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|
| 1. | சோதனைச் சேவையைப் பன்னிலைப்படுத்துதலும், சோதனைச் சாராமாறிகளுக்கு தத்துவமளித்தலும் | 2.5 மி. | கலாநிதி ஆர்.எதிரிசிங்க<br>ஐ.காரியவாசம் | ஜன. 2005 | டிச. |
| 2. | மீன்பிடிக் கைத்தொழிலின் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களின் அடிப்படையிலான தரத்தைக் குறைப்பதற்கு தீர்விலான நடவடிக்கைகள் மீதான ஆய்வு | 0.6 மி. | ஜி.ஜே.கனேகமஆரச்சி | ஜன. 2005 | டிச. |
| 3. | நீர்வாழ் விருத்திக் கைத்தொழிலின் உற்பத்திகளில் நோய் எதிரிகளினதும், வேறு மிருக வைத்திய ஔடதங்களினதும் பாவனையிலும், மீத மட்டங்களிலும் ஆய்வுகள் | 1.0 மி. | கலாநிதி ஆர்.எதிரிசிங்க | ஜன. 2005 | டிச. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | உள்நாட்டு மீன்பிடித்தலின் தரத்தை உறுதிப்படுத்துதல் | 0.8 மி. | ஐ.காரியவாசம் | ஜன. 2005 | டிச. |
| 5. | குறைத்துப் பயன்படுத்தப்படும் மீன் வளங்களைப் பயன்படுத்தி சௌகரியமான உணவை முன்னேற்றுதலும், பதப்படுத்தப்பட்ட மீன் உற்பத்திகளின் தரத்தை மதிப்பிடுதலும் | 0.5 மி. | பி.எஸ்.ஜயசிங்க | ஜன. 2005 | டிச. |
| 6. | சாதனத்தின் கொள்வனவு | 3.7 மி. | | ஜன. 2005 | டிச. |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1: சோதனைச் சேவையைப் பன்னிலைப்படுத்துதலும், சோதனைச் சாராமாறிகளுக்கு தத்துவமளித்தலும்

உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக மீன்களுக்கும், கடல் உணவுகளுக்கும் சான்றளிப்புச் சேவைகளை வழங்குவதற்கு திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முன்னைய வருடத்தில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்திலிருந்து ASTELஇன் கீழ் ISO/ IEC 17025 கட்டளைகளை தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் பெற்றுள்ளது. காற்று வாழுயிருக்குரிய தகடு, Coliform, மலம் கலந்த Coliform மற்றும் E.coli ஆகியனவற்றுக்கான சாராமாறிகளைத் தொடர்வதற்கு உத்தரவுப்பத்திரத்தைப் பெற்றது.

உள்ளகக் கணக்காய்வுகளும், முகாமைத்துவ மதிப்பாய்வுகளும் நடத்தப்பட்டதுடன், மீன்பிடி திணைக்களத்திலிருந்து மதிப்பீட்டாளர்கள் கண்காணிப்பு கணக்காய்வை நடத்தினார்கள். மேலதிகமாக, 1023 கைத்தொழில் மாதிரிகளின் சாராமாறிகள் சோதிக்கப்பட்டதுடன், 190 அறிக்கைகள் வழங்கப்பட்டன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 85 நிதிசார்: 57

### கருத்திட்டம் 2: மீன்பிடிக் கைத்தொழிலின் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களின் அடிப்படையிலான தரத்தைக் குறைப்பதற்கு தீர்விலான நடவடிக்கைகள் மீதான ஆய்வு

வேலைத்திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டவாறு, மீன்பிடி இறங்குதுறைக்கும், கையாள்தல் இடங்களுக்கும் சுனாமியின் செல்வாக்கின் காரணமாக கடற்கரையினீங்குகின்ற படகுகளில் இருந்து வந்திறங்கும் தூனா இனங்களின் அறுவடைக்குப் பிந்திய தரத்தில் இழப்புக்களின் நடைமுறை மட்டத்தை மதிப்பிடுவது சாத்தியப்படவில்லை. இக் கருத்திட்டத்தின் கீழ் 2005இன் போது பின்வரும் செயற்பாடுக்ள நிறைவேற்றப்பட்டன.

### பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

கடற்கரையினீங்குகின்ற படகுகளிலிருந்து மீனினதும், மீன்பிடித்தல் உற்பத்திகளினதும் நுண் உயிரியல், இரசாயன, மற்றும் பௌதீக தரத்தை மதிப்பிடுதல். *Listeria* மாதிரிகளுக்காக 26 மாதிரிகளின் (மஞ்சள் செட்டை தூனா மற்றும் ஸ்கிப்ஜாக் தூனா) பகுப்பாய்வு அடையாளம் காணப்பட்டதுடன், 14 எண்ணிக்கையிலான heamolytic தனியாக்கங்களும், இந்த தனியாக்கங்களின் மேலும் அடையாளங் காணலும் திட்டத்தில் உள்ளன.

உருகுகின்ற பனிக்கட்டியின் களஞ்சியப்படுத்தப்பட்ட *Katsuwonus pelamis*இன் (ஸ்கிப்ஜாக் தூனா) பௌதீக தரக் குணவியல்புகளில் (இழையம், நிறம் மற்றும் வெளிப்படுத்தப்படுகின்ற ஈரப்பதன்) மாற்றங்கள் 22 நாட்களுக்கு மதிப்பிடப்பட்டன. ஓர்கனோபெப்டிக் முறைகளுக்கு மேலதிகமாக *Katsuwonus pelamis*இன் (ஸ்கிப்ஜாக் தூனா) வைத்திருக்கும் காலத்தை எதிர்வு கூறுவதற்கு எளியதும், நம்பகமானதுமான சோதனை முறைகளின் அடிப்படையில் நிரையிடுவதே ஆய்வின் நோக்கங்களாகும். இழைய பகுப்பாக்கி (நிலையான நுண் முறைமைகள்) ஒன்றைப் பயன்படுத்தி மீன்களின் இழையம் அளவிடப்பட்டது. உருளை வடிவிலான ஆய்தலைப் பயன்படுத்தி (25 மி.மீ. விட்டம்) அளவிடப்பட்ட வன்தன்மையானது உருகுகின்ற பனிக்கட்டியில் 22 நாள் களஞ்சிய காலத்தின் போது 90.18 கி.இலிருந்து (இரண்டாவது நாள்) 1.779 கிராம் (22ஆவது நாள்) என வேறுபடும் 4 நாட்கள் கொண்ட இடைவெளிகளில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. வெட்டுதல் பத்திரத்தை (3 மி.மீ. கொண்ட தடிப்பம், 70 மி.மீ. கொண்ட அகலம்) பயன்படுத்தி அளவிடப்பட்ட கத்தரித்தல் விசை குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்ததுடன், உருகும் பனிக்கட்டியில் 22 நாட்களைக் கொண்ட களஞ்சிய காலத்தின் போது 92.137 கி.இலிருந்து (இரண்டாவது நாள்) 3.28 கி.க்கு (22ஆவது நாள்) மாற்றமடைந்தது. ஸ்கிப்ஜாக் தூனாவின் இழையத்திலான தரத்தை மதிப்பிடுவதற்கு இந்த இரு இழையத்திலான சாராமாறிகள் பயன்படுத்தப்பட முடியும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 88

### கருத்திட்டம் 3: நீர்வாழ் விருத்திக் கைத்தொழிலின் உற்பத்திகளில் நோய் எதிரிகளினதும், வேறு மிருக வைத்திய ஔடதங்களினதும் பாவனையிலும், மீத மட்டங்களிலும் ஆய்வுகள்

இலங்கையில் நீர்வாழ்விருத்தி கைத்தொழிலில் மிருக வைத்திய ஔடதங்களின் உபயோகத்தை ஆய்வதே கருத்திட்ட நோக்கங்களாகும். நீர்வாழ் விருத்தி கைத்தொழிலில் மிருக வைத்திய ஔடதங்களின் விஸ்தாரமான உபயோகத்தின் விளைவாக, பொதுசன சுகாதார ஆபத்துக்களையும், சூழல் மாசுபடுத்தலையும் விளைவிப்பதற்கான காரணமுள்ளது. இறால் பிடிப்போர்களிடமிருந்தும், தொழிற்சாலைகள் மற்றும் அடைகாக்கும் நிலையங்களிலிருந்தும் 31 இறால் மாதிரிகள் சேகரிக்கப்பட்டதுடன், ELISA முறையைப் பயன்படுத்தி Chloramphenicol மட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மேலதிகமாக, Chloramphenicolக்காக 6 இறால் உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாயப்பட்டன. பகுப்பாயப்பட்ட இறால் மாதிரிகளில், 24 சம்பவங்கள் கண்டுபிடிக்கப்படக்கூடிய மட்டத்தின் (0.2 ppm) கீழ் இருந்தன. ஆனால், 7 சம்பவங்கள் 0.2 ppm மட்டத்தை விட உயர்வானவையாகும் என அறிக்கையிடப்பட்டது. இறால் தடைகளை விட Chloramphenicolஇல் உயர்வான மட்டங்களை இறால் உணவுகள் காட்டின. இது நீர்வாழ் விருத்தியில் சட்டவிரோதமான நோய் எதிரிகளின் மறைமுகமான உபயோகத்தை எடுத்துக் காட்டுகின்றது. எனினும், இந்த ELISA முறையின் கூருணர்வுத்தன்மை இந்த ஔடதங்களின் பூஜ்ய மட்டங்களைப் பகுப்பாய்வதற்கு போதுமானதல்ல.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 88

### கருத்திட்டம் 4: உள்நாட்டு மீன்பிடித்தலின் தரத்தை உறுதிப்படுத்துதல்

ஆய்வுக்காக ஹம்பாந்தோட்டை, புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் வர்த்தக உள்நாட்டு மீன்பிடித்தலுடன் தெரிவு செய்யப்பட்ட நன்னீர் தொட்டிகள் தெரிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு அமைவிடத்திலும் மீனவர்களிடமிருந்து தரத்தின் பிரச்சினைகள் தொடர்பிலான தகவல் சேகரிக்கப்பட்டது. மாதிரிகளாக படகிலிருந்தும், சந்தையிலிருந்தும் உடன் மீன்களும், ஆழ்-குளிரூட்டப்பட்ட மீன்களும், மீன் தசைகளும் எடுக்கப்பட்டன.

2005 பெப்ரவரியிலிருந்து டிசம்பர் வரை மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. திலபியா இனம், கார்ப் இனம் ஆகியன வர்த்தகப் பெறுமதியைக் கொண்ட பாரிய நன்னீர் மீன் இனங்களைச் சேர்ந்தவையாகும். கலாவெவ, நாச்சதுவ குளம், மகாவிலச்சிய குளம், தபோவவெவ, லுணுகம்வெஹர குளம், வீரவிலவெவ, பராக்கிரம சமுத்திரம், மின்னேரியா குளம், கவுதுல்ல குளம், கண்டலம குளம் மற்றும் தேவஹுவ குளம் ஆகியவற்றில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மீன்களைக் கையாள்வதற்குப் பயன்படுத்தப்படும் குளங்களிலிருந்து நீர் மாதிரிகள் பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டன. APC, Coliforms, Faecal Coliforms, *E.Coli, Salmonella* ஆகியவற்றின் நுண்ணுயிரியல் சாராமாறிகளுக்காக மாதிரிகள் சோதிக்கப்பட்டன. அதேவேளை குடிநீர் தரத்திற்காக நீர் சோதிக்கப்பட்டது.

தரத்திற்காக 77 மீன் மாதிரிகளும், 16 நீர் மாதிரிகளும் சோதிக்கப்பட்டன. லுணுகம்வெஹரவிலிருந்து 01 (09) மீன் மாதிரியும், பராக்கிரம சமுத்திரத்திலிருந்து 02 (06) மீன்மாதிரியும், விலச்சியவிலிருந்து 01 (06) மீன் மாதிரியும், லுணுகம்வெஹர, பராக்கிரம சமுத்திரம், கலாவெவ மற்றும் தேவஹுவ வெவ ஆகியவற்றிலிருந்தும் நீர் மாதிரிகளும் சல்மொனல்லாவுக்கு பொஸிட்டிவ் எனக் கண்டறியப்பட்டது.

சேகரிக்கப்பட்ட சகல தரவுகளுடனும், தகவலுடனுமான அறிக்கை தற்போது தயாரிக்கப்படுகின்றது. ஏனைய மாவட்டங்களையும் உள்ளடக்குவதற்காக 2006இல் கருத்திட்டத்தை தொடர்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கள வருகைதரல்களில் இடவசதியைக் கண்டறிவதில் கஷ்டங்கள் முகங்கொடுக்கப்பட்டதுடன், இடவசதி கிடைக்காததின் காரணமாக சில களவருகை தரல்களை ரத்துச் செய்ய வேண்டியிருந்தது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 91

### கருத்திட்டம் 5: குறைத்துப் பயன்படுத்தப்படும் மீன் வளங்களைப் பயன்படுத்தி சௌகரியமான உணவை முன்னேற்றுதலும் பதப்படுத்தப்பட்ட மீன் உற்பத்திகளின் தரத்தை மதிப்பிடுதலும்

தவிர்க்க முடியாத விளைவொன்றே அறுவடை செய்யப்பட்ட குப்பை மீன் என்பதுடன், சில்வர் பொலிஜ், ரிபன் மீன், பூனை மீன், elasmobranches soles perches, cephalopods மற்றும் crustaceans ஆகியவற்றுடன் முதன்மையான உப உற்பத்தியாகும். உணவு மீன்களாக இந்த மீன்கள் சிறிதளவு அல்லது அறவேயற்ற வர்த்தக பெறுமதியைக் கொண்டுள்ளன. குப்பை மீன் வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மீன் உணவு புரதத்தினதும், வேறு நுண் போக்குகளினதும் மாற்று வளமொன்றாகும். இவை நீர்வாழ் விருத்தி கைத்தொழிலுக்கு அவசியப்படும் இறக்குமதியாகும் மீன் உணவின் ஆகுசெலவை குறைந்தபட்சமாக்கும்.

கற்பிட்டியிலும், மன்னாரிலும் துணைப் பிடியாக பிடிக்கப்பட்ட குப்பை மீன்களிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. கற்பிட்டியிலிருந்தும், மன்னாரிலிருந்தும் மூலத்திலான படகுகினால் பிடிக்கப்பட்ட வெள்ளி வயிற்று இனங்களைப் பயன்படுத்தியே

இந்த மீன் உணவு தயாரிக்கப்பட்டது.

நீராவியேற்றுதலின் மூலமும், கையினாலான திருகுதல் அழுத்தத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கரையத்தக்க அமைப்புக்களையும், கரையாத செறிவுகளையும் புறம்பாக்குவதன் மூலமும் மீன் உணவு தயாரித்தல் நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. பொறிமுறை கனலடுப்பு உலர்த்தியைப் பயன்படுத்துவதன் மூலம் கரையாதவை நீரகற்றப்பட்டன. மீன் உணவின் ஒரு பகுதி நீராவியேற்றப்பட்டு, அழுத்தப்பட்டு, உலர்த்தப்பட்டு, அரைக்கப்பட்டது. நான்கு உலர் பொருள் மூலங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உலர்ந்த பொலித்தீன் பொதியிலடைக்கப்பட்ட மீன் உணவு குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டது. ஏனைய பகுதி அழுத்தப்படாமல் மேலேயுள்ளவாறு பதப்படுத்தப்பட்டது. கையினாலான திருகுதல் அழுத்தத்தின் தாக்கமும் மதிப்பாயப்பட்டது. ஆய்வுகூடத்தில் தயாரிக்கப்பட்ட மீன் உணவின் தரத்தின் ஒப்பீடு மீன் உணவுக்கான SLSI கட்டளையின்படி செய்யப்பட்டது.

வெள்ளிவயிற்று மீனிலிருந்தும், பிடியிலிருந்தும் மீன் உணவின் தரம் SLSI விதந்துரைப்புகளின் தரம் 1 வீச்செல்லையினுள் இருந்தது. கழிவு உற்பத்திகள் பகுப்பாய்வின் மேற்படி அவதானிப்புகளை உருவாக்குவதற்கு, தோல், தலைகள், உடலகம், மற்றும் எலும்புகள் ஆகியவற்றை அடக்கும் திண்மத்திலான கழிவு சுமார் 50% தொகையிலானதாகும். பதப்படுத்தல் பொறிகளின் இரு வகைகளுக்கும் திண்மக் கழிவின் தொகை 40% - 60% ஆகும். 22% மீன் உணவு சுறா மற்றும் தூனா கழிவிலிருந்து பெறப்பட்டது. மீன் உணவின் 1 கிலோ கிராமிலிருந்து உற்பத்தி பகுப்பாய்வின் ஆகுசெலவு மீன் பதப்படுத்தல் கழிவுக்கு ரூபா 52.99 ஆகும்.

தொழிற்சாலை உலர் கழிவின் TVN பெறுமதி 35 மி.கி./100 கி. ஆகும். தொழிற்சாலையில் உலர் பொருளின் கிட்டும் தன்மை 2000 கி.கி./நாள் ஆகும்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 122

**கருத்திட்டம் 6: சாதனத்தின் கொள்வனவு**

காலத்தின் போது உயிரியல் பாதுகாப்பு அலுமாரிகள், இரு ஓட்டோகிளேவ்கள், அடைகாப்பான்கள் போன்ற ஒரு தொகை அவசியமான சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மேலதிகமாக, ஒரு தொகை வேறு விடயங்களைக் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவு பெறக்கட்டளைகள் வழங்கப்பட்டன. நீண்ட நடைமுறைகளினதும், மற்றும் பிரிவின் வேறு செயற்பாடுகளினதும் காரணமாக, சாதனங்களின் கொள்வனவு கணிசமானளவு தாமதமடைந்தது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: 45

## 4. வெளியீடுகள்


1. டீ.குரூஸ், எம்.டி.எஸ்.ரி., ஜயசிங்க, ஜே.எம்.பி.கே., எதிரிசிங்க, இ.எம்.ஆர்.கே.பீ., டீ சில்வா, டி.என். (2005), இலங்கையில் *Penaeus monodon* என்ற பிடிக்கப்பட்டு, விருத்திசெய்யப்பட்ட கறுப்பு புலி இறாலின் இலிப்பிட்டு அடக்கமும், கொழுப்பு அமில பக்கவரைகளும், Sri Lanka Journal of Aquatic Science 10, 35-43

2. எதிரிசிங்க, இ.எம்.ஆர்.கே.பீ., கிர.்.பாம், எ.ஜே. மற்றும் ரெயிலர், எஸ்.ஜே. (2005) வாயு கூருணர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆவிப்பறப்புள்ள கலவைகளின் பாகுபாட்டின் மூலம் மஞ்சள் செட்டை தூனாவின் உடன்தன்மையை மதிப்பாய்தல்.
(2005 ஜூன் 09 அன்று 'நாரா'வின் சஞ்சிகையில் வெளியிட முழுக் கட்டுரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது).

3. எதிரிசிங்க, இ.எம்.ஆர்.கே.பீ., (2005), Chemotherapeutic ஔடதங்கள் - நீர்வாழ் விருத்தி உற்பத்திகளில் மாசுபடுதல் பிரச்சினைகள், மீன்பிடித்தல், நீர்வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வின் கருத்துக் கோர்வை, கொழும்பு, இலங்கை, மார்ச் 29-31

4. கனேகமஆரச்சி ஜி.ஜே., சுமணசிறி ஆர்.டி.கே., சிறில் எச்.டபிள்யு., அமரசிறி, சி., மற்றும் பெரேரா, எம்.டி.சி.எ. (2005), கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தலிலிருந்து இலங்கையின் ஏற்றுமதி கைத்தொழில் வரை *Thunnus albacares* இன அறுவடைக்குப் பிந்திய தரத்தின் தற்போதைய நிலை, மீன்பிடித்தல், நீர்வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வின் கருத்துக் கோர்வை, கொழும்பு, இலங்கை, மார்ச் 29-31

6. ஜயசிங்க, பி.எஸ்., மற்றும் கலப்பத்தி, சி., (2005), பெறுமதி சேர்க்கப்பட்ட மீன்பிடித்தல் உற்பத்திகளின் உற்பத்திக்கான குறைத்துப் பயன்படுத்தப்படும் மீன்பிடி மூலவளங்களின் உபயோகம் மீன்பிடித்தல், நீர்வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வின் கருத்துக் கோர்வை, கொழும்பு, இலங்கை, மார்ச் 29-31

6. ஜயசிங்க பி.எஸ்., மற்றும் ராஜகருண, ஆர்.எம்.எ.ஜி.ஜி. (2005), இலங்கையில் மீன் சந்தைகளில் விற்பனையாகும் மீனின் பக்டீரியா மாசுபடுத்தல், Journal of National Science Council of Sri Lanka, 33(3): 219-221

7. ஜயசிங்க பி.எஸ்., மற்றும் ராஜகருண, ஆர்.எம்.எ.ஜி.ஜி. (2005), இலங்கையில் மத்திய மாகாணத்தில் மீன் சந்தைகளில் நோய் விளைவிக்கின்ற பக்டீரியாவின் தரவும், நிகழ்வும், Journal of Aisan Fisheries Society (வெளியீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது).

8. காரியவாசம், ஐ, (2005), கடலக மற்றும் நன்னீர் மீன் பிடித்தலில் தரத்தின் பிரச்சினைகள், மீன்பிடித்தல், நீர்வாழ் ஆராய்ச்சி மீதான சர்வதேச செயலமர்வின் கருத்துக்கோர்வை, கொழும்பு, இலங்கை, மார்ச் 29-31

## ஆராய்ச்சி அறிக்கைகள்

1. சுனாமியின் பின்னர் மீன்களின் பாவனை - நுண்ணுயிரியல் தரப் பிரச்சினைகள்

2. ஹம்பாந்தோட்டையில் கரகன் லெவாயவின் நீரின் தரம்

3. இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபன பங்கீட்டு வழியே மீன் கையாள்தல் நடைமுறைகளின் தரத்தின் மதிப்பீடு

4. உருகும் பனிக்கட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்ட *Katsuwonus pelamis*இன் (ஸ்கிப்ஜாக் தூனா) பௌதீக, நுண்ணுயிரியல், உயிரியல் இரசாயன மற்றும் கூருணர்வு தரத்தின் மதிப்பீடு

5. பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் கடற்கரையினீங்குகின்ற மீன்பிடி படகிலிருந்து இறக்கப்பட்ட உப்பிடப்பட்ட *Katsuwonus pelamis*இன் (ஸ்கிப்ஜாக் தூனா) தரத்தின் மதிப்பீடு

## துண்டுப் பிரசுரங்கள்

1. கடற்கரையினீங்குகின்ற படகுகளில் மீன்களின் சிறந்த கையாள்தல் நடைமுறைகள்
2. மீன்களின் களஞ்சியப்படுத்தலில் பனிக்கட்டியின் உபயோகம்
3. விற்பனையின் போது மீன்களுக்கான சிறந்த கையாள்தல் நடைமுறைகள்
4. கூருணர்வு முறைகள் மூலம் உடன் மீன்களை அடையாளங் காணுதல்
5. வீட்டில் மீன்களைச் சிறப்பாக கையாள்தல்
6. சிறந்த தரத்திலான மீன்களுக்கான சிறந்த தகவல் - "ஐஸ் இடப்பட்ட மீன்களை எப்பொழுதுமே வாங்கவும்" துண்டுப்பிரசுரங்கள் தமிழ் மொழி மூலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## 5. நடத்தப்பட்ட பயிற்சி/விழிப்பியல் திட்டங்கள்

1. கருப்பொருள் - பங்கீட்டு வழியே மீன்களைக் கையாள்தல் (ஆரம்பநிலைக் கையாள்தல்)
   இலக்குக்குழு: நீர்கொழும்பு பகுதியில் மீன் விற்பவர்கள்/மீன் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மீன் விற்பனைப் பெண்கள் (2005 மே 13).
2. கருப்பொருள்: கடற்கரையினீங்குகின்ற மீன்பிடி படகுகளில் மஞ்சள் செட்டை தூனாவையும், ஸ்கிப்ஜாக் தூனாவையும் சிறப்பாகக் கையாள்தல்
   இலக்குக்குழு: கடற்கரையினீங்குகின்ற படகு மீனவர்கள் (10.08.2005)
3. கருப்பொருள்: மீன்களின் சிறந்த ஆரம்பநிலை கையாள்தலுக்கும், சந்தைப்படுத்தலுக்கும் நீர்கொழும்பு
   இலக்குக் குழு: நீர்கொழும்பில் மாவட்ட மீன்பிடித்தல் அலுவலகத்தின் மீன்பிடித்தல் பரிசோதகர்கள் (2005 செப்ரெம்பர் 05).
4. கருப்பொருள்: கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தல் படகுகளில் மஞ்சள் செட்டை மற்றும் ஸ்கிப்ஜாக் தூனாவை சிறப்பாகக் கையாள்தல்
   இலக்குக் குழு: நீர்கொழும்பில் மாவட்ட மீன்பிடித்தல் அலுவலகத்தின் மீன்பிடித்தல் பரிசோதகர்கள் (2005 செப்ரெம்பர் 25).
5. நிக்கவரெட்டிய பகுதி அபிவிருத்தி திட்டத்திற்கு நன்னீர் மீன்களின் புகையூட்டல் மீது வேர்ள்ட் விஷன் லங்கா நிறுவனத்திற்கான உசாவுகைச் சேவை
6. சிங்கள மொழியில் நடத்தப்பட்ட திட்டம்
7. ஜாடியைத் தயாரித்தல்: பொலன்னறுவை மாவட்டத்தில் பிபுரத்தவவிலும், கவுதுல்லவிலும் நடத்தப்பட்டது (SED/NARA உடன் இணைந்து)
8. மீன்பிடி கூட்டுறவு சங்கங்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி, இலங்கையின் சுனாமியினால் பாதிக்கப்பட்ட தென் பிராந்திய பகுதிக்காக JICA இனால் ஒழுங்குபடுத்தப்பட்ட அமுலாக்கல், மீளுதல், புனர்வாழ்வு, அபிவிருத்திக் கருத்திட்டம்

9. திருந்திய கருவாடு மற்றும் மாசிக் கருவாடு பதப்படுத்தல் தொழில்நுட்பம்: தங்காலையில் சர்வோதய பெண்கள் இயக்கத்துடன் இணைந்து
10. சுனாமியின் பின்னர் மீன்களின் பாதுகாப்பு மீது ஒரு தொகை விழிப்பியல் திட்டங்கள் நடத்தப்பட்டன. பாவனையாளர்கள், மீன் பதப்படுத்துவோர், மற்றும் பொது மக்கள் ஆகியோரே இலக்குக் குழுவினராவர்.

## 6. பங்கெடுக்கப்பட்ட பயிற்சிகள்/செயலமர்வுகள்

1. ஆசியாவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் கரையோர சனசமூகங்களில் மீன்பிடித்தல்களினதும், நீர்வாழ் விருத்தியினதும் புனரமைப்பு மீதான பிராந்திய செயலமர்வு
2. கடல் உணவு பாதுகாப்பு முகாமைத்துவம் மீதான பயிற்சி, SEAFDEC, சிங்கப்பூர், 2005 செப்ரெம்பர் 20-ஒக்ரோபர் 14
3. "சுனாமியினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களின் புனரமைப்பு" மீதான கருத்தரங்கு, 2005 மார்ச் 24, கொழும்பு, IDB இலங்கை
4. "பல் உபயோக நீர்வாழ் முறைமையின் கம - இரசாயனத்தை நிருவகித்தல்" மீதான செயலமர்வு, 2005 ஒகஸ்ட் 16, கண்டி, இலங்கை.
5. புள்ளிவிபர மாதிரிப்படுத்தல் தொழில்நுட்பங்கள்: கிராமியத் துறை அபிவிருத்திக்கான தொழில்நுட்பங்கள் மீதான திட்டம்: அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்கள், தேசிய விஞ்ஞான மன்றம்.

# சேவை, தொழிற்படுத்தல் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** எந்திர. ஜி.ஒ.எல்.பண்டார

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

பராமரிப்பினதும், தேவைகள் விநியோகங்கள் ஒழுங்கமைப்பினதும் பொறுப்பும், பின்வரும் துறைகளுக்கு தொடர்பான நாளாந்த செயற்பாடுகளும் சேவைகள், தொழிற்படுத்தல் பிரிவுடன் தங்கியுள்ளது.

- போக்குவரத்து வசதி
- சிவில் வேலைகள்
- பொறிமுறை வேலைகள்
- மின்சார/இலத்திரனியல் வேலைகள்
- குளிரூட்டுதல், புகைப்படப்பிரதியெடுத்தல் இயந்திரங்கள்

'நாரா'வின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைக்கு ஆதரவளிக்கும் பிரிவின் முக்கிய பணியின் போக்குவரத்து, மற்றும் களத்திற்கு வாகனங்களின் ஒதுக்கீடு மற்றும், நாளாந்த ஓட்டம் ஆகியன சேவைகள், தொழிற்படுத்தல் பிரிவினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. கடந்த சில வருடங்களாக புதிய வாகனங்கள் கையகப்படுத்தப்படவில்லை. ஆகவே, 'நாரா' ஆராய்ச்சி தேவைகளுக்கு வாகனங்களை ஒதுக்குவது மிகக் கஷ்டமாக இருந்தது. பெரும்பான்மையான வாகனங்கள் 12 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவையாகும். ஆகவே, இவ்வாகனங்களைப் பராமரிப்பதற்கு கணிசமானளவு நேரமும், பணமும் எடுக்கின்றது. பழைய வாகனங்களை மாற்றீடு செய்வதற்காகப் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. 'நாரா'வின் சாரதி ஊழியர் கோப்பு 26 ஆகும். ஆனால், ஆண்டின் போது சுமார் 18 வாகனங்கள் மட்டுமே ஓடும் நிலையில் இருந்தன.

ஆய்வுகூடங்களில் உள்ள பலதரப்பட்ட சாதனங்களுக்கு கிரமமான பராமரிப்பு அவசியமாகும். மோசமான கடல் காற்றின் காரணமாக குளிரூட்டிகள் கிரமமாக சேவைப்படுத்தப்பட்டன. புகைப்படப் பிரதியெடுத்தல் இயந்திரங்கள், பிரின்ட்டர்கள்/பக்ஸ் இயந்திரங்கள் ஆகியன பிரிவினால் பராமரிக்கப்படுகின்றன.

### தடைகள்

சுனாமியின் காரணமாக, 'நாரா'வின் சாதனங்களும், வாகனங்களும், கட்டிடங்களும், இடப்பரப்புகளும் மோசமாக சேதமடைந்தன. 'நாரா'வின் முகாமைத்துவம் அடிக்கடி மாற்றமடைந்ததன் காரணமாக சில செயற்பாடுகள் தடைப்பட்டன (01.03.2005இலிருந்து 31.12.2005 வரையிலான காலத்தின் போது நான்கு பணிப்பாளர் நாயகங்கள் இருந்தனர்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| திட்டம் | | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா மில்.) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | காலம் வரை |
|---|---|---|---|---|---|---|
| குடிசார் நிருமாணம்/ புனரமைப்பு | 1.1 | பிரதான கட்டிடத்தின் புனரமைப்பு | 5.0 | ஜி.ஒ.எல்.பி.பண்டார | 01.01.05. | 31.12.05 |
| | 1.2 | ஆராய்ச்சி நிலையங்களின் புனரமைப்பு | 5.0 | ஜி.ஒ.எல்.பி.பண்டார | 01.01.05. | 31.12.05 |
| | 1.3 | சுனாமியினால் தாக்கப்பட்ட கட்டிடங்களின் புனரமைப்பு | 1.561 | ஜி.ஒ.எல்.பி.பண்டார | 01.01.05. | 31.12.05 |
| வாகனங்களின் புனரமைப்பு | 2.1 | 20 3224 தகரவேலை/தீந்தை பூசுதல்<br>54 2074 தகரவேலை/தீந்தை பூசுதல்<br>32 3417 தகரவேலை/தீந்தை பூசுதல்<br>61 0012 தகரவேலை/தீந்தை பூசுதல்<br>58 1378 எந்திரத்தை பழுதுபாத்தல்<br>57 4052 எந்திரத்தை பழுதுபாத்தல்<br>61 6251 விபத்து பழுதுபார்த்தல்<br>57 4053 விபத்து பழுதுபார்த்தல்<br>19 7768 விபத்து பழுதுபார்த்தல் | 2.0 | ஜி.ஒ.எல்.பி.பண்டார (பீ.எஸ்.விமலசிங்க) | 01.01.05. | 31.12.05 |
| சாதனங்களின் கொள்வனவு | 3.1 | குளிரூட்டல், பிரின்டர்கள், வேலைத்தல கருவிகள் | 0.77 | ஜி.ஒ.எல்.பி.பண்டார | 01.01.05. | 31.12.05 |

**செயற்றிறன்**

**கருத்திட்டம் 1.1: பிரதான கட்டிடத்தின் புனரமைப்பு**

'நாரா' பிரதான கட்டிடம் 23 வருடங்களுக்கு மேற்பட்டதாகும் என்பதுடன், பழுதுபார்க்கப்பட வேண்டும். ஆனால், இவ்வருடத்தின் போது, இந்த இலக்கினை எம்மால் சாதிக்க முடியவில்லை. சிறிய கேட்போர்கூடத்தின் புனரமைப்பு, திரைச்சீலையிடுதல் தவிர முடிக்கப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டின் போது பிரதான கட்டிடத்தில் சேதமடைந்த அலுமினியம் கதவுகளையும், ஜன்னல்களையும் மாற்றீடு செய்வதற்கு கேள்வி அழைக்கப்பட்டிருந்ததுடன், ஆனால் அதை முடிக்க முடியவில்லை. 2006ஆம் ஆண்டின் போது இப் பணி முடிவடைந்துள்ளது. திருகோணமலையில் வற்றுப்பெருக்கு நிலையத்தின் நிருமாணம் முடிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 42 நிதிசார்: 53.29

**கருத்திட்டம் 1.2 : ஆராய்ச்சி நிலையங்களின் புனரமைப்பு**

2005ஆம் ஆண்டின் போது கடொல்கெலே மற்றும் கற்பிட்டி ஆகியவற்றின் புனரமைப்புக்கு கேள்விகள் அழைக்கப்பட்டன.

கற்பிட்டி புனருத்தாரண கேள்விக்கு இரு கூறுவிலையிடுனர்கள் மட்டுமே இருந்தனர். ஆனால், அவர்கள் கேள்வி வழிகாட்டல்களை பின்பற்றவில்லை. ஆகவே, கேள்வி மீள அழைக்கப்பட்டது. கடொல்கெலே புனருத்தாரண கேள்விக்கு ஒருவரும் பதிலிறுக்கவில்லை.

முன்னேற்றம் (%) : பௌதீக: நிதிசார்:

**கருத்திட்டம் 1.3: சுனாமியினால் தாக்கப்பட்ட கட்டிடங்களின் புனரமைப்பு**

அலுமினியம் கதவுகளைப் பயன்படுத்தி சுனாமியினால் பாதிக்கப்பட்ட கதவுகள் மாற்றீடு செய்யப்பட்டன. தலைவரின்/ IARADஇன் கட்டிடத்தின் புனருத்தாரணம் முடிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 42 நிதிசார்: 36.12

**கருத்திட்டம் 2.1**

| | |
|---|---|
| 20-3224 | தகரவேலை/தீந்தை பூசுதல் |
| 54-2074 | தகரவேலை/தீந்தை பூசுதல் |
| 32-3417 | தகரவேலை/தீந்தை பூசுதல் |
| 61-0012 | தகரவேலை/தீந்தை பூசுதல் |
| 58-1378 | எந்திரத்தை பழுதுபாாத்தல் |
| 57-4052 | எந்திரத்தை பழுதுபாாத்தல் |
| 61-6251 | விபத்து பழுதுபார்த்தல் |
| 57-4053 | விபத்து பழுதுபார்த்தல் |
| 19-7768 | விபத்து பழுதுபார்த்தல் |

| | |
|---|---|
| 20-3224 | தகரவேலை/தீந்தை பூசுதல் முடிவடைந்தது |
| 54-2074 | தகரவேலை/தீந்தை பூசுதல் முடிவடைந்தது |
| 32-3417 | தகரவேலை/தீந்தை பூசுதல் முடிவடைந்தது |
| 61-0012 | தகரவேலை/தீந்தை பூசுதல் முடிவடைந்தது |
| 58-1378 | எந்திரத்தை பழுதுபாாத்தல் முடிவடைந்தது |
| 57-4052 | எந்திரத்தை பழுதுபாாத்தல் முடிவடைந்தது |
| 61-6251 | விபத்து பழுதுபார்த்தல் முடிவடைந்தது |
| 57-4053 | விபத்து பழுதுபார்த்தல் முடிவடைந்தது |
| 19-7768 | விபத்து பழுதுபார்த்தல் முடிவடைந்தது |

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 90.74

**கருத்திட்டம் 3.1: குளிரூட்டல், பிரின்டர்கள், வேலைத்தல கருவிகள்**

பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், தலைவரின் அலுவலகம், சிறிய கேட்போர்கூடம் ஆகியவற்றுக்கான புதிய குளிரூட்டிகளின் கொள்வனவு முடிவடைந்துள்ளது. பிரின்டர்கள், வேலைத்தல கருவிகள் போன்ற வேறு அவசியமான சாதனங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 90 நிதிசார்: 95.76

**மீளவரும் வரவு-செலவுத் திட்டத்தின் கீழான பராமரிப்பு**

மீளவரும் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் மின்சாரம், நீர் விநியோகம், தொலைபேசி, குளிரூட்டல் முறைமைகள், கணனி முறைமை, சாதனங்கள், கருவிகள் ஆகியன பராமரிக்கப்பட்டன.

# சமூக-பொருளாதார, சந்தை ஆராய்ச்சிப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி ரேகா மல்தெனிய

## 1. ஆண்டின் சிறப்பம்சம்

மீனவர்களினதும், அவர்களில் தங்கியிருப்பவர்களினதும், இணைந்த சேவைகளில் ஈடுபட்டுள்ள மக்களினதும் உட்பட மீன்பிடித்தல் சனசமூகங்களின் சமூக-பொருளாதார சேமநலன் மீதும், மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகளில் பாகுபாடுகளைக் குறைந்தபட்சமாக்குதல் உட்பட கைத்தொழிலின் பொருளாதார முன்னேற்றத்தின் மீதும் ஆராய்ச்சியை நடத்துவதற்கு சமூக-பொருளாதார, சந்தை ஆராய்ச்சிச் பிரிவு பொறுப்பாகவுள்ளது.

மூன்று ஆராய்ச்சி உத்தியோகத்தர் வெற்றிடங்களையும் (பொருளியலாளர், சமூகவியலாளர், புள்ளிவிபரவியலாளர்), ஓர் ஆராய்ச்சி உதவியாளர் வெற்றிடத்தையும் (விளையாட்டு ஆராய்ச்சிப் பணியாளர்) சாத்தியமானளவு மிக விரைவிலேயே நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பினை மேற்கொள்கின்ற எதிர்பார்ப்புடன் மனித சக்தியின் தீவிரமான பற்றாக்குறையுடன் ஆண்டுக்கான உத்தேசமான கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரிவுடன் இணைந்துள்ள மூன்று ஆராய்ச்சி உதவியாளர்கள் களத் தரவுச் சேகரிப்பில் முழுமையாக ஈடுபட்டிருந்தனர்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| செயற்திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ருபா மில்.) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் | வரை |
|---|---|---|---|---|---|
| சுனாமியின் துரித தாக்க மதிப்பீடு | ஐஸ் பொறிகள், குளிர் களஞ்சியப் படுத்தல், குளிருட்டல் ட்ரக்கள் ஆகிய மீன்பிடித்தல் கட்டமைப்பு மீதான சுனாமியின் தாக்கத்தின் மதிப்பீடு | திரண்ட நிதியம் | ஆர்.மல்தெனிய | ஜன. 2005 | ஏப். |
| மீனவப் பெண்களை அதிகாரமிளிப்பதன் மூலம் மீன்பிடித்தல் சனசமூகங்களின் சமூக-பொருளாதார உயர்ச்சி | மீன்பிடித்தலில் பெண்கள் - மீன்பிடிச் சனசமூகங்களின் சமூக-பொருளாதார அபிவிருத்தியில் பெண் உடலுழைப்பாளர்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல் | 584,000 | ஆர்.மல்தெனிய வை.டீ சில்வா | 2005/2006 | |
| சமூக-பொருளாதார கரிசனையின் மூலம் மீன்பிடித்தல் முகாமைத்துவம் | ஒன்றுடன் மற்றொன்று செயற்படுவதும், புலம்பெயர்வதுமான மீன் பிடித்தல்களின் சமூக-பொருளாதார மதிப்பீடுகள் | 334,000 | எச்.டி.விமலசேன | 2005 | |
| மீன் சந்தைப் படுத்தல் | இலங்கையர்கள் மத்தியில் கடலக மீன்களின் பாவனைக்கான மனவுணர்விலான தடைகள் | 314,00 | எல்.அமரலால் | 2005/2006 | |
| அறிவையும், விழிப்பியலையும் பரப்புதல் | மீன்பிடித்தல் ஆண்டு நூல் | 430,000 | பதிப்புச் சபை | 2005 | |

## 3. செயற்றிறனும், சாதனையும்

### கருத்திட்டம் 3.1: சுனாமி தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள்

பனிக்கட்டிப் பொறிகள், குளிர் களஞ்சியப்படுத்தல் மற்றும் ஆழ்குளிர் ட்ரக்குகள் போன்ற மீன்பிடித்தல் கட்டமைப்பு மீது சுனாமியின் தாக்கத்தை மதிப்பிடுவதை ஆய்வு நோக்கியிருந்தது. களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு ஆய்வு மட்டுப்பட்டிருந்தது.

அமைச்சுக்கு விதந்துரைப்புகளுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், மீன்களுக்கான கிராக்கியை மேம்படுத்துவதற்கும், சுனாமியின் பின்னர் உடனடியாகவே அழிந்த மீன் சந்தைப்படுத்தல் முறையை மீட்பிப்பதற்கும் கொழும்புக் கோட்டை, நுகேகொடை, மொறட்டுவை, கம்பஹா, மருதானை, மஹரகம, மற்றும் பிலியந்தல ஆகிய 7 பாரிய பாவனையாளர் பகுதிகளில் பெருமளவு மேம்படுத்தல் இயக்கங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

**கருத்திட்டம் 3.2: மீன்பிடித்தலில் பெண்கள் - மீன்பிடி சனசமூகங்களின் சமூக-பொருளாதார அபிவிருத்தியில் பெண் உடலுழைப்பாளர்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்**

மீன்பிடி உட்கட்டமைப்பு மீது சுனாமியின் துரித தாக்க மதிப்பீட்டிலும், சுனாமியின் பின்னர் அழிந்த மீன் சந்தைப்படுத்தல் முறையை மீட்பிப்பதற்கு மேம்படுத்தல் செயற்பாடுகளிலும் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தமையினால், கருத்திட்டத்தை ஆரம்பிப்பது தாமதமடைந்தது. களத்தில் தரவுச் சேகரிப்பு செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு ஆராய்ச்சி பணியாளரின் பற்றாக்குறையானது 2005 ஒக்ரோபரிலிருந்து பட்டதாரி ஆட்சேர்ப்பு திட்டத்தின் கீழ் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை முன்னேற்றம் மெதுவாகவே விளங்கியது. 'நாரா'வில் மூன்று மாதங்களுக்கு வேலை செய்த பின்னர் புதிதாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் பயிற்றுவிக்கப்பட்டு, களவேலைகளைப் பொறுப்பேற்பதற்கும், விழிப்பியல் திட்டங்களை நடத்துவதற்கும் குறித்தொதுக்கப்பட்டார். இது திட்டத்திற்கு ஊறுவிளைவித்தது.

ஆய்வுக் காலத்தின் போது, பின்வரும் மாவட்டங்களில் சமூக-பொருளாதார தரவுச் சேகரிப்பு முடிக்கப்பட்டுள்ளது: புத்தளம், கம்பஹா, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை. அத்துடன் அனுராதபுரத்திலும், பொலன்னறுவையிலும் பகுதியளவில் முடிக்கப்பட்டுள்ளது. மீன்பிடித்தலின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட சிறிய அளவிலான மீன்பிடித்தல் குடித்தனத்தின் வருமானம் பெரிதுமே குறைவானது என்பதுடன், வறுமை மட்டத்திற்கு நெருக்கமானது என்பதை ஆய்வு வெளிப்படுத்தியது. குடித்தன தலைவரினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் மட்டும் தமது அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு போதுமானதல்ல. ஆகவே, சிறு அளவிலான மீன்பிடித்தல் குடித்தனத்தில் வருமானத்தைத் தோற்றுவிப்பதில் பெண்களின் பங்கெடுப்பு முக்கியமானதாகும். எனினும், அவர்களின் கல்வி மட்டம் குறைவானது என்பதுடன், 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இரண்டாம் நிலை கல்விக்கு அப்பால் பங்கெடுக்கவில்லை என்பதுடன், ஏதாவது தொழில்நுட்பத் தொழில்களில் பயிற்சியையும் கொண்டிருக்கவில்லை. மீன்பிடித்தல் சனசமூகங்களில் உள்ள இளம் பெண்கள் பாரம்பரிய மீன்பிடித்தல் செயற்பாடுகளை விட, மீன்பிடித்தல் சாராத பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கே அதிகளவு அக்கறையைக் கொண்டுள்ளனர். இந்த தொழில்களில் அவர்கள் ஈடுபடுவதை மூலதனம் இன்மையும், பயில்திறன்கள் இன்மையும், சந்தையின்மையும் தடையை ஏற்படுத்துகின்றன. மீன்பிடித்தல் சனசமூகங்களின் முகாமைத்துவம் மற்றும் தொழிற்றுறை உரிமை பயில்திறன்கள் ஆகியனவற்றை முன்னேற்றுவதையும், நிதிசார் உதவியைப் பெறுவதில் வசதியளிப்பதும், முறைமையான வழியில் தமது உற்பத்திகளின் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதுமான கிராம மட்ட பெண்கள் தாபனங்களின் அல்லது கூட்டுச் சங்கங்களின் முன்னேற்றுவதையுமே எதிர்கால அபிவிருத்திச் செய்திட்டங்கள் நோக்காகக் கொண்டிருக்க வேண்டும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் உல்ஹிற்றியவிலும், அனுராதபுரம் கல்ஓயவிலும் இரு வாழ்வாதார அபிவிருத்திச் செய்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், நகரச் சந்தைகளுக்கு 'ஜாடி'யை தயாரிப்பதற்கும், அலங்காரப் பொருட்களைத் தயாரிப்பதற்கும் 80 இளம் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னேற்றம் (%) : பௌதீக: 80 நிதிசார்: 66

**கருத்திட்டம் 3.3: ஒன்றுடன் மற்றொன்று செயற்படுவதும், புலம்பெயர்வதுமான மீன்பிடித்தல்களின் சமூக-பொருளாதார மதிப்பீடுகள்**

வேறு ஒன்றுடன் மற்றொன்று செயற்படும் மீன்பிடித்தல்களுடன் அடிக்கடி தகராறில் ஈடுபடும் மூன்று மீன்பிடித்தல்களைக் கவனத்திற்கு எடுப்பதை ஆய்வு உத்தேசமாகக் கொண்டுள்ளது.

1. கற்பிட்டி குடாநாட்டில் அடிமட்ட நீண்ட தூண்டிலுக்கும், சிறிய சுருக்குப் பை பாரவலைக்கும் இடையிலான ஒன்றுடன் மற்றொன்று செயற்படுதல்

2. திருகோணமலைப் பகுதியில் கடற்கரையினீங்குகின்ற புலம்பெயர்வு மீன்பிடித்தல்களின் சமூக-பொருளாதார ஆய்வு

3. தெற்குக் கரையோரத்தில் சுருக்குப்பை பாரவலைக்கும், சிறு அளவிலான மீன்பிடித்தலுக்கும் இடையிலான ஒன்றுடன் மற்றொன்று செயற்படுதல்

கற்பிட்டி குடாநாட்டில் அடிமட்ட நீண்ட தூண்டில் மற்றும் சிறிய சுருக்குப்பை பாரவலை செயற்பாட்டாளர்களுக்கு இடையிலான ஒன்றுடன் மற்றொன்று செயற்படுதல், திருகோணமலை பகுதியில் கடற்கரையினீங்குகின்ற புலம்பெயர்கின்ற மீனவர்களின் சமூக-பொருளாதார ஆய்தல் ஆகிய விடய ஆய்வுகள் 1 மற்றும் 2 ஆகியன வெற்றிகரமான ஆயப்பட்ட அதே வேளை, தெற்குக் கரையோரத்தில் சுருக்குப் பை பாரவலைக்கும், சிறு அளவிலான மீன்பிடித்தலுக்கும் இடையிலான ஒன்றுடன் மற்றொன்று செயற்படுதல் என்ற விடய ஆய்வு 3இன் ஆய்வானது சுருக்குப்பை பாரவலைக்கான தொழிற்படுத்தப்பட்ட மீன்பிடித்தல் படகுகளில் பெரும்பான்மையானவை சுனாமியினால் சேதமடைந்தன அல்லது அழிந்தன என்பதனாலும்,

ஆண்டின் இறுதி வரை அவற்றின் பெரும்பாலானவை பதிலீடு செய்யப்படவில்லை என்பதனாலும் இடையூறை ஏற்படுத்தின. சிறிய சுருக்குப்பை பாரவலையின் (லைலா) தொழிற்பாடானது மூலவளங்கள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டிருந்ததை முதலாவது விடய ஆய்வு வெளிப்படுத்தியது. ஏனெனில் அவர்களது கூட்டங்கள் மும்மடிப்பு செதில் மீன்களில் பாரிய முட்டையிடும் கூட்டங்கள் என்பதுடன், அந்த பாரிய மீன் தொகுதிகளைப் பிடிப்பதில் அவர்கள் டைனமைற்றைப் பயன்படுத்தினார்கள். லைலாவுக்காக இயக்கப்படும் அடிமட்ட நீண்ட தூண்டில் மற்றும் கை தூண்டில் போன்ற வேறு சிறு அளவிலான பாரம்பரிய மும்மடிப்பை மீன்பிடித்தல்களின் பொதுவான இலக்கை இந்த இனங்கள் அடைவதனால், அவை இந்த பாரம்பரிய மீன்பிடித்தல்களின் வருமானப் பங்கீட்டின் மீது குறிப்பிடத்தக்களவில் தாக்கத்தினைக் கொண்டிருக்கும். அடிமட்ட நீண்ட தூண்டிலை விட லைலாவின் செயற்றிறன் மாசு உயர்வானது என்பதுடன், பிடித்தல் வீதங்கள் அடிமட்ட நீண்ட தூண்டில்களை விட 45இலிருந்து 1000க்கு மேற்பட்ட தடவைகள் உயர்வானதாகும். இப் போக்கின் விளைவாக மீன் பிடித்தலையும், வருமானங்களையும் பொறுத்தளவில் அடிமட்ட நீண்ட தூண்டில் இயக்குனர்கள் ஓரங்கட்டப்பட்டிருந்தனர்.

ஏப்ரலில் இருந்து ஓகஸ்ட் வரை மீன்பிடிக்கும் காலத்தின் போது திருகோணமலைக்கு புலம்பெயரும் கடற்கரையினீங்குகின்ற மீன்வர்களின் பிரதான தடையாக பிடித்தலின் சந்தைப்படுத்தல், மோசமான துறைமுக வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஆகியன விளங்குகின்றன. பருவகாலத்தின் போது, 400 - 450 கடற்கரையினீங்குகின்ற படகுகளும் 300க்கு மேற்பட்ட சிறிய அவுட்போட் மோட்டார் FRP படகுகளும் திருகோணமலைக்கு புலம்பெயர்வதுடன், அவை யாவுமே பிரதானமாக மஞ்சள் செட்டை தூனாவை இலக்குப்படுத்தி நீண்ட கயிறு மீன்பிடித்தலை மேற்கொள்கின்றன. ஏற்றுமதிச் சந்தைக்கு மஞ்சள் செட்டை தூனாவைக் கொள்வனவு செய்வதற்கு சில கொள்வனவாளர்களே இருப்பதனால், போட்டி குறைந்தபட்சமாகும். போக்குவரத்தில் ஈடுபடுபவர்களின் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக கொழும்புக்கு மீன்களின் போக்குவரத்தின் ஆகுசெலவு உயர்வானதாகும். கொட் குடா மீன்பிடித்தல் துறைமுகம் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்டிருப்பதுடன் ஆகவே, அவை சகலவற்றுக்கும் செயற்றிறனான சேவையை வழங்க இயலாமலிருக்கின்றது. இது வதிவிடத்திலானதும், புலம் பெயருகின்றதுமான மீன்வர்கள் மத்தியில் மீன்பிடித்தல் தகராறுகளை விளைவித்துள்ளது.

முன்னேற்றம் (%) : பௌதீக: 85 நிதிசார்: 65

### கருத்திட்டம் 3.4: இலங்கையர்கள் மத்தியில் கடலக மீன்களின் பாவனைக்கான மனவுணர்விலான தடைகள்

பாவனையாளர் விருப்பினை புரிந்து கொள்வதன் ஊடாக கடலக உடன் மீன்களின் சந்தைப்படுத்தலை உயர்த்தும் நோக்கத்துடன் இவ்வாய்வு பொறுப்பேற்கப்பட்டுள்ளது. கடலக மீன்கள் மீது பாவனையாளர் விருப்புரிமை மீதான தரவுச் சேகரிப்பு கொழும்பு, களுத்துறை, காலி, ஹம்பாந்தோட்டை, மற்றும் மாத்தறை ஆகிய 5 மாவட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளதுடன், இது 2006இலும் தொடரும். கருத்திட்டம் 2006இல் முடிக்கப்படும் என்பதனால், விதந்துரைப்புகள் இன்னும் வரையப்படவில்லை.

முன்னேற்றம் (%) : பௌதீக: 85 நிதிசார்: 99

### கருத்திட்டம் 3.5: மீன்பிடித்தல் ஆண்டு நூல்

தரவுகள் தொகுக்கப்பட்டு, பதிப்புச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆண்டு நூல் அச்சிடுதலுக்கு தயாராகவுள்ளது. தரவு தொகுத்தல் தாமதமாகியுள்ளது. ஏனெனில், தரவு சமர்ப்பிக்கும் நிறுவனங்களில் சில முடிவுறுத்தப்படும் புள்ளிவிபரங்களைத் தயாரிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளன.

முன்னேற்றம் (%) : பௌதீக: 85 நிதிசார்: 65

## 4. வெளியீடுகள்

1. மல்தெனிய, ஆர்., 2005, மீன்பிடித்தல் உட்கட்டமைப்பின் மீது சுனாமியின் தாக்கத்தின் மதிப்பீடு, மீன்பிடித்தல், நீர்வாழ் வளங்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை
2. மல்தெனிய, ஆர். 2005, மீன்பிடித்தல் மீது சுனாமியின் தாக்கத்தின் பெயரந்த நோக்கு, மீன்பிடித்தல் நீர் வாழ் ஆராய்ச்சி மீதான SIDA/NARA சர்வதேச செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை

### சமூக-பொருளாதார மதிப்புரை ஆய்வுகள்

1. மல்தெனிய, ஆர்., 2005 இலங்கையின் பொருளாதாரத்தில் மீன்பிடித்தல், இலங்கை உயர்தொழில்சார் சங்கங்களின் தாபனத்தின் 18ஆவது ஆண்டு அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை
2. விமலசேன, எச்.டி., 2005, இலங்கையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலையின் ஒரு மதிப்பாய்வு மீன்பிடித்தல் நீர் வாழ் ஆராய்ச்சி மீதான SIDA/NARA சர்வதேச செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை

3. விமலசேன, எச்.டி., 2005, இலங்கையின் தெற்குக் கரையோரத்தில் வளைய வலையினதும், மிதவை செவுள் வலை மீன்பிடித்தலினதும் பொருளியல்கள், SLAFARஇன் 11ஆவது விஞ்ஞான அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.

**மீன்பிடித்தலில் பெண்கள்**

1. மல்தெனிய, ஆர்., 2005 மீன்பிடித்தலிலும், நீர்வாழ் விருத்தியிலும் பால்நிலைப் பங்கெடுப்பு - தற்போதைய நிலையும், எதிர்காலப் பெறுபேறுகளும், அபிவிருத்தி மீது நிலைத்திருத்தல் மீன்பிடித்தல் முகாமைத்துவம் மீது நடத்தையின் நியதி மீதான BOBP/ NARA செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை

**மீன் சந்தைப்படுத்தல்**

1. மல்தெனிய, ஆர்., 2005, இலங்கையில் கடலக மீன்களினதும், மீன் உற்பத்திகளினதும் சந்தைப்படுத்தல்.
2. மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களினால் சந்தை அடைதலை மேம்படுத்துவதற்கும், வடக்கு, கிழக்கு மாகாணத்தின் புனருத்தாபனத்தினதும், புனரமைப்பினதும் அங்கமொன்றாக மீன்பிடித்தல் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்குமான ஆர்.மல்தெனியாவின் கருத்திட்டங்களின் வழிகாட்டலுக்கு அறிவு உதவிக்கான JBIC முன்னோடி ஆய்வின் அங்கமொன்றாக பசுபிக் ஆசிய வளங்கள் நிலையத்தின் வேண்டுகோளின் பேரில் இவ்வாய்வு நடத்தப்பட்டது.
3. மல்தெனிய, ஆர்., 2005, புறக்கோட்டை மத்திய மீன் சந்தையை புனரமைத்தல் மீது மீன்பிடி, நீர்வாழ் வளங்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை
4. மல்தெனிய, ஆர்., ஒரு வருடத்தின் பின்னர் சுனாமியினால் தாக்கப்பட்ட கடலக உடன்மீன் சந்தைப்படுத்தலிலிருந்து மீளுதல், FAOக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.

## විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | ජීඑෆ්/ජී/නාරා<br>/එෆ්ජී/05/01 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2006 මැයි දින. |

Head/Finance
Include this in the annual accounts report.
V... 2/6

NATIONAL AQUATIC RESOURCES AGENCY
CHAIRMAN'S OFFICE
02 JUN 2006
Colombo 15.

සභාපති ,
ජාතික ජලජ සම්පත් පර්යේෂණ සහ සංවර්ධන නියෝජිතායතනය.

ජාතික ජලජ සම්පත් පර්යේෂණ සහ සංවර්ධන නියෝජිතායතනයේ 2005 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ ගිණුම් පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14 (2) (සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

යථෝක්ත වාර්තාව මේ සමග එවා ඇත.

(එස්.සී. මායාදුන්නේ )
විගණකාධිපති.

පිටපත් : 1. ලේකම් - ධීවර හා ජලජ සම්පත් අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් හා ක්‍රම සම්පාදන අමාත්‍යාංශය

ஏஎப்/ஏ/நாரா/எப்ஏ /05/01 2006 மே 26

தலைவர்
தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம்

**தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் 2005 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் 2005 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடனும் 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல்வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவன அதிகாரச் சட்டத்தின் 32 (3) ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கியுள்ளன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் படியான விரிவானதோர் அறிக்கை காலக் கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

## 1.2 கணக்காய்வின் நோக்கெல்லை.

இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்

கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

2. கணக்குகள்

2.1. கணக்காய்வு அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனது சிறந்த தகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்கள் என்பவற்றின் பிரகாரம் எனது அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப் பட்டுள்ளவாறான விடயங்களால் எழும் சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர, இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் நிதிசார் கூற்றுக்களில் தரப்பட்டுள்ள குறிப்புக்களில் (1 முதல் 7 வரையான குறிப்புக்கள்) சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் 2005 திசெம்பர் 31 இல் உள்ளபடி முகவர் நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிசார் விளைவுகளது உண்மையானதும் நேர்மையானதுமான தோற்றத்தைத் தருகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 கணக்குகள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

ரூபா 4,740,501 பெறுமதியான விஞ்ஞானரீதியான பருவகாலச் சஞ்சிகைகள் கணக்குகளில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்குகளில் விடுபாடுகள்

சுனாமி அனர்த்தத்தினால் அழிவுற்று மீளாய்வாண்டில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 38,890,859 ஆன கிரயம் கொண்ட உடைந்து நொறுங்கிய உபகரணங்களின் பெறுமதி கணக்குகளுக்கு எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்குகளில் குறைத்துக் கூறல்களும் அதிகரித்துக் கூறல்களும்

உள்ளக நீர்வாழ் தாவரங்கள் அபிவிருத்திப் பிரிவில் காணப்பட்ட ஏறத்தாள ரூபா 5,133,000 ஆன மொத்த மீளமைத்தல் பெறுமதி கொண்ட உபகரணங்கள் சுனாமி அனர்த்தத்தினால் அழிவுற்றிருந்த போதிலும் அவற்றின் கிரயத்தினை கணக்குகளில் இருந்து நீக்கி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்குகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள்

நிறுவனத்தின் நிலையான சொத்தெனக் கணக்குகளுக்கு கொண்டு வரப்படாததும் அமைச்சிற்குச் சொந்தமானதுமான அச்சுப் பிரதி இயந்திரமொன்றை வழங்குனரொருவருக்கு கொடுத்து புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்கையில் அப் பழைய இயந்திரத்திற்காகக் கிடைக்கப் பெற்ற ரூபா 20,000 தொகை நிலையான சொத்து விற்பனையால் கிடைத்த இலாபம் எனக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப் பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 105 (ஈ) | - காணாமல் போன பண்டங்களின் மீளமைத்தற் செலவினமும் 25 % திணைக்களக் கட்டணமும் அறவிடப்படாமை |
| (ii) | நிதிப் பிரமாணம் 110 | - இழப்புகள் நட்டங்கள் பதிவேடு பேணி வரப்படாமை |
| (iii) | நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) | - ரூபா 20,000 இற்கு மேற்பட்டு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தமை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 372 (2) (இ) | - முற்பணத்தினை தீர்வு செய்வதற்கு கால தாமதம் செய்தல். |
| (v) | நிதிப் பிரமாணம் 880 | - பிணை செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை செலுத்தாமை |

(ஆ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள்

| | |
|---|---|
| 1998 ஏப்ரல் 03 ஆந் திகதிய 12/98 ஆம் இலக்கம் | - நேர்முகப் பரீட்சைக் கொடுப்பனவுகள் மிகையாக செலுத்தப்பட்டமை. |

(இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீ்ஈ 05 ஆம் இலக்கம் | - அங்கீகாரமின்றி படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டமை. |

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2005 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது முகவர் நிறுவனத்தின் செயற்பாடுகள் அதற்கு முன்னைய வருடத்தின் ரூபா 74,157,411 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 170,855,231 பற்றாக்குறையினை விளைவித்து நிதிசார் விளைவுகளில் ரூபா 96,697,820 பின்னடைவைக் காண்பித்தது.

### 3.2 செயலாற்றுகை

(அ) முகவர் நிறுவனத்தின் நிலையான சொத்துக்களுக்கு சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்களின் புத்தகப் பெறுமதி ஏறத்தாள ரூபா 122,511,769 ஆகுமென மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அழிவுக்குள்ளான அத்தியாவசிய ஆய்வு கூட உபகரணங்களை மீளமைப்பதற்கு மீளாய்வாண்டின் போது நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகவர் நிறுவனத்தின் உள்ளக நீர்வாழ் அபிவிருத்தி பிரிவினால் மீளாய்வாண்டின் போது ரூபா 7,927,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 10 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 2,791,317 மட்டுமே செலவிடப்பட்டிருந்ததுடன். குறித்த செயற்திட்டங்கள் எதனையும் ஆண்டின் போது முழுவதும் பூர்த்திசெய்வதற்கு முடியவில்லை.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2005 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் நூலகத்திற்கு பருவகால வெளியீடுகளை பெற்றுக் கொள்வதற்காக தனியார்துறை நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 142,784 இற்குரிய பருவகால சஞ்சிகைகள் எதுவும் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

3.4 **பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) ரூபா 267,877 பெறுமதி கொண்ட 33 களஞ்சிய உருப்படிகள் 5 வருடங்களுக்கு மேலாகவும் ரூபா 126,235 என பெறுமதி கணிக்கப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத 616 நிலையான சொத்து உருப்படிகள் 2 வருடங்களுக்கு மேலாகவும் களஞ்சியத்தில் பயன்படாதிருக்கக் காணப்பட்டன.

(ஆ) திருத்திப் பாவனைக் கெடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்காது இரண்டு மோட்டார் சைக்கில்கள் ஆறு வருடங்களுக்கும் மேலாகவும் ஒரு மோட்டார் சைக்கில் ஒரு வருடத்திற்கும் மேலாகவும் தலைமைக் காரியாலயக் களஞ்சியத்தில் பயனற்ற நிலையில் இருக்கக் காணப்பட்டன.

3.5 **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

(அ) ''கடோல்கலை'' பிராந்திய ஆய்வு மன்றத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 100 அடி நீளமான எல்லை மதிற்சுவர் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க நியமத்திற்கமைவாக காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் கூட ரூபா 134,470 ஆன மொத்தஒப்பந்தப் பணத் தொகையும் ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த ஒப்பந்தம் தொடர்பிலேட்பட்ட பிணைக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு இன்னும் ரூபா 149,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கடோல்கலையில் நண்டு வளர்ப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 503,215 செலவிடப்பட்டிருந்ததோடு, அந்த நிர்மாணிப்புப் பணிகள் முழுவதுமாகக் கைவிடப்பட்டிருந்தன.

(இ) கடன்பட்டோரில் ஏறத்தாள ரூபா 301,278 அறவிடப்பட முடியாதவை என இனங்காணப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்திலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களினால் கொடுப்பனவு செய்யாப்படாதிருந்த ரூபா 180,081 ஆன கூட்டு மொத்த இடர்

கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மின்சாரக் கட்டணங்களை உரிய திகதியில் செலுத்தாதிருந்தமை காரணமாக மீளாய்வாண்டில் தாமதக் கட்டணமாக ரூபா 24,700 செலுத்தப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் காலத்துக்குக் காலம் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணங்கள்
(ஆ) நிர்மாணிப்புச் செலவினம்
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) களஞ்சியம்

ஒப்பம் :- ( எஸ். சீ. மாயாதுன்னே)
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*MS*

## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை

### 2005 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான, செலவினக் கணக்கு

| வரவுகள் | | 2005 | 2004 |
|---|---|---|---|
| அரசாங்க உதவுதொகை | (1) | 84,843,000.00 | 67,200,000 |
| சில்லறை வருமானம் | (2) | 11,625,350.13 | 11,292,547 |
| வட்டி வருமானம் | (3) | 338,904.12 | 381,650 |
| நிலையான சொத்துக்களின் விற்பனையிலிருந்து இலாபம் | | 20,000.00 | - |
| ஏனைய உதவுதொகைகள் | (4) | 870,180.21 | 2,433,689 |
| | | 97,697,434.46 | 81,307,886 |
| **செலவினம்** | | | |
| **நிருவாகச் செலவினங்கள்** | | | |
| ஆளணியினரின் வேதனங்கள் | (5) | 67,135,554.24 | 53,547,634 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 3,445,874.48 | 9,394,479 |
| பிரயாணமும், உணவுப் படியும் | (6) | 265,298.43 | 243,363 |
| கட்டணம் - சபைக் கூட்டங்கள் | | 54,000.00 | 69,000 |
| வேறு கட்டணங்களும், படிகளும் | | 787,224.80 | 635,496 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | | 3,685,022.04 | 1,641,896 |
| வாகனங்களுக்கான எரிபொருள் | (6) | 764,656.64 | 660,678 |
| பதவியணியினரின் பிரயாணமும், கேள்வுக் கட்டணங்களும் | | 2,699,506.30 | 3,030,906 |
| வாகனங்களுக்கான குத்தகை கொடுப்பனவு | | - | 183,540 |
| விளம்பரப்படுத்தல் கட்டணம் | | 307,406.50 | 331,689 |
| காகிதாதிகள் | (7) | 631,626.23 | 634,894 |
| தபால் கட்டணம் | | 98,245.00 | 79,735 |
| பொழுதுபோக்கு | | 189,974.75 | 163,522 |
| பதவியணியினர் சேமநலன் | | 152,784.40 | 236,071 |
| பதவியணியினர் பயிற்சி | | 194,588.50 | 107,213 |
| தொலைபேசி | (8) | 1,030,677.41 | 975,598 |
| வெளிநாட்டுப் பிரயாணம் | | 881,324.58 | 522,778 |
| காப்புறுதி | | 150,636.33 | 82,520 |
| பழுதுபார்த்தலும், பராமரித்தலும் | (9) | 10,582,621.97 | 7,966,485 |
| கணக்காய்வுக் கட்டணம் | | 71,093.00 | 82,186 |
| வங்கிக் கட்டணங்கள் | | 211,187.08 | 175,836 |
| இரசாயனங்களும், பாவனைக்குரியவையும் | (10) | 208,573.95 | - |
| சில்லறைகள் | (11) | 649,745.76 | 382,817 |
| அச்சிடுதல் | | 48,748.70 | 81,760 |
| மின்சாரக் கட்டணங்கள் | (6) | 7,817,763.14 | 8,395,838 |
| நீர் கட்டணங்கள் | (6) | 2,563,960.88 | 2,203,252 |
| சோலைவரிகளும், வரிகளும் | | 594,000.00 | 660,000 |
| விசேட கருத்திட்ட செலவினங்கள் | (4) | 870,180.21 | 2,433,689 |
| ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகுசெலவு | (12) | 21,148,429.14 | 20,944,833 |
| மெதுவாகப் பெயரும் விடயங்களுக்கான ஏற்பாடு | | | |
| சுனாமியினால் சேதமடைந்ததும், தொலைந்ததுமான விடயங்கள் | | 96,890,859.00 | 120,297 |
| மதிப்பிறக்கத்திற்கான ஏற்பாடு | (13) | 44,421,102.28 | 39,474,294 |
| | | 268,552,665.74 | 155,465,297 |
| வரவுகளுக்கு மேலான செலவினத்தின் மேன்மிகை | | (170,855,231.28) | (74,157,411) |

## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை
## 2005 டிசம்பர் 31இல் உள்ளவாறு ஐந்தொகை

**சொத்துக்கள்**

| **நடைமுறை சாரா சொத்துக்கள்** | **குறிப்பு** | **2005** | **2004** |
|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் | (13) | 1,239,419,618.39 | 301,515,540 |
| | | 1,239,419,618.39 | 301,515,540 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| 31.12.2004இல் உள்ளவாறு கையிருப்பு | (14) | 2,311,484.51 | 862,698 |
| கடன்தருனர்களும், முற்கொடுப்பனவுகளும் | (15) | 2,208,938.14 | 3,460,766 |
| வைப்புக்கள் | (16) | 807,250.00 | 807,250 |
| முற்பணங்கள் | (17) | 934,667.96 | 2,026,820 |
| பதவியணியினர் கடன்கள் | (18) | 9,179,213.04 | 8,018,427 |
| கையிலும், வங்கியிலும் பணம் | (19) | 18,268,489.51 | 2,267,175 |
| | | 33,710,043.16 | 17,443,136 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1,273,129,661.55 | 318,958,676 |
| **ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனமும், ஒதுக்கும்** | | | |
| மூலதன உதவு தொகை (அரசாங்கம்) | (20) | 577,833,380.00 | 528,865,380 |
| மீள்மதிப்பிட்டு ஒதுக்கு | (21) | 1,267,097,871.69 | 306,770,949 |
| வெளிநாட்டு மான்யம் | (22) | 206,381,615.30 | 144,371,574 |
| உள்நாட்டு மான்யம் | (23) | 25,433,230.64 | 25,920,138 |
| ஆராய்ச்சி மான்ய நிதியம் | (24) | 14,650,862.20 | 5,760,076 |
| உசாவுகை நிதியம் | (25) | 222,853.34 | 1,382,139 |
| பின்போடப்பட்ட வருமானம்-வருமானம் தொடர்பான மான்யம் | | 1,250,814.62 | - |
| செலவினததின் திரண்ட மேன்மிகை வருமானத்தை மிஞ்சிய செலவினம் | (26) | (858,041,249.22) | (728,709,003) |
| | | 1,234,829,378.57 | |
| **நடைமுறை சாரா பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 28,489,647.00 | 26,793,761 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன் வழங்குனர்களும் திரண்ட செலவினமும் | (27) | 9,810,635.98 | 7,803,662 |
| மொத்த ஒப்புரவும், பொறுப்புக்களும் | | 1,273,129,661.55 | 318,958,676 |

(ஒப்பம்)
கே.ஹப்புதந்திரி
தலைவர்

(ஒப்பம்)
யொஷான் சத்தசேன
பணிப்பாளர் நாயகம்

(ஒப்பம்)
எம்.டி.சேனாரத்ன
பதில் தலைவர் நிதி

# தேசிய நீரியல் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை

## குறிப்பிடத்தக்க கணக்கிடல் கொள்கைகள்

## 2005 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு

### 1. பொதுவான கணக்கிடல் கொள்கைகள்

1.1 பொதுவான ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கிடல் கொள்கைகளினதும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கணக்கிடல் நியமங்களினதும் பிரகாரம் சரித்திரபூர்வ ஆகுசெலவு சமவாயத்தின் கீழ் வருடாந்த நிதிசார் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்களுக்கு மீள்-மதிப்பிடல் செய்யப்பட்டமை தவிர, சாட்டப்பட்டுள்ள பெறுமதிகள் மூலத்திலான மீள்-மதிப்பிடப்பட்ட தொகைகளாகும். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பாதிக்கும் பணவீக்க காரணிக்கு சீராக்கல் செய்யப்படவில்லை.

1.2 தற்போதைய சமர்ப்பணத்திற்கு இணங்குவதற்காக அவசியப்படுமிடமெல்லாம் முற்போந்த ஆண்டுகளுக்கான ஐந்தொகை எண்ணிக்கைகளும், வாசகங்களும் மீள்-ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.
தயவுசெய்து குறிப்பு இல.10ஐப் பார்க்க.

### 1.3 வெளிநாட்டு நாணயங்களை மாற்றுதல்

சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் செயற்படுத்தப்பட்ட தினத்தன்று நிலவும் செலாவணி வீதத்தில் சகல வெளிநாட்டு பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களும் மாற்றப்பட்டுள்ளன.

### 1.4 வரிவிதிப்பு

வருமான வரி கொடுப்பனவுக்கு முகாமையானது பாத்திரவாளி அல்ல என்பதனால் வருமான வரிப் பொறுப்புக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை.

### 1.5 அனுப்புப்பொருட் பட்டியல்கள்

FIFO அடிப்படையை ஏற்றுக்கொண்டு அனுப்புப்பொருட் பட்டியல்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட வருட முடிவுகளில் மதிப்பிடப்பட்ட கையிருப்புப் பெறுமதிகள் வருமாறு:

| | | 2005 | 2004 |
|---|---|---|---|
| (அ) | காகிதாதி | 303,038 | 257,566 |
| (ஆ) | பொருள் (பராமரிப்பு) | 1,005,494 | 702,816 |
| (இ) | இரசாயனங்களும், கண்ணாடிப்பண்டங்களும் | 20,016 | 228,589 |
| (ஈ) | மான்யமாக கிட்டிய சூழலியல்-ஒலிக் கடதாசிகள் | 1,250,815 | |
| | | 2,579,362 | 1,188,971 |

மான்யமாகக் கிட்டிய ரூபா 1,316,646இல் பயன்படுத்தப்படாத ரூபா 1,250,815 பெறுமதியிலான சூழலியல் ஒலிக் கடதாசிகள் 31.12.2005இல் உள்ளவாறு காட்டப்பட்டுள்ளதுடன், நுகர்விலான பெறுமதியானது சில்லறை வருமானமாகக் கருதப்பட்டுள்ளது.

### 1.6 நிலையான சொத்துக்கள்

அதன் உத்தேசமான உபயோகத்திற்கு, அவற்றின் செயல்நிலைமைக்கு சொத்துக்களைக் கொண்டுவருவதில் ஏற்படுகின்ற ஏதாவது இடைநேருகின்ற செலவினங்களுடன் சேர்த்து கொள்வனவுகளின் அல்லது நிருமாணத்தின் ஆகுசெலவே நிலையான சொத்துக்களின் ஆகுசெலவாகும்.

அவசியப்பட்ட அல்லது முகாமையின் பணத்திட்டத்தை மேற்கொள்வதற்கு அவசியப்பட்ட நியமங்களுக்கு அல்லது

சொத்துக்களின் பயனுள்ள ஆயுள்காலத்தை அதிகரிப்பதற்கு மேம்படுத்தப்பட்டுள்ள வசதிகளின் வழிவகைகளினால் நிரந்தரமான தன்மையொன்றில் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும், நீடிக்கும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஏற்படுகின்ற செலவினம் மூலதன செலவினமாகக் கருதப்பட்டுள்ளது.

## 1.7 நடந்துகொண்டிருக்கும் வேலை (நிருமாணம்)

நடந்து கொண்டிருக்கும் மூலதன நிருமாணத்தின் பணியானது வேலை முடிக்கப்பட்டதன் சதவீதத்தினதும், அமைவிடத்தில் உள்ள பொருட்களின் ஆகுசெலவுடன், அத்தகைய பொருட்களுக்கு 'நாரா'வினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் அவற்றுடன் சேர்த்து திட்டமிடலினதும், மேற்பார்வையினதும் ஆகுசெலவினதும் அடிப்படையின் மீது மதிப்பிடப்பட்டுள்ளது.

## 1.8 மதிப்பிறக்கக் கொள்கை

நேர்கோட்டு முறையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் ஆகுசெலவின் அல்லது மீள்-மதிப்பீட்டின் மீது மதிப்பிறக்கத்திற்கான ஏற்பாடு கணக்கிடப்பட்டுள்ளது. கொள்வனவு வருடத்தில் மதிப்பிறக்கம் வழங்கப்படுவதுடன், விற்பனை ஆண்டில் முழு வருடத்தின் மதிப்பிறக்கம் வழங்கப்படுகின்றது. இறையிலி மற்றும் குத்தகையிலான காணிக்கு மதிப்பிறக்கம் வழங்கப்படுவதில்லை.

மதிப்பிறக்கத்தின் வீதங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| i. | காணி | ஒன்றுமில்லை |
| ii | கட்டிடம் | 10.00% |
| iii. | இயந்திராதிகள் | 10.00% |
| iv. | சாதனங்கள் | 10.00% |
| v. | கணனிகளும், பிரின்டர்களும் | 33.33% |
| vi. | மோட்டார் வாகனங்கள் | 20.00% |
| vii. | தளபாடங்களும், பொருத்திகளும் | 10.00% |
| viii. | நூலகப் புத்தகங்கள் | 10.00% |
| ix. | மீன் தொட்டிகள் | 10.00% |
| x. | எந்திரவியல் சாதனங்களும், கருவிகளும் | 10.00% |
| xi. | கப்பற்படை தலைமைக் காரியாலய அட்டணைகள் | 10.00% |
| xii. | படகுகளும், கப்பல்களும் | 10.00% |

## 1.9 (அ) ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகுசெலவு

ஆராய்ச்சியின் தன்மை அத்தகையதாக இருப்பதனால் குறிப்பான ஆராய்ச்சி செலவினத்தின் விளைவாக எதிர்காலப் பொருளாதார நன்மைகள் அடையப்படும் என்பதையிட்டு போதிய உறுதித்தன்மை இல்லை என்பதனால் காலத்தின் போது செலவினங்களாக ஆராய்ச்சி ஆகுசெலவுகள் அக்காலத்தின் போது இடம்பெற்றவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**(ஆ)** அபிவிருத்தி ஆகுசெலவு

அபிவிருத்தி ஆகுசெலவுகள் அவை ஏற்படுகின்ற காலத்தின் போது இலாப, நஷ்ட கணக்குக்கு சுமத்தப்படுகின்றன. ஏனெனில் அபிவிருத்தி ஆகுசெலவின் விளைவாக வியாபார முயற்சிக்கு எதிர்கால பொருளாதார நன்மையை அளிக்கும் என்பதையிட்டு போதிய உறுதித்தன்மை இல்லை.

## 1.10 கிடைக்க வேண்டியவைகள்

ஏதாவது அறிவிடப்பட முடியாத தொகைகளுக்கு போதியளவு ஏற்பாட்டினைச் செய்யாமல் அவற்றின் அடையத்தக்க பெறுமதிகளில் கிடைக்க வேண்டியவைகள் பிரதிபலிக்கின்றன.

## 1.11 மீளளிக்கத்தக்க வைப்புக்கள்

'நாரா'வுடன் செய்யப்பட்ட பலதரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து கிட்டிய வைப்புக்கள் மூலத்திலான பற்றுச்சீட்டினை வாடிக்கையாளர் சமர்ப்பிக்கும் போது மட்டுமே மீளளிக்கப்படுகின்றன. எனினும், கணக்கு உள்ள வைப்புக்கள் மூன்று வருடங்களைக் கொண்ட காலத்தினுள் மீளளிக்கப்படாவிட்டால், இலாப, நஷ்டக் கணக்குக்கு கைமாற்றப்படுகின்றது.

## 2. பொறுப்புக்களும், ஏற்பாடுகளும்

### 2.1 இளைப்பாற்று நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை

1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடைகள் சட்டத்தின் கொடுப்பனவின் பிரகாரம், ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடைக்கான பொறுப்பு ஒவ்வொரு வருட சேவைக்கு 1/2 மாதச் சம்பளத்தின்படி ஐந்து வருடங்களைக் கொண்ட தொடர்ச்சியான சேவையை முடிக்கும் போதே எழுகின்றது.

நிரந்தர தொழிலின் திகதியிலிருந்து பணிக்கொடைக்கான ஏற்பாடு திரண்டுள்ளது.

### 2.2 இருப்புக்கள்

5 வருடங்களுக்கு மேலாகவும், அதற்கு மேலும் களஞ்சியத்தில் தொடர்ந்திருக்கும் சகல மெதுவாகப் பெயரும், வீணான, மற்றும் பயன்படுத்தப்படாத விடயங்களுக்கு முழு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3 முற்பணங்களும், பணியாளர் கடன்களும்

அறவிடல் சந்தேகத்திற்குரிய சகல முற்பணங்களுக்கும், பணியாளர் கடன்களுக்கும் முழு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### 2.4 ஏற்பாடுகள்

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டுக்கு பின்வருமாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் மதிப்பிறக்கம் | 44,421,104 |
| (ஆ) | இளைப்பாற்று பணிக்கொடை | 3,445,874 |
| (இ) | மெதுவாகப் பெயரும், வீணான, பயன்படுத்தப்படாத இருப்பு | (58,397) |
| (ஈ) | முற்பணங்களும், பணியாளர் கடன்களும் | (361,829) |
| | | **47,446,752** |

### 2.5 அவசரகாலப் பொறுப்புக்கள்

பின்வரும் ஆளணியினர் முகாமைக்கு எதிராக முறையே தொழில் மன்றிலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் நடவடிக்கை எடுத்துள்ளனர்:

திரு.டி.ஜே.கே.பாலபட்டபெந்தி
திரு.டி.எ.கருணாசேன

மனுதாரருக்கான நிவாரணத்தின் கொடுப்பனவு முகாமைக்கு எதிராக மிகவும் குறைவானதாகும். ஆகவே, மதிப்புரையின் கீழுள்ள ஆண்டுக்கு கணக்கில் ஏற்பாடு செய்யப்படவில்லை.

### 2.6 மூலதன ஒப்புரவுகள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | பிரினெக்ஸ் என்டர்பிரைசஸ் | 4609 | 45,504.00 |
| | | 4500 | 577,677.00 |
| (ஆ) | குவாலிட்ரோன் (பிறைவேற்) லிமிற்றெற் | 4541 | 78,959.00 |
| | | 4531 | 266,386.00 |
| | | 4452 | 250,953.00 |
| | | 4640 | 62,606.00 |
| (இ) | அபான்ஸ் லிமிற்றெற் | 4604 | 155,000.00 |
| | | 4603 | 359,961.00 |
| (ஈ) | எம்ஸோ லிமிற்றெற் | 4550 | 2,479,308.00 |
| | | 4546 | 2,276,844.00 |
| | மொத்தம் | | 6,553,198.00 |

# 2005ஆம் ஆண்டுக்காக 26.05.2006 திகதியிடப்பட்ட அதன் அறிக்கையில் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட கருத்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

## 2.2 கணக்குகள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கிடல் கொள்கைகள்கள்

விஞ்ஞானரீதியிலான பருவகால வெளியிடுகளின் கொள்வனவுக்கான நிதியங்களின் ஏற்பாடு வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தில் மூலதன செலவினத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளதுடன், இந்த விஞ்ஞானரீதியிலான பருவகால வெளியீடுகள் வேறு வகையிலான பருவகால வெளியீடுகளைப் போலன்றி பெருமளவு வருடங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இந்தப் பருவகால வெளியீடுகள் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

உங்கள் வழிகாட்டலின்படி கணக்குகள் தயாரிக்கப்பட்டால், மீளவரும் ஏற்பாடுகளின் கீழ் மூலதன ஏற்பாடுகளைக் கணக்கிடுவதன் கஷ்டத்திற்கு நாம் முகங்கொடுக்க வேண்டிவரும்.

### 2.2.2 கணக்குகளில் தவறுகைகள்

கருத்துரைகளுடன் உடன்படப்படுகின்றது. கணக்குகள் தயாரிக்கப்பட்ட நேரத்தில், "சுனாமி" அழிவின் காரணமாக அழிந்த சாதனங்களின் உபயோகிக்க முடியாத பொருள் பெறுமதியை மதிப்பிடுவதற்கு கஷ்டமாகவிருந்தது. எனினும், இது 2006இன் கணக்குகளில் சீரமைக்கப்படும்.

### 2.2.3 கணக்குகளில் குறைவான கூற்றுக்களும், மிகையான கூற்றுக்களும்

கருத்துரைகளுடன் உடன்படப்படுகின்றது. எனினும், இது 2006இன் கணக்குகளில் சீரமைக்கப்படும்.

### 2.2.4 கணக்குகளில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

கருத்துரைகளுடன் உடன்படப்படுகின்றது. எனினும், இது 2006இன் கணக்குகளில் சீரமைக்கப்படும்.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

#### (அ) நிதிசார் ஒழுங்குவிதிகள்

**(i) நி.ஒ.வி. 105 (ஈ): இழக்கப்பட்ட பொருட்களின் பதிலீடு பெறுமதி அறவிடாமையும், 25% திணைக்களக் கட்டணங்களும்**

நிதிசார் ஒழுங்குவிதிகளின் படி 25% திணைக்கள கட்டணங்களை அறவிடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ii) நி.ஒ.வி. 110: இழப்புக்களினதும், சேதங்களினதும் பதிவேடு ஒன்றைப் பராமரிக்காமை**

களஞ்சியத்தில் பராமரிக்கப்பட்ட பதிவேட்டின் இழப்புக்களும், சேதங்களும் 28.12.2004இல் இடம்பெற்ற "சுனாமி" அழிவின் காரணமாக அழிந்தது. எனினும், புதியதொரு பதிவேட்டினை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(iii) நி.ஒ.வி. 371 (2)(ஆ): ரூபா 20,000க்கு விஞ்சிய முற்பணங்களின் கொடுப்பனவு**

நடைமுறையில், ஆராய்ச்சி, அபிவிருத்தி தாபனமொன்றாக, ரூபா 20,000 கொண்ட மட்டுப்படுத்தலினுள் களச் செய்திட்டங்களைப் பராமரிப்பதற்கு சில உள்ளார்ந்த செயற்பாட்டுக் கஷ்டங்கள் உள்ளன. ஆகவே, பொது திறைசேரியின் அங்கீகாரம் கொடுப்பனவுக்குரிய முற்பணத்தின் எல்லையை அதிகரிப்பதற்கு ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(iv) **நி.ஒ.வி. 371 (2)(இ): முற்பணங்களை இணக்குவதில் தாமதம்**

நிதிசார் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(v) **நி.ஒ.வி. 880: பிணைப்பணத்தை சமர்ப்பிப்தற்கு கோரப்படுபவர்களினால் பிணைப்பணம் சமர்ப்பிக்கப்படாமை**

சம்பந்தப்பட்ட ஊழியர்களிடமிருந்து பிணைப்பணத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கைகள்**

**1998 ஏப்ரல் 03இன் இல. 12/98- நேரடிப் பரீட்சைக்கான படிகளின் மிகையான கொடுப்பனவு**

இது உடனடியாகச் செயற்படும் விதமாக ஏற்கனவே இணக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுத் தரங்களுக்கு நியமனங்கள்/பதவியுயர்வுகள் செய்யப்படும் போது நேர்முகப் பரீட்சை சபைகளில் சேவையாற்றுவதற்கு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். இச் சேவைக்கு தற்போதைய கொடுப்பனவு வீதம் பெரிதுமே போதுமானதல்ல. ஆகவே, இச் சுற்றறிக்கையின் முறையே பிரிவு (i) மற்றும் பிரிவு (ii) க்கு இணங்க நாளொன்றுக்கு ரூபா 1000 மற்றும் ரூபா 500 கொண்ட கொடுப்பனவுகளுக்கு தாபனங்கள் பணிப்பாளரிடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

**(இ) பொது நிதிச் சுற்றறிக்கைகள்**

**2000 ஜனவரி 11இன் PF/PE 05- அங்கீகாரமின்றி படிகளின் கொடுப்பனவு**

வருடாந்த சரிபார்த்தலில் சம்பந்தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு ஆளுனர் சபையின் அங்கீகாரத்துடன் படிகளின் கொடுப்பனவு செய்யப்பட்டது. ஏனெனில் வேறு வகையிலான தாபனங்களுடன் ஒப்பிடுகையில் பலதரப்பட்ட சிக்கலிலான ஆராய்ச்சி உபகரணங்களின் வகைகளை அவர்கள் சரிபார்க்க வேண்டியிருந்தது.

இதற்கு மேலதிகமாக, தமது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாகவும், தொடர்பாடல் மீது பொதுசன முறைப்பாடுகளை மேற்கொள்ளுமுகமாகவும் வேலைச் சுமையைக் கருத்திற்கெடுத்து தொலைபேசி இயக்குனரின் வரவின்மையின் போது பதில் தொலைபேசி இயக்குனர்களுக்கு பணிப்பாளர் நாயகத்தினால் படிகளின் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், படிகளின் இக் கொடுப்பனவுகள் உடனடியாகச் செயற்படும் வகையில் நிறுத்தப் பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தோதான அங்கீகாரம் பெறப்படும்.

## 3. நிதிசார் மற்றும் தொழிற்படுத்தல் மதிப்புரை

### 3.1 நிதிசார் முடிவுகள்

### 3.2 செயற்பேறு

(அ) சுனாமி அழிவின் காரணமாக சேதமடைந்த நிலையான சொத்துக்களைப் பதிலீடு செய்வதற்கு ஒரு தொகை நிதிப்படுத்தல் முகவராண்மைகளிலிருந்தும், பொது திறைசேரியிலிருந்தும் நிதியங்களை முகவராண்மை கோரியுள்ளது. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது இக் காரணத்திற்காக போதிய நிதியங்கள் பெறப்படவில்லை.

(ஆ) பின்வரும் காரணங்களின் நிமித்தம் உள்ளக நீர்வாழ்வள, நீர் வாழ் விருத்திப் பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட கருத்திட்டங்கள் முடிக்கப்படவில்லை.

1. ‘சுனாமி’ அழிவின் காரணமாக சேதமடைந்த ஆய்வுகூடங்கள் பழுதுபார்க்கப்பட்டதுடன், 2005 பிற்பகுதியில் சேதமடைந்த சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மீன் நோய்களின் அடையாளங் காணலுக்கான PCR ஆய்வுகூடம் 2007 வரை பழுதுபார்க்கப் படவில்லை.

2. சுனாமியின் காரணமாகச் சேதமடைந்த வாகனங்கள் 2005 பிற்பகுதியில் பழுதுபார்க்கப்பட்டன. அது வரை, களப் பயணங்களுக்கு வாகனங்களைப் பெறுவது கஷ்டமாகவிருந்தது. இதன் பிரகாரம், அட்டவணைப்படுத்தப்பட்டவாறு, களப் பணி மேற்கொள்ளப்பட முடியவில்லை.

3. வட-மேல் மாகாணத்தில் பாதுகாப்பு சூழ்நிலையின் காரணமாக வானிலிருந்து "கடல் பாளங்கள்" வளர்ப்பு *மீன்களைச்* சேகரிப்பதற்கு கஷ்டமாக இருந்தது. இதன் பிரகாரம், சோதனைகள் நடத்தப்பட முடியவில்லை.

4. வாகனங்கள் இன்மையின் காரணமாக 2 பிராந்திய ஆராய்ச்சி நிலையங்களில் (ரேகாவ மற்றும் கடோல்கெலே), கருத்திட்டங்களுக்கு தடை ஏற்பட்டது. இப் பிராந்திய ஆராய்ச்சி நிலையங்களுடன் வாகனங்கள் இணைந்திருக்கவில்லை.

5. “சுனாமியின்” சூழல் தாக்கத்தின் காரணமாக, கடல்பாசியும், நன்னீர் இறால் குஞ்சுகளும் பாதிப்படைந்துள்ளன. இதன் பிரகாரம், கடல்பாசி வளர்ப்பு மற்றும் நன்னீர் இறால் மீதான 2 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட முடியவில்லை.

6. “சுனாமியின்” காரணமாக IARADஇல் உள்ள சகல கணனிகளும் அழிந்துள்ளன. இருந்த போதிலும், 2005 நொவம்பரில் புதிய கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆகவே, கருத்திட்டங்களின் இலக்கின் சாதனையை இது பாதித்தது.

7. வளர்ப்புச் சோதனைகளில் பயன்படுத்தப்படும் உட்பிரதேசத்திற்குரிய/பிறநாட்டுக்குரிய அலங்கார மீன் வளர்ப்பு “சுனாமியின்” காரணமாக முழுமையாக அழிந்தது. இவற்றின் மீள்சேகரிப்பு சிறிது காலத்தை எடுத்ததுடன், இது அலங்கார மீன் வளர்ப்பு கருத்திட்டத்தைப் பாதித்தது.

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கருத்துக்களுடன் உடன்படப்படுகின்றது. விநியோகஸ்தரிடமிருந்து 17.02.2006 அன்று 15% மேலதிகக் கட்டணத்துடன் கொடுப்பனவாகிய தொகையை அறவிடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, வெளியீட்டாளர்களிடமிருந்து நேரடியாக பருவகால வெளியீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக அவசியமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 3.4 வீணான, குறைத்துப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

(அ) நடைமுறையில், மொத்தமாகக் கொள்வனவு செய்வதன் காரணமாக, சில பொருட்கள் களஞ்சியத்தில் வீணான நிலையில் கிடந்தன. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட கையிருப்புக்களின் ஒன்றுதிரட்டலே இதுவாகும். இப் பொருட்களைக் கிரமமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், பயன்படுத்தப்பட முடியாத ஏதாவது மீதி விற்றொழிக்கப்படும்.

(ஆ) திருகோணமலையில் உள்ள சுற்றுலா விடுதியினதும், சுனாமி எச்சரிக்கை நிலையத்தினதும் பராமரிப்பாளருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் ஒதுக்கப்பட்டுள்ளது. வாகன ஓட்ட உத்தரவுப்பத்திரம் இன்மையின் காரணமாக, பைசிக்கிளின் உபயோகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. வாகன ஓட்ட உத்தரவுப்பத்திரம் பெறப்படும் போது பைசிக்கிளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2007ஆம் ஆண்டின் ஏனைய மோட்டார் சைக்கிள்களை விற்றொழிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

# ஆண்டறிக்கை 2005

## பொருளடக்கம்

**பிரிவு** **பக்க இல.**


பொது நிருவாகம்............ 01

சூழல் ஆய்வுகள் பிரிவு............ 11

மீன்பிடித் தொழில்நுட்பப் பிரிவு............ 16

நீர்நிலையியல் பிரிவ - தேசிய நீர்நிலையவியல் அலுவலகம்............ 18

உள்ளூர் நீரியல் வளங்கள், நீரியல் விருத்திப் பிரிவு............ 20

தகவல் தொழில்நுட்பப் பிரிவு............ 29

நூலக, தகவல் பிரிவு............ 32

கடல்சார் உயிரியல் வளங்கள் பிரிவு............ 35

சமுத்திரவியல் பிரிவு............ 41

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பப் பிரிவு............ 47

சேவை, தொழிற்படுத்தல் பிரிவு............ 53

சமூக-பொருளாதார, சந்தை ஆராய்ச்சிப் பிரிவு............ 56

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள்............

## 3.5 அடையாளம் காணப்பட்ட நஷ்டங்கள்

(அ) நிருமாணத்திற்கு பொறுப்பான ஊழியர்களுக்கு எதிராக ஏற்கனவே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கடோகெலேவின் நண்டு வளர்ப்பு அலகின் நிருமாணத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 160,347.75 கொண்ட மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. தொகையை மீள் கொடுப்பனவு செய்யுமாறு கோரப்பட்ட போது ஒப்பந்தக்காரர் அதை கொடுப்பனவு செய்யாததினால் அவருக்கு முற்பணங்களின் மிகைக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், பொறுப்பான உத்தியோகத்தர்களை அடையாளம் காண்பதற்கு விசாரணை நடத்தப்படும்.

(இ) கருத்துக்களுடன் உடன்படப்படுகின்றது. நிதிசார் ஒழுங்குவிதிகளுக்கும், ஆளுனர் சபை அங்கீகாரத்திற்கு அமைவாக அறவிடப்பட முடியாத கடன்தருனர்கள் மீதிகளின் பெறுமதியை அழிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) அண்ணளவாக 15 வருடங்களாக அறவிடப்பட முடியாத தவறுகையிலான இடுக்கண் கடன் மீதிகளை அறவிடுவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அறவிடலின் சாத்தியம் சந்தேகத்திற்குரியதாகும். ரூபா 11,235 மீதியை அறவிட முடியாது என பதிவழிப்பதற்கான அங்கீகாரத்தை ஆளுனர் சபை வழங்கியுள்ளது. பெருமளவு காரணங்களின் நிமித்தம் எழுகின்ற ஏனைய அறவிடப்பட முடியாத மீதிகள் (அதாவது, நீதிமன்றக் கட்டளைகள், அறிவித்தல் இன்றி தொழிலில் இருந்து விலகுதல்) நிதிசார் ஒழுங்குவிதிகளின் பிரகாரமும், ஆளுனர் சபை அங்கீகாரத்துடனும் பெறுமதி அழிக்கப்படுவதற்காக கரிசனைக்கு எடுக்கப்படும்.

(உ) திறைசேரியிலிருந்து நிதியங்களைப் பெறுவதில் தாமதத்தின் காரணமாக மின்சார சிட்டைகளுக்கான கொடுப்பனவுகள் பின்போடப்பட்டன. இதன் பிரகாரம் தண்டப் பணம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 4. முறைகளும், கட்டுப்பாடுகளும்

கருத்துக்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டன. குறிப்பாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு விசேட கவனம் செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**National Digitization Project**

***National Science Foundation***

Institute : National Aquatic Resources Research and Development Agency(NARA)

1. Place of Scanning : Crow Island, Colombo 15
2. Date Scanned : 2017/05/25
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd,
   Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

   Name : Chamith

   Signature : ...........................

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Chief Librarian

Name : B G Sunethra Kariyawasam

Signature : ...........................

Date : 2017/05/25

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*